REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk / ThinakaranLK
2023 ஓகஸ்ட் 28 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 91 இல. 203 | Monday 28, August, 2023 | 24 பக்கங்கள் | 50/-

### இரண்டாம் தவணைக்கான
## 2ஆம் கட்ட கல்வி நடவடிக்கை இன்று ஆரம்பம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அரசாங்க மற்றும் அரசாங்க அனுசரணையுடனான பாடசாலைகளின் இரண்டாம் தவணைக்கான இரண்டாம் கட்ட கல்வி 06

**கண்டி நகர்ப்புற பாடசாலைகளுக்கு இன்று முதல் 03 தினங்கள் விடுமுறை**

## கிழக்கில் பெருமளவு காணிகள் முறையற்ற வகையில் பங்கீடு
### தன்னிச்சையான பங்கீடுகளை தவிர்ப்பதற்கு ஜனாதிபதி தலைமையிலான கூட்டத்தில் ஆராய்வு



(லோரன்ஸ் செல்வநாயகம்)

கிழக்கு மாகாணத்தில் பெருமளவு காணிகள் தன்னிச்சையாக பல்வேறு தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் மத வழிபாட்டு தலங்களுக்காக முறையற்ற விதத்தில் காணிகள் வழங்கப்பட்டுள்ளமையும் தெரிய வந்துள்ளது .

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் மகாவலி 06

### நாடு தொடர்ந்தும் பொருளாதார வளர்ச்சிகாண
## ஜனாதிபதி ரணில் இன்னும் 10, 15 வருடங்கள் ஆள வேண்டும்

(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)

நாட்டின் பொருளாதாரம் மேலும் பலமடைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன்னும் பத்து அல்லது 15 வருடங்கள் ஆட்சி செய்ய வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் 06



## இந்தியா, சீனாவுடன் சுமுகமான உறவை இலங்கை பேணி வருகிறது
### எந்தவிதமான பதற்றமும் இல்லையென்கிறார் அலி சப்ரி



இந்தியா மற்றும் சீனாவுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை எவ்வித பதற்றங்களுமின்றி, கையாள்வதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் வருகை, சீன ஆய்வுக்கப்பலின் வருகை என்பன நிகழ்ச்சி நிரலிடப்பட்டதன் அடிப்படையில் நடைபெறுவதால், எவ்விதமான குழப்பங்களும் இல்லையென்றும் அவர் சுட்டிக்காட்டினார். அதேநேரம், இலங்கைக்குள் போர் மற்றும் ஆய்வுக் கப்பல்கள் விமானங்களின் வருகைகளின் போது வெளிப்படைத் தன்மை 06

### சுமார் 08 இலட்சம் குடும்பங்களுக்கு முதற்கட்டமாக
# 'அஸ்வெசும' நலன்புரி கொடுப்பனவு இன்று ஆரம்பம்
### பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட நடவடிக்கை



**நாளையோ அல்லது நாளை மறுதினமோ பணத்தை பெறலாம்**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு இன்று முதல் வழங்கப்படவுள்ளதுடன் 08 இலட்சம் குடும்பங்களுக்கு இன்று முதற்கட்டமாக அந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்காக இனங்காணப்பட்டுள்ள 15 இலட்சம் குடும்பங்களில், 08 இலட்சம் குடும்பங்களுக்கு இன்று கொடுப்பனவு வழங்கப்படுகிறது. அவர்களுக்கான கொடுப்பனவு வங்கியில் வைப்பிலிடப்படும் என்றும், நாளையோ அல்லது நாளை மறுதினமோ பயனாளிகள் அதனைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் கொடுப்பனவு ஜூலை மாதத்துக்கானது என்றும் தவறான தகவல்களை வழங்கி இந்தக் கொடுப்பனவை எவராவது பெற்றுக் கொள்வார்களானால் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், அத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை மீண்டும் அரசாங்கம் அறவிட நேரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் 06

### 13.5% அல்லது அதற்கு குறைவான அளவில்
## வங்கிகளின் வட்டி வீதங்களை குறைத்து மத்திய வங்கி சுற்றறிக்கை வெளியீடு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் சாதாரண கடன் வட்டி வீதத்தை அறவிடுமாறு உத்தரவு வழங்கி, மத்திய வங்கி விசேட சுற்றறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

1949இன் 58 ஆம் இலக்க நிதி சட்டத்தின் கீழ் மத்திய வங்கி இந்த சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது. அனுமதி பெற்ற அரச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் நூற்றுக்கு 13.5 வீதம் அல்லது அதற்கு குறைவான அளவில் வட்டி வீதத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென மத்திய வங்கி இதன் மூலம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய வங்கி மேற்படி சுற்றிக்கையை கடந்த 25ஆம் திகதி வெளியிட்டுள்ளதுடன் அது தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு வங்கிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

நிதி நிலைமை கணிசமான அளவு தளர்த்தப்பட்டுள்ள நிலையிலும் சில நிதி நிறுவனங்கள் வட்டி வீதங்களை தொடர்ந்தும் மிக அதிகமானதாகவே பேணி வருவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அதனைக் கவனத்திற் கொண்டே மேற்படி சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய அடகுக் கடனுக்கான வட்டி வீதம் 18 வீதமாக குறைக்கப்பட வேண்டும் 06



**03** புதுப்பிக்கத்தக்க
### மின் சக்தி மூலம் 70 வீத மின்சாரத் தேவை பூர்த்தி

## திருமண வைபவத்தில் நடனமாடிய யுவதி திடீர் சுகயீனத்தால் மரணம்



திருமண வைபவமொன்றில் நடனமாடிக்கொண்டிருந்த அழகிய யுவதியொருவர், சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

மீகொட உட கெவத்த பிரதேசத்தில் வசித்து வந்த ஹொரண படுவிட்ட பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் விற்பனை அதிகாரியாக பணிபுரிந்து வந்த மஞ்சரி ஆதித்யா பெர்னாண்டோ என்ற 25 வயதுடைய திருமணமாகாத யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த யுவதி, தாம் பணியாற்றிய நிறுவனத்தைச் 06

### இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகள்
## சீனக் கப்பலின் வருகைக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி



இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக இலங்கை வரவுள்ள சீனக் கப்பலுக்கு, பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி நிறுவனத்துடன் (நாரா) இணைந்து இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக 'ஷி யான் 6' என்ற சீனக் கப்பல் இலங்கை வருகிறது. இக்கப்பலின் வருகைக்கு நாரா மற்றும் வெளிவிவகார அமைச்சின் கோரிக்கையின் பேரில் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

## மருந்துகள் பற்றாக்குறைக்கு இரு வாரங்களுக்குள் தீர்வு
### சுகாதார அமைச்சு நேற்று அறிவிப்பு



நாட்டில் பற்றாக்குறையாக உள்ள மேலும் 50 வகையான மருந்துகள், அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இறக்குமதி செய்யப்படுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி மருந்து தட்டுப்பாடு ஓரளவு கட்டுப்படுத்தப்படுமென சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. தற்போது மருத்துவ விநியோகத்தில் 230 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. 06

## சினமன் குழுமத்தில் பணிபுரிபவரெனக் கூறி வெளிநாட்டில் வேலை தருவதாக மோசடி
### Cinnamon Group, பொதுமக்களுக்கு எச்சரிக்கை




சினமன் குழுமத்தில் பணிபுரிவதாக கூறி வேலை வாய்ப்புகள் பெற்றுத் தருவதாக, பண மோசடியில் ஈடுபட்டு வரும் நபர் தொடர்பில் மலேசியாவை தளமாகக் கொண்ட Cinnamon Group, பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மலேசியாவை தளமாகக் கொண்ட புகழ்பெற்ற அமைப்பான Cinnamon Group, இலங்கையின் கொழும்பில் இடம்பெற்றுவரும் இம்மோசடி தொடர்பாக அண்மையில் அறிந்துள்ளதாக தெரிவித்துள்ளது. சினமன் குழுமத்துடன் இணைந்திருப்பதாகக் கூறிக்கொள்ளும் 06

### கட்டுநாயக்க விமான நிலையத்தில்
## அதி உயர் தொழில் நுட்பத்தில் தொடர்பாடல் கட்டமைப்பு
### அமைச்சர் நிமல் ஆரம்பித்துவைப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டின் விமான வலயப் பிரதேசத்தின் பாதுகாப்பு மற்றும் விமான சேவைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் விமான சேவைகள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினால் கட்டுநாயக்க சர்வதேச 06

### 1980 முதல் 1990ஆம் ஆண்டு வரை
## 154 அரசியல்வாதிகளுக்கு 698 துப்பாக்கிகள் விநியோகம்
### இதுவரை திரும்பப் பெற முடியவில்லை




1980 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்ட 698 துப்பாக்கிகள், மீளக் கையளிக்கப்படவில்லையென பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த 10 வருட காலப்பகுதியில் 154 அரசியல்வாதிகளுக்கு 698 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாக 06

## இரு பஸ்கள் மோதி விபத்து 13 பேர் படுகாயம், நால்வர் கவலைக்கிடம்



வரக்காபொல, தன்னோவிட்ட பிரதேசத்தில் இரண்டு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில், 13 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிறுத்தப்பட்டிருந்த பஸ் ஒன்றுடன் மற்றுமொரு பஸ் நேற்று முன்தினம் (26) இரவு மோதியே, இவ்விபத்து இடம்பெற்றது. வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ்வண்டி, 06

## மகோற்சவத்தில் மாம்பழமொன்று 1,62,000 ரூபாவுக்கு ஏல விற்பனை

(வவுனியா விசேட நிருபர்)



வவுனியா உக்குளாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ திருவிழாவில், மாம்பழம் ஒன்று 01 இலட்சத்து 62,000 ரூபாய்க்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

உக்குளாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மகோற்சவ உற்சவத்தின் ஆறாம் நாள் மாம்பழ திருவிழாவிலே, இவ்வளவு விலைக்கு இம் மாம்பழம் ஏலம்போனது. 06

## கடந்த 08 மாதங்களில் 62 சூட்டு சம்பவங்கள் 39 கொலைகள் பதிவு



நாடு முழுவதும் 2023 ஆரம்பத்திலிருந்து இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 39 பேர் கொல்லப்பட்டு, மேலும் 30 பேர் படு காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆண்டின் ஆரம்பத்திலிருந்து நாடு முழுவதும் 62 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன, அவற்றில் பெரும்பாலானவை ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள உலக குழுக்களால் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. சில துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தனிப்பட்ட தகராறு மற்றும் சொத்துப் பிரச்சினை காரணமாக இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும், பெரும்பாலான துப்பாக்கிச் சூடு மற்றும் கொலைகள், தங்கள் வாடிக்கையாளர்களுக்காக வேலை செய்யும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளால் மேற்கொள்ளப்பட்டதை அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

## இலங்கையிலிருந்து கடத்தப்பட்ட 09 கிலோ தங்க கட்டிகள் பறிமுதல்
### திருச்சி பொலிஸார் அதிரடி

**05 கோடியே 89,66,000 இந்திய ரூபா என மதிப்பீடு**



(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

திருச்சி அருகே பஸ் வண்டியில் கடத்தி வரப்பட்ட 05 கோடியே 89 இலட்சத்து 66 ஆயிரம் இந்திய ரூபா பெறுமதியான 09 கிலோ தங்கக்கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன . இது தொடர்பாக தம்பதி உட்பட 06

## பொலிஸாரை விரட்டியவர் இன்று அவர்களிடமே தஞ்சம்
### கஜேந்திரகுமாரை கிண்டல் செய்த உதய கம்மன்பில



பொலிஸாரை விமர்சித்து அரசியல் செய்து வந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., தற்போது பொலிஸாரைத் தனது கொழும்பு வீட்டுக்கு வரவழைத்து பாதுகாப்புக்கு நிறுத்தியுள்ளாரென புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

அத்துடன், இது கஜேந்திரகுமாருக்கு வெட்கக்கேடான விடயம் எனவும் கம்மன்பில கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், வடக்கில் தமிழ் மக்கள் 06



# நகர்வலம்



## 30 வருட காலத்தின் பின்பு

# ஹம்பாந்தோட்டையில் கடும் வரட்சி; 6200 குடும்பங்கள் குடிநீரின்றி அவதி

### சந்திரிக்கா குளத்திலிருந்து நீரை பெற்றுக்கொடுக்க தென் மாகாண ஆளுநர் நடவடிக்கை





**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

சுமார் 30 வருட காலத்தின் பின்பு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலையால் 6200 குடும்பங்கள் தற்பொழுது பாரிய குடிநீர் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் தங்காலை, பெலியத்தை, வீரகெடிய, திஸ்ஸமகாராமை மற்றும் லுனுகம்வெஹெர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள மக்களே அதிகளவில் குடிநீர் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி மாவட்டத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள வரட்சி நிலைமை தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில் தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலீ கமகே தலைமையில் மாகம் ருஹூனு நிர்வாக கட்டடத் தொகுதியில் (25) நடைபெற்றது.

பொலிஸ் பாதுகாப்புடன் குடிநீர் தேவைகளுக்கு மாத்திரம் சந்திரிக்கா குளத்திலிருந்து கட்டகடுவ குளம் வரையில் 31 கிலோ மீற்றருக்கு நீரைப் பெற்றுக்கொடுப்பதென வும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் நீரை விநியோகிப்பதற்கு போதியளவு நீர் பௌஸர்கள் இன்மையினால் அவற்றையும் மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களினுடாக பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

தற்பொழுது குடிநீர் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ள பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கும் தென் மாகாணத்திலுள்ள ஏனைய மாவட்டங்களிலிருந்து நீர்த்தாங்கிகளை பெற்றுக் கொடுப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயத்திற்கு தேவையான நீரை தடையின்றி பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் தென் மாகாண ஆளுநர் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். இந்த நிகழ்வில் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளர் எச். பீ. சுமனசேகர, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கே. சீ. டீ. சில்வா, மாவட்ட அரச நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# கொழும்பு போதனா வைத்தியசாலைக்கு மருந்து வகைகள் அன்பளிப்பு

### தமிழ் கனேடியன் வோல்க் அமைப்பு வழங்கி வைப்பு



**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலைக்கு தமிழ் கனேடியன் வோல்க்2022 (Tamil Canadian Walk) அமைப்பு ஒரு தொகுதி மருந்து வகைகளை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இது தொடர்பில் வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வின் போது இந்த அமைப்பின் இணைத் தலைவரான டாக்டர் மயில் வாகனம் மயிலாசன் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சாகரி கிரிவன்தெனியவிடம் மருந்து வகைகளைக் கையளித்தார். இந்த அன்பளிப்பில் பல லட்சம் ரூபா பெறுதியான ஏழு வகையான மருந்துகள் உள்ளடங்கியிருந்தது. இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் பொது மக்களின் நன்மை கருதி மருந்துப் பொருட்களை அன்பளிப்பு செய்தமை தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பாளர் தமிழ் கனேடிய அமைப்புக்கு நன்றியும் பாராட்டையும் தெரிவித்துள்ளார். பிரபாஜினி மயிலாசன், வைத்தியசாலை பிரமுகர்களும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.



நாட்டின் தற்போதைய வரட்சி நிலை காரணமாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவும் மாளிகாவத்தை மஸ்ஜித் சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்த "ஸலாதுல் இஸ்திஸ்கா" மழை வெண்டி தொழுதல் நேற்று (27 ) காலை மாளிகாவத்தை பி. டி. சிறிசேன மைதானத்தில் நடைபெற்றது. தொழுகையை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க அர்கம் நூர் ஆமித் நடத்துவதை படத்தில் காணலாம்.

படம் : ருஸைக் பாரூக்

# குளியாப்பிட்டி தினகரன் நிருபர் சலாம் காலமானார்



குளியாப்பிட்டி தினகரன் நிருபராகவும் வானொலி செய்தியாளராகவும் நீண்ட காலம் சேவையாற்றிய ஒய்வு பெற்ற ஆசிரியர் எ. எல். எ. சலாம் நேற்று (27) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் காலமானார். அன்னார் நீண்ட காலமாக சுகயீனமுற்றிருந்ததாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர். அன்னாரது ஜனாஸா நேற்று அஸர் தொழுகையை தொடர்ந்து கெக்குனுகொல்ல ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும்

### அநுராதபுரம் மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**



இலங்கையை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான சட்டங்கள் கொண்டு வரப்பட்டு அனைவரது மனப்பாங்கும் மாற்றப்பட வேண்டும் என அநுராதபுர மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு பெரண்டினா கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட "ஸ்மார்ட்" வகுப்பறையை திறந்து வைக்கும் நிகழ்வில் (17) கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அனைத்து இலங்கையர்களையும் முதலில் தங்கள் கடமையை செய்யுமாறு நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். எப்போதும் அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற வகையில் எமது அணுகுமுறையை நாம் மாற்றிக் கொண்டு முன்னேற வேண்டும். வளர்ந்த நாடுகள் கடுமையான சட்டங்களை அமுல்படுத்தி தங்கள் அணுகு முறையை மாற்றிக் கொண்டன.

நெடுஞ்சாலையில் குப்பையை வீசினால், சாலையில் எச்சில் துப்பினால் அபராதம் என்ற சட்டத்தை சிங்கப்பூர் போன்ற நாடு முதலில் கடுமையாக அமுல்படுத்தியது. சில நாட்களுக்குப் பிறகு, நாட்டு மக்களின் மனநிலை இதற்கு மாறியது. அதனால் இவ்வாறான கடுமையான சட்டங்களை அமுல்படுத்த வேண்டும். இதற்காக எமது அணுகுமுறையை மாற்ற வேண்டுமானால் முதலில் குழந்தைகளிடம் இருந்து அது ஆரம்பிக்கப்பட வேண்டும். இங்கு மாவட்ட செயலாளர் என்ற வகையில் சிறுவர்களுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் இவ்வாறான வசதிகளை வழங்கிய அவர்களின் பெறுமதியான சேவைக்காக பெரண்டினா நிறுவனத்திற்கு நன்றி கூறுகின்றேன் என்றும் அனைவரும் இருக்கும் கஷ்டங்களை எல்லாம் வரமாக எடுத்துக் கொண்டு, ஒரு நாடாக சிந்தித்து, நமது அணுகுமுறையை மாற்றிக்கொண்டு, வளரும் நாடாக இல்லாமல், வளர்ந்த நாடாக கட்டியெழுப்புவோம் என்றார்.

பெரண்டினா நிறுவனம் அநுராதபுரம் மாவட்டத்தின் பல பாடசாலைகளுக்கு "ஸ்மார்ட்" வகுப்பறைகளை அண்மையில் கையளித்தது. அநுராதபுரம் மாவட்டத்தில் 1,554 பாடசாலை மாணவர்கள் உட்பட நாட்டிலுள்ள 16,000 பாடசாலை மாணவர்களுக்கும் இலவச புத்தகத் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக பெரண்டினாவின் பொது முகாமையாளர் இங்கு தெரிவித்தார். இப்புத்தகங்களின் பெறுமதி 40 மில்லியன் ரூபா எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 'தெநுவர நெவத்தும' இரண்டு நூல்கள் கொழும்பில் வெளியீடு

இலங்கையில் இடம்பெற்ற 30 வருட பயங்கரவாத போரின் உண்மை அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சட்டத்தரணி டிக்கிரி சுபாஷினி விப்லர் எழுதிய 'தெநுவர நெவத்தும' 2 மற்றும் 3 ஆகிய இரண்டு நூல்கள் ஓகஸ்ட் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு பொது நூலகத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரியான நூலாசிரியர் டிக்கிரி சுபாஷினி, பல அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றியுள்ளதோடு 2007 ஆம் ஆண்டு ஜெர்மனிக்குச் சென்று அங்கு அவர் சமூக பாதுகாப்பு சட்டங்கள் குடிவரவு சட்டம் மற்றும் குற்றவியல் விஞ்ஞானம் ஆகியவற்றை கற்று அந்நாட்டின் அரசியல்வாதியாக செயற்பட்டு வருகின்றார்.

# சட்டத்தரணி ரிப்லான் அன்வர் சீனன்கோட்டையில் காலமானார்

**பேருவளை விசேட நிருபர்**



வியங்கல்லையை பிறப்பிடமாகவும் சீனன்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சட்டத்தரணி ரிப்லான் அன்வர் தனது 51ஆவது வயதில் நேற்று முன்தினம் இரவு (26) சீனன்கோட்டை இல்லத்தில் காலமானார்.

மதுகம நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக கடமையாற்றும் இவர் மதுகம சட்டத்தரணிகள் சங்கத்திலும் அங்கத்தவராக பதவி வகித்து வந்தார்.

காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் முரீத்களில் ஒருவரான இவர், நபவிய்யா இளைஞர் அமைப்பு, நபவிய்யா அவசர மருத்துவ சிகிச்சை சேவைப்பிரிவு ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காகவும் காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் முன்னேற்றத்திற்காகவும் அர்ப்பணிப்போடு சேவையாற்றினார்.

வியங்கல்லையைச் சேர்ந்த முன்னாள் அதிபரும் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான மர்ஹூம் எம். இஸட்.எம் அன்வர் மற்றும் மர்ஹூமா நபீஸா தம்பதிகளின் புதல்வரான இவர், 3 பிள்ளைகளின் தந்தையாவார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று 27ம் திகதி மாலை அஸர் தொழுகையின் பின் சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய ஜூம்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், அரசியல்பிரமுகர்கள், பொதுமக்கள், சட்டத்தரணிகள் என பலரும் கலந்துகொண்டனர்.





ஆஷா மீடியா ஏற்பாடு செய்திருந்த 'Top 100' இலங்கையர் எனும் விருது வழங்கும் விழா BMICH மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரபல இஸ்லாமிய கீத பாடகி நூர்ஜஹான் மர்சூக் தனக்குரிய விருதுதினை புரவலர் ஹாசிம் உமர், இனிய நந்தவனம் ஆசிரியர் சந்திரசேகரன், தினகரன் பிரதமர் ஆசிரியர் செந்தில்வேலவர் ஆகியோரிடம் இருந்து பெற்றுக் கொள்வதை காணலாம்.

படம் ருசைக் பாரூக்



காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் இரண்டாவது நினைவு தினத்தையொட்டி ஜனாதிபதியின் பொதுமக்கள் ஒருங்கிணைப்பு பணிப்பாளர் துசித ஹல்லொலுவவினால் புண்ணிய நிகழ்வு நடாத்தப்பட்டு, ராஜகிரியவில் அமைந்துள்ள விக்டோரியா இல்லத்தில் மருத்துவ பராமரிப்பு பெறுபவர்களுக்கு இரவு உணவு பெற்றுக்கொடுக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

# புகையிரத செயற்பாடுகள் தொடர்பில் தெளிவூட்டல்

**ஏ.எஸ்.எம்.ஜாவித்**



பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு புகையிரத சேவைகளின் செயற்பாடுகளை தெளிவூட்டல் தொடர்பானமாதிரி புகையிரத நிலையங்கள் கண்காட்சி ஒன்றினை மொடல் ரயில்வே அசோசியேசன் ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கையில் உள்ள 8 ரயில் நிலையங்களின் மாதிரிகள் இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

கொழும்பு சிற்றி சென்டரில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெற்ற குறித்த மொடல் ரயில் நிலையங்களை வடிவமைத்த பார்த்தீபன். தர்சன் மற்றும் அமெரிக்காவை சேர்ந்த டேவிட் ஒஸ்ட்வேல்ட் ஆகியோர் விளக்கமளித்தனர்.



ஹம்பாந்தோட்டை மாவட்ட வியாபார ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டு இன்று தனது 30 வருட பூர்த்தியினை கொண்டாடுகிறது. அதனை முன்னிட்டு ஹம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்திருந்த இரத்தான நிகழ்வில் கலந்துகொண்டோரை படத்தில் காணலாம்.

படம்;. ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஓகஸ்ட் 28 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.47
லுஹர் - 12.13
அஸர் - 03.22
மஃரிப் - 06.21
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆவணி 12
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## குருந்தூர் மலை சர்ச்சைக்கு நிரந்தரத் தீர்வு அவசியம்

### இந்து,பௌத்த தலங்களை அமைப்பதே தீர்வு

**பேராசியரியர். சன்ன ஜயசுமன MP தெரிவிப்பு**

குருந்தூர் மலையில் சர்ச்சைகள் நீடித்துக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளும் அதிகரித்து வருவதால், இதற்கு நிரந்தரமான தீர்வொன்றை பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் சன்ன ஜயசுமன முன்மொழிந்துள்ளார்.

அவருடைய முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

குருந்தூர் மலை,தொல்பொருள் பகுதியாக பிரகடனப்படுத்துப்பட்டுள்ளது. அதற்கான சான்றாதாரங்கள் பல காணப்படுகின்றன. ஆகவே அந்தப் புராதன இடத்தை பேணுவது மிகவும் முக்கியமானது.

எனினும், இப்பகுதியில் பௌத்தர்கள் மற்றும் இந்துக்கள் வழிபாடுகளைச் செய்து வந்ததாக வரலாற்றின் அடிப்படையில் குறிப்பிடப்படுகிறது. ஆகவே, தற்போதைய நிலைமையில், இந்த

06

## கண்டி மாநகரில் பல்வகை போக்குவரத்து நிலையம், உலகவங்கியின் உதவியில் பணிகள்

### முகாமைத்துவ காரியாலத்தை திறக்கும் நிகழ்வில் அமைச்சர் உரை






கண்டி மாநகரின் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக, சகல போக்குவரத்து முறைகளையும் ஒருங்கிணைத்து, குட் ஷெட்டுக்கு முன்பாக பல்வகை போக்குவரத்து நிலையம் அமைக்கப்படவுள்ளது.இத்திட்டம் ஏழு வருடங்களாக கலந்துரையாடப்பட்டுள்ள நிலையில், இதன் நிர்மாணப் பணிகள் உலக வங்கியின் உதவியின் கீழ் இவ்வருடம் முடிவடைவதற்குள் ஆரம்பிக்கப்படுமென வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கண்டி நகர புகையிரத நிலையம் மற்றும் கண்டி கண்காணிப்பு முகாமைத்துவ காரியாலய தொகுதியை கடந்த (26) காலை திறந்து வைக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

புகையிரத திணைக்களத்தின் நேரடி

06

## புதுப்பிக்கத்தக்க மின் சக்தி மூலம் 70 வீத மின்சாரத் தேவை பூர்த்தி

### 2030 க்குள் 06 மின் உற்பத்திகளை ஆரம்பிக்க திட்டம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

புதுப்பிக்கத்தக்க மின் சக்தி மூலம் 2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் மின்சாரத் தேவையில் 70 வீதத்தை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக எரிசக்தி மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் ஆறு புதுப்பிக்கத்தக்க மின் சக்தி உற்பத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான முன்னேற்றம் தொடர்பில் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் தலைமையில் மின் சக்தி எரிசக்தி அமைச்சில் அது தொடர்பில் மதிப்பாய்வு நடவடிக்கை இடம் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேற்படி புதுப்பிக்கத்தக்க மின் சக்தி திட்டங்களுக்காக அரசாங்கத்தின் அனுமதியை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அதற்கான காணியை கையகப்படுத்தல், மின் இணைப்புகளுக்கான நடவடிக்கைகள், மின் கொள்வனவு ஒப்பந்தங்கள் மற்றும் அதற்கான நிதி தேவைகள் தொடர்பிலும் இந்த மதிப்பாய்வின் போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## முட்டை இறக்குமதி தொடர்ந்தும் முன்னெடுப்பு

### அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

முட்டைகள் இறக்குமதியை அடுத்த மூன்று மாதங்களுக்கு தொடர்வதற்கு ஏற்கனவே அனுமதி கிடைத்துள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

அதன்படி முட்டை இறக்குமதி தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார். முட்டை இறக்குமதி மூலம் சந்தையில் முட்டை தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்த முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, நாளாந்தத் தேவையான ஒரு மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்ய, அரச வர்த்தக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதன் தலைவர் ஆசிரி வலிசுந்தர குறிப்பிட்டார்.

2024 வரவு செலவுத் திட்ட யோசனைகள்:

## அமைச்சுக்களின் செலவு தொடர்பில் மீளாய்வு இன்று முதல் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வரவு செலவு திட்டம் 2024 ஆம் ஆண்டுக்கான அமைச்சுகளின் செலவுகள் சம்பந்தமான யோசனை தொடர்பில் மீளாய்வு செயற்பாடுகள் இன்று முதல் ஆரம்பமாவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சின் செயலாளர் தலைமையில் அமைச்சில் இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடலிலேயே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க மேற்படி மீளாய்வு நடவடிக்கைகள் இன்று 28 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் செப்டம்பர் 10 ஆம் திகதி வரை இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வரும் நிலையில் இம்முறை வரவு செலவுத் திட்ட யோசனைகள் மிகவும் சவாலானவை என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், அமைச்சுகளின் செலவினங்கள் தொடர்பில் தீர்க்கமாக ஆராய்ந்து தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## லேண்டர் விண்கலம் தரையிறங்கிய இடம் 'சிவசக்தி' பாயின்ட் பெயர் சூட்டப்படும்

### பிரதமர் நரேந்திர மோடி அறிவிப்பு

**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**

சந்திராயன் 03 இன் விண் வெ ளித் திட்டத்தினூடாக நிலவில் லேண்டர் விண்கலம் தரையிறங்கிய இடத்துக்கு 'சிவசக்தி பாயின்ட்' (Shiv Shakti Point') எனப் பெயர் சூட்டப்படுவதாக பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

சந்திரயான்3 திட்டத்தின் வெற்றிக்கு காரணமான இஸ்ரோ விஞ்ஞானிகளை வாழ்த்துவதற்காக பிரதமர் நரேந்திர மோடி வெளிநாட்டிலிருந்து நேரடியாக சனிக்கிழமை காலை பெங்களூரிலுள்ள இஸ்ரோ மையத்துக்குச் சென்றார். விஞ்ஞானிகள் அனைவரையும் பிரதமர் வெகுவாகப் பாராட்டினார். பிரதமர் மோடிக்கு லேண்டர் எடுத்தப் புகைப்படங்கள் பரிசாக வழங்கப்பட்டன. பிரதமரிடம் லேண்டர் விண்கலனின் மாதிரியை திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் வழங்கினார். அவருக்கு பிரதமர் மோடி கைகொடுத்து வாழ்த்து தெரிவித்தார்.





பின்னர் அங்கு விஞ்ஞானிகள் மத்தியில் பிரதமர் நரேந்திர மோடி பேசியபோது : "நிலவில் கால் பதித்த 04ஆவது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. இஸ்ரோ விஞ்ஞானிகளின் கடின உழைப்புக்கும், அர்ப்பணிப்புக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.உங்கள் மத்தியில் இன்று இருப்பதன் மூலம் எனக்கு தனிப்பட்ட மகிழ்ச்சி ஏற்படுகிறது. நான் தென் ஆப்பிரிக்காவுக்கு சென்றபோது என் மனம் முழுவதுமாக உங்களுடனே இருந்தது. நான் இந்தியாவுக்கு வந்த உடனே உங்கள் அனைவரையும் பார்க்க வேண்டுமென நான் நினைத்தேன். உங்கள் அனைவருக்கும் நான் சல்யூட் செய்ய நினைத்தேன். நீங்கள் தேசத்தை எந்த அளவுக்கு உயரத்துக்கு அழைத்துச்சென்றுள்ளீர்கள் என்றால், இது சாதாரணமானதல்ல. இந்தியா நிலவில் கால் வைத்துள்ளது. நம் நாட்டின் கௌரவத்தை நிலவில் நாம் நிலைநாட்டியுள்ளோம். விண்வெளி துறையின் சாதனைகள், பங்களிப்பு இளைஞர்களுக்கு உந்துசக்தியாக விளங்குகிறது.

நிலவில் விக்ரம் லேண்டர் இறங்கிய இடம் சிவசக்தி என்ற பெயரில் அழைக்கப்படும். இமயம் முதல் கன்னியாகுமரி வரை இந்தியர்களை இணைக்கின்ற பெயராக இது இருக்கும். இந்த சக்தி என்பது பெண்களின் சக்தியும் கூட. சந்திரயான்3 திட்டத்தில் பெண்களின் பங்களிப்பும் முக்கியமாக உள்ளது, எனவே சிவசக்தி என்ற பெயர் அவர்களின் அர்ப்பணிப்புக்கும் ஒரு சாட்சி.

அதேபோல 2019ஆல் சந்திரயான் 2 நிலவில் தனது இடத்தை பதித்த இடம் திரங்கா(மூவர்ணக்கொடி) என அழைக்கப்படும். எந்த தோல்வியும் இறுதியானதல்ல என்பதை நமக்கு நினைவூட்டவே திரங்கா என பெயர் சூட்டப்படுகிறது. சந்திரயான் 3 லேண்டர் நிலவில் கால்பதித்த ஆகஸ்ட் 23ஆம் திகதி இனி தேசிய விண்வெளி நாளாக கொண்டாடப்படும். ஆகஸ்ட் 23ஆம் திகதி விஞ்ஞானம், அறிவியல், விண்வெளி ஆராய்ச்சி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். கடந்த 2019 ஆம் ஆண்டு நிலவில் சந்திரயான்2 லேண்டர் விழுந்து நொறுங்கிய இடத்துக்கு 'திரங்கா பாயின்ட்' எனப் பெயர் சூட்டப்பட்டது என்பதையும் பிரதமர் தெரிவித்தார்.




**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 218.30 | 229.86 |
| கனடியன் டொலர் | 243.55 | 256.14 |
| யூரோ | 357.10 | 374.17 |
| ஜப்பான் யென் | 2.3040 | 2.4114 |
| சிங்கப்பூர் டொலர் | 242.85 | 255.04 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 417.90 | 436.25 |
| சுவிஸ் பிராங்க் | 372.53 | 393.13 |
| அமெரிக்க டொலர் | 322.84 | 335.89 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 873.71 | கட்டார் ரியால் | 90.39 |
| குவைத் டினார் | 1073.32 | சவூதி ரியால் | 87.82 |
| ஓமான் ரியால் | 855.52 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 89.67 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 12ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஸபர் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து

பண்புடைய பெரியோர் எல்லோரிடமும் எப்பொழுதும் பணிவுடன் பழகுவார்கள்; பண்பு இல்லாத சிறியோர், தம்மைத் தாமே புகழ்ந்து கொண்டு இறுமாந்து கிடப்பார்கள்.

## பொருளாதார மேம்பாட்டுக்கு வலுசேர்க்கும் சுற்றுலாத்துறை

இலங்கையைப் பெருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு பெரிதும் உதவக்கூடிய துறைகளில் ஒன்றாக உல்லாசப் பயணத்துறை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அது பொருளாதார மேம்பாட்டுக்கான இலக்குகளை விரைவாக அடைந்து கொள்ளக்கூடிய முன்னணித் துறையாகவும் காணப்படுகிறது.

கடந்த வருடம் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான இந்நாடு, கட்டம் கட்டமாக மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருக்கிறது. இந்நாட்டை நிலைபேறான அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இலக்கும் நோக்கும் ஆகும். அதற்கு ஏற்ப பரந்த அடிப்படையில் பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் பொருளாதாரரீதியில் இந்நாட்டை முன்னேற்றவென பெரிதும் உதவக்கூடிய முன்னணி துறைகளில் ஒன்றாக சுற்றுலாத்துறை விளங்கிக் கொண்டிருக்கின்றது. எந்தவொரு நாட்டையும் பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்கு அந்நிய செலாவணி அவசியம். அந்த அந்நிய செலாவணியை ஈட்டிக் கொள்வதற்கு இத்துறை அதிக பங்களிப்பை நல்கக்கூடியதாக இருக்கும். அதன் காரணத்தினால் சுற்றுலாத்துறையை ஊக்குவித்து அதை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உல்லாசப் பயணத்துறையைக் கட்டியெழுப்புவதிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக சுற்றுலாத்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் அதன் வசதிகளை மேம்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன் பயனாக இந்நாட்டுக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையும் கடந்த வருடத்தை விடவும் இவ்வருடம் அதிகரித்துள்ளது. இவ்வருடத்தின் ஜனவரி முதல் ஓகஸ்ட் 20 ஆம் திகதி வரையும் 08 இலட்சத்து 66 ஆயிரத்து 744 உல்லாசப் பயணிகள் இங்கு வருகை தந்துள்ளனர். ஆனால் கடந்த வருடமோ 7 இலட்சத்து 19 ஆயிரத்து 978 உல்லாசப் பயணிகளே வருகை தந்துள்ளனர். கடந்த வருடம் வருகை தந்த மொத்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையை இவ்வருடம் ஜுலை மாதத்திற்குள் தாண்டிச் செல்ல முடிந்துள்ளது. அதனால் இவ்வருடம் நிறைவடையும் போது இந்நாட்டுக்கு விஜயம் செய்துள்ள உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வருடத்தில் மே மாதம் தவிர்ந்த ஒவ்வொரு மாதமும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். அதிலும் கடந்த எட்டு மாதங்களில் ஜுலையில்தான் அதிகூடிய எண்ணிக்கையிலான உல்லாசப் பயணிகள் வந்துள்ளனர். அம்மாதம் ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 39 உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சூழலில் கடந்த வாரம் அம்பாறை மாவட்டத்தின் அறுகம்பை சுற்றுலா வலயத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு உல்லாசப் பயணிகளுடன் அளவளாவியுள்ளார். அத்தோடு, 'இந்நாட்டுக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையை 25 இலட்சத்தில் இருந்து 50 இலட்சமாகவும், அதன் பின்னர் ஒரு கோடியாகவும் அதிகரிக்க வேண்டும். அதற்கு ஏற்ப வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஒரு சுற்றுலாப் பயணி நாளொன்றுக்கு 300 முதல் 500 டொலர்கள் வரையில் செலவு செய்யும் வகையில் வசதிகளை மேம்படுத்த வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். அது தொடர்பான திட்டங்களை கிழக்கு மாகாணத்தில் இருந்து செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையானது இந்து சமுத்திரத்தில் அமைந்திருக்கும் அழகிய தீவாகும். நாலாபுறமும் அழகிய கடற்கரையோரங்களையும் சிறந்த சீதோஷண நிலையையும் கொண்டுள்ள இந்நாடு, தனித்துவம்மிக்க பாரம்பரிய மரபுரிமைகள் பலவற்றுக்கும் உரிமை கொண்டாடக் கூடியதாக இருப்பதோடு, உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கக் கூடியதாகவும் உள்ளது. அதனால் இந்நாட்டின் இயற்கை வளங்களை உச்சபயனை அடைந்து கொள்ளும் வகையில் பயன்படுத்துவது மிகவும் அவசியம். அதற்கு ஏற்ப சுற்றுலாத் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்துவது அவசியம்.

ஆகவே நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவென ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களும் நிச்சயம் பக்கத்துணையாக அமையும். அதன் ஊடாக நாட்டின் பொருளாதாரம் நிச்சயம் முன்னேற்றம் அடையும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# கொழும்பையடுத்து யாழ். போதனா மருத்துவமனையில் Endovascular Aneurysm Coiling நவீன சிகிச்சைஆரம்பம்

மூளையில் ஏற்படுகின்ற இரத்தக் கசிவுகளுக்கு 'என்டோவஸ்குலர் அனூரிசம் கொய்லிங்' என்ற நவீன சிசிச்சை முறை இதுவரைகாலமும் இலங்கையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்தது.



கொழும்பு தேசிய வைத்தியசாலையை அடுத்து அரசமருத்துவமனை என்ற வகையில் இரண்டாவதாக யாழ். போதனா மருத்துவமனையில் இந்த நவீன சிகிச்சைமுறை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மிகவும் மகிழ்ச்சியான விடயமாகும்.

அண்மையில் (2023.08.10) அன்று யாழ். போதனா மருத்துவமனையின் இடையீட்டு கதிரியக்கவியல் மருத்துவ நிபுணர்கள் (Interventional Radiologists), உணர்வழியியல் சிகிச்சை நிபுணர்கள் (Anaesthesiologist) மற்றும் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் (Neurosurgeon), வைத்தியர்கள், தாதியர்கள், கதிரியக்கவியலாளர்கள்,

## நாடெங்குமிருந்து தினமும் வருகைதரும் 5000 இற்கும் அதிகமானவர்களுக்குச் சிகிச்சை வழங்கும் வடபகுதியின் ஒரேயொரு மருத்துவமனை






சுகாதாரப் பணியாளர்கள் முதலான மருத்துவக் குழுவினர் இணைந்து இந்த நுட்பமான நவீன சிகிச்சையை எமது வைத்தியசாலையில் வெற்றிகரமாக மேற்கொண்டமை வைத்தியசாலை வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும். மருத்துவக் குழுவினர் மிகக் குறைந்த வளங்களுடன் இந்த நவீன சிகிச்சையை மேற்கொண்டமை பாராட்டுக்குரியது.

அனூரிசம் என்பது இரத்தநாடிக் குழாய்களில் ஏற்படும் பலூன் போன்ற சிறிய விரிவு ஆகும். இது தற்செயலாக அல்லது இரத்தக் கசிவு ஏற்படும் போது ஊடுகதிர்ப்படம்(ஸ்கான்) மூலமும் கண்டுபிடிக்கப்படலாம்.

மூளை போன்ற இரத்த ஓட்டம் கூடிய உடற்பாகங்களில் இவ்வாறான அனூரிசம் இருப்பது ஆபத்தானது. விபத்துக்களில் அல்லது சடுதியான இரத்த ஓட்ட மாற்றங்களினால் இவற்றிலிருந்து இரத்தக் கசிவு ஏற்படலாம். மூளையில் ஏற்படும் இது போன்ற இரத்தக் கசிவுகள் உயிராபத்தை ஏற்படுத்தலாம்.

மருத்துவப் பரிசோதனையின் போது இவ்வாறான அனூரிசங்கள் அடையாளம் காணப்பட்டால் இருவகையான சிகிச்சை முறைகள் தற்போது பின்பற்றப்படுகின்றன.

சத்திரசிகிச்சை முறை – இது நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் மண்டையோட்டில் துவாரத்தை எற்படுத்திச் செய்யும் பாரிய சத்திர சிகிச்சையாகும்.

காலிலுள்ள நாடியினூடாகச் சிறிய துவாரத்தை ஏற்படுத்தி அதனூடாக நுண்ணிய குழாய் ஒன்றை மூளை வரை செலுத்தி மூளை நாடியில் ஏற்பட்ட விரிவை பிளாற்றினம் உலோகச் சுருள்களால் அடைத்தல் (Endovascular aneurysm coiling) – இது இடையீட்டு கதிரியக்கவியல் மருத்துவ நிபுணர் (Interventional Radiologist) கதிரியக்கவியல் கூடத்தில் மேற்கொள்ளும் நவீன சிகிச்சை முறையாகும்.

விபத்துக்களின் போது மூளையின் உட்புறத்தில் ஏற்படும் இரத்தக் கசிவுகளை நிறுத்த இந்த நவீன சிகிச்சை முறையை மேற்கொள்ளத் தீர்மானிக்கும்போது உரிய அளவுடைய பிளாற்றினம் சுருள்கள் கையிருப்பில் இருப்பது மிகவும் அவசியமாகும். தற்போதைய நிலையில் அரசினால் இதனை வழங்க முடியாதுள்ளது. இவற்றைக் கொள்வனவு செய்வதற்கான நிதியைத் தாராளமனம் படைத்த நன்கொடையாளர்கள் வழங்க முன்வரும்போது எதிர்வரும் காலங்களில் இத்தகைய நவீன சிகிச்சைகளைத் தொடர்ச்சியாக யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ள முடியும். இதற்கு சுமார் ரூபா 5 மில்லியன் நிதி தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் ஆளணி எண்ணிக்கை குறைவாக இருப்பினும் வைத்தியசாலையானது ஒரு தேசிய வைத்தியசாலையுடன் ஒப்பிடக் கூடிய பல்துறை விசேட வைத்திய நிபுணர்களைக் கொண்டுள்ளதுடன், பல்வேறு நவீன மருத்துவ சேவைகளையும் சிறப்பாக வழங்கி வருகிறது. வட மாகாணம், கிழக்கு மாகாணம் மட்டுமன்றி புத்தளம், சிலாபம் முதலான வடமேல் மாகாணத்திலிருந்தும் அனுராதபுரத்திலிருந்தும் நோயாளர்கள் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். ஆனால் இன்று தெற்கிலிருந்து பொதுமக்கள் சிசிச்சையை நாடி யாழ். போதனா மருத்துவமனைக்கு வருகின்றனர். குறிப்பாகக் கண்சத்திர சிகிச்சைக்காகவும், திறந்த இருதய சத்திரசிகிச்சை மற்றும் நரம்பியல் சத்திர சிகிச்சைக்காகவும் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள் இவ்வைத்தியசாலைக்கு வருகின்றனர்.

தற்போது சுபாஷ் விடுதியிலியங்கும் இருதய சத்திர சிகிச்சைக் கிளினிக் பிரிவில் சிகிச்சைபெற அனுராதபுரம், நீர்கொழும்பு, புத்தளம், அம்பாறை, மட்டக்களப்பு முதலான வடமத்திய, வடமேல், மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து மாதந்தம் 50 இற்கும் அதிகமானவர்கள் வருகின்றனர்.

இலங்கையில் சிறந்த முறையில் தொலைமருத்துவ சேவை மூலம் சர்வதேச மற்றும் தேசியரீதியில் முன்னிலையில் விளங்கும் துறைசார் விசேட மருத்துவ வல்லுநர்களது ஆலோசனையைப் பெற்று இப்பிராந்தியத்தில் சிகிச்சை பெறும் பொதுமக்களுக்கு மிகச்சிறந்த கிகிச்சையைத் தொடர்ச்சியாக வழங்கிவரும் இலங்கையின் முன்னோடி வைத்தியசாலையாகவும் ஒரேயொரு வைத்தியசாலையாகவும் யாழ். போதனா வைத்தியசாலையே திகழ்கின்றது. 2019 முதல் தொலைமருத்துவ சேவையை நாம் சிறந்த முறையில் வழங்கி வருகின்றோம்.

இன்று நாம் பல்வேறு நெருக்கடிகளை, பற்றாக்குறைகளை எதிர்நோக்குகின்றோம். கடந்த 3 வருடங்களாக விக்ரோரியா வீதியிலமைந்துள்ள சுபாஷ் விடுதியின் ஒருபகுதியில் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக இயங்கிவரும் அனைத்து கிளினிக் அலகுகளையும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இடம் மாற்றி அப்பகுதியை உரிமையாளர்களிடம் ஒப்டைக்க வேண்டியுள்ளது. சுபாஷ் விடுதியில் தினமும் 1000 இற்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். பிரதான வைத்தியசாலைக்கு அண்மையில் கிளினிக்கை இயக்குவதற்குப் பொருத்தமான வேறோர் இடத்தைப் பெற்றுக் கொள்வது என்பது மிகவும் சவால் மிக்கதாகக் காணப்படுகிறது.

1850 ஆம் ஆண்டு இந்த வைத்தியசாலையை வடமாகாண அரசாங்க அதிபராக இருந்த பிரித்தானிய அயல்நாட்டுப் பிரதிநிதி சேர். பேர்சிவல் அக்லண்ட் டைக் ஆரம்பித்தபோது மருத்துவமனையைச் சூழ வயலும் தோட்டங்களுமே காணப்பட்டன. அன்று யாழ்நகரம் விளைநிலமாக இருந்தது; வர்த்தக நகரமாக இருக்கவில்லை. யாழ்நகரும் அதனைச் சுற்றி உருவான வர்த்தக நகரும் இந்த வைத்தியசாலையை மையப்படுத்தியே ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்தது என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

தினமும் 5000 இற்கும் அதிகமானவர்களுக்குச் சிகிச்சை வழங்கும் வடபகுதியின் ஒரேயொரு சிறப்புவகை (Tertiary care) மருத்துவமனையாகிய யாழ். போதனா வைத்தியசாலையானது இப்பகுதியில் வாழும் மக்களுடைய வைத்தியசாலை என்பதை நாம் அனைவரும் உணர்ந்து அதன் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.



மருத்துவ கலாநிதி
**த. சத்தியமூர்த்தி...**
*பணிப்பாளர், போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம்*

# ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையினால் யாழ். நகரில் குழந்தைகள் இருதயநல இலவச மருத்துவ முகாம்

ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை (கோயம்புத்தூர், இந்தியாே) யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் செப்டம்பர் 8, 9, 10 ஆம் திகதிகளில் மருத்துவ சிகிச்சை (MEDICARE 2023) முகாம் நடத்தவுள்ளது. இந்தியாவின் கோயம்புத்தூரில் உள்ள சிறந்த பன்முக மருத்துவமனையான ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையினால் குழந்தைகளுக்கான இலவச இருதய சிகிச்சை ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.



Dr. Vijay sadasivam.
Paediatric Cardio Thoracis surgeon

குழந்தைகள் இருதயநலத்தை மேம்படுத்தும் புரட்சிகர முயற்சியாக, ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையானது யாழ்ப்பாணத்தில் குழந்தை இருதய நோய்க்கான ஆலோசனையை நடத்தவிருக்கிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை குழந்தைகளுக்கான இருதயதுறையில் அதிநவீன மருத்துவ வசதிகளுடன் செயல்படுகிறது. இம்மருத்துவமனையில் அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் உள்ளனர். மருத்துவ நிபுணர்கள் தேவபிரசாத் மற்றும் விஜய் சதாசிவம் ஆகியோர் அனுபவமும் திறமையும் வாய்ந்தவர்களாவர். டொக்டர் விஜய் சதாசிவம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் MEDICARE 2023 மருத்துவ முகாமிற்கு வருகை தரவுள்ளார்.

இந்தத் துறையில் நீண்டகால புகழ் பெற்றவர் டொக்டர் விஜய் சதாசிவம். ஆயிரத்திற்கும் மேற்பட்ட திறந்த இதய அறுவை சிகிச்சைகளை வெற்றியுடன் மேற்கொண்ட மருத்துவ நிபுணர் அவர். பெற்றோரின் புன்னகை மிகவும் விலை மதிப்பற்றது, உயிர்களைப் பாதுகாப்பது எங்கள் இலட்சியம் என்று அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் குழந்தைகளுக்கான இருதய சிகிச்சை சேவையானது தனிச்சிறப்புப் பெற்றது. ரோட்டரி கழகம் போன்ற நிறுவனங்களுடனும் EKAM போன்ற அரசுசாரா நிறுவனங்களுடனும் இணைந்து மருத்துவமனை முக்கிய கூட்டாண்மைகளை நிறுவியுள்ளது. இந்தக் கூட்டாண்மையில் பல்வேறு இளம் இருதயங்களுக்கு இலவசமாக சிகிச்சை அளித்து மருத்துவர்கள் உதவுகிறார்கள்.

பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையை ச் சேர்ந்த 10 வயது குழந்தைக்கு பிறவி இருதய குறைபாடு இருந்தது. அக்குழந்தைக்கு இம்மருத்துவமனையில் திறந்த இதயஅறுவை சிகிக்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது. மேலும் எங்கள் நிபுணர்கள் 40 இற்கும் மேற்பட்ட திறந்த இதயஅறுவை சிகிச்சைகளை இலவசமாக செய்துள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையானது யாழ்ப்பாணத்தில் நடத்தும் MEDICARE 2023 குழந்தைகளுக்கான இருதய சிகிச்சை முகாமில்

கலந்து கொண்டு குழந்தைகளுக்கான இருதயநல ஆலோசனை பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

Contact No:
Thajudeen Ahamed. M
Manager Marketing & International Affairs
+919159502714 (Whatsapp)

# அருட்தந்தை ஏர்னஸ்ட் போருதொட்டவின் பிறந்ததினத்தன்று தேசிய சினிமாப் பேருரை

உள்நாட்டு திரைப்படத்துறையின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய வணக்கத்துக்குரிய அருட்தந்தை ஏர்னஸ்ட் போருதொட்டவின் 92 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு திரைப்படத் துறையில் உள்ள அனைவரையும் ஒரே மேடைக்குக் கொண்டுவரும் வகையில் 'இலங்கை சினிமாவின் எதிர்கால நோக்கு” என்ற தலைப்பிலான தேசிய திரைப்படப் பேருரையை எதிர்வரும் 31 ஆம் திகதி மு.ப 9.30 முதல் கொழும்பு 07, இலங்கை மன்றக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கான அனைத்து எற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக அருட்தந்தை ஏர்னஸ்ட் போருதொட்ட அறக்கட்டளை அறிவித்துள்ளது.




அருட்தந்தை ஏர்னஸ்ட் பொருதோட்ட அறக்கட்டளையின் ஆலோசனைக் குழு உறுப்பினரும், ஞானார்த்த பிரதிபய பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான அருட்தந்தை சிறில் காமினி செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றுகின்றார். வண. ஜுட் கிரிஷாந்த, அறக்கட்டளையின் ஆலோசனைக் குழு உறுப்பினர் மற்றும் வெகுஜன தொடர்பாடல் பேராயர் பணிப்பாளர், இணைத்தலைவரும் மூத்த தொலைக்காட்சி நாடக இயக்குநருமான சுனில் கோஸ்டா, இணைத் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் விஜித் ரோஹன் ஆகியோரும் அருகில் காணப்படுகின்றனர்.

கொழும்பில் அமைந்துள்ள சமூக மற்றும் சமதான நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய வணக்கத்துக்குரிய அருட்தந்தை ஏர்னஸ்ட் பொருதோட்ட அறக்கட்டளையின் இணைத்தலைவரும், சிரேஷ்ட தொலைக்காட்சி நாடக இயக்குனருமான சுனில் கொஸ்தா, இந்தத் தேசிய சினிமா தொடர்பான பேருரை நிகழ்வில் திரைப்படத் துறையைச் சேர்ந்த நிபுணர்கள் பலர் கலந்துகொள்ளவிருப்பதாகவும், இந்தத்துறை தற்பொழுது எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்து கலந்துரையாட முடியும் என்றும் கூறினார்.



வணக்கத்துக்குரிய ஏர்னஸ்ட் பொருதோட்ட அறக்கட்டளையின் இணைத் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் விஜித் ரோஹன் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில், எர்னஸ்ட் போருதொட்ட ஆண்டகை எப்பொழுதும் முற்போக்கு சிந்தனை உடையவர் என்பதுடன், திரையுலகம் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கும் இன்றைய நாளில் அவர் இருந்திருந்தால், அனைத்துத் தரப்பினரையும் அழைத்து அதற்கான தீர்வுகளைக் காண முன்வந்திருப்பார் எனக் குறிப்பிட்டார்.

எனவேதான் அவருடைய 92 ஆவது பிறந்த தினமான ஓகஸ்ட் 31ஆம் திகதி இந்தத் தேசிய சொற்பொழிவு நிகழ்வை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருப்பதாக விஜித் ரோஹன் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் நெருக்கடியான சூழல் நிலவுகின்ற போதிலும், திரையுலகம் எதிர்கொள்ளும் பிரச்சினைக்குரிய நிலைமை குறித்து விவாதம் நடத்துவதை தவிர்க்க முடியாது என அருட்தந்தை ஏர்னஸ்ட் போருதொட்ட அறக்கட்டளையின் ஆலோசனைக்குழு உறுப்பினரும், ஞானார்த்த பிரதிபய பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.

இலங்கை சினிமாவை நேசிக்கும் மற்றும் சினிமாவின் முன்னேற்றத்தை விரும்பும் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும், தொழில்துறையை பாதுகாக்கும் திரைப்பட பொழுதுபோக்குக்காக போருதொட்ட ஆரம்பித்த பயணத்துக்கு ஆதரவு வழங்குமாறும் அருட்தந்தை எர்னஸ்ட் போருதொட்ட அறக்கட்டளை அழைப்பு விடுத்துள்ளது.

# க.பொ.த. சாதாரணதரத்தின் பின்னர் நிர்க்கதியாகும் உயர்தரமும் அதனை கையாளும் வழிமுறைகளும்

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் தமது உயர்தரக் கற்றலுக்குரிய பாடத்துறையினையும் அதன் பாடச் சேர்க்கையினையும் தெரிவு செய்யும் போது மிகப்பொருத்தமான முறையில் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.

வெறுமனே தன்னைப் பற்றி சரியாக தெரிந்து கொள்ளாமல் நம்பிக்கை / எடுகோள்களின் அடிப்படையிலும், பெற்றோர்களின் தர்க்க ரீதியற்ற விருப்பத்திற்கு ஏற்ற முறையிலும் பொருத்தமற்ற தீர்மானங்களை மேற்கொள்ளும் நிலை அதிகரித்துச் செல்வதை காணக்கூடியதாக உள்ளது.

இதனை விட மிக மோசமான நிலைதான் டியூஷன் மையத்தின் பிரதிநிதிகள் சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்களை அழைத்துச் செல்வதும் அவர்களை தமது கல்வி நிலையத்தில் வழங்கப்படும் பாடங்களை அடிப்படையாக வைத்து உயர்தரக் கற்றலுக்கான பாடத் தெரிவு செய்யப்படக் கூடியவாறு மூளைச்சலவை செய்வதும் ஆகும்.

சில பெற்றோர்கள் தன்னால் அடைய முடியாத இலக்குகளை தமது பிள்ளைகளின் மூலம் அடைந்து கொள்ள முயற்சித்து பிழையான பாடத் தெரிவுகளை மேற்கொள்ள வழிகாட்டுவது தனது பிள்ளையின் எதிர்காலத்தை தனது கையாலே சூனியமாக்கி கேள்விக்குரியதாக்கும் விடயமாகும்.

இதனை விட மாணவர்கள் தமது சகபாடிகளை பிரிய முடியாத நிலையினை உணரும் போது அச்சகபாடிகள் பின்தொடரும் பாடங்களை தமது பாடங்களாக தெரிவு செய்து தமது எதிர்கால தொழில் வாழ்க்கையினை பாழாக்குகின்றமையினையும் நாம் அவதானிக்கிறோம். சில உயர்தரப் பாட ஆசிரியர்கள் தான் கற்பிக்கும் பாடத்திற்கு அதிக மாணவர்களை கவர்ந்திழுக்கும் நோக்கில் மாணவர்களுக்கு தனது பாடத்தின் மீது அளவுக்கு மீறிய ஆசை காட்டி மாணவர்களின் எதிர்காலத்தில் தன்னை அறியாமலே எதிர்க்கணிய செல்வாக்கினை செலுத்துவது பற்றியும் பெற்றோர்கள் புலம்புகின்றனர்.

இதனை விட துர்ப்பாக்கிய நிலை என்னவென்றால் தனது பாடசாலைதரம் கீழே இறங்கி விடும் என்பதற்காக போதிய பொருத்தமான உயர்தரத்திற்கான பௌதிக மற்றும் ஆளணி வளங்கள் இன்றிய நிலையிலும் அத் துறைகளுக்கு பொருத்தமான மாணவர்கள் இன்றிய நிலையிலும் வலுக்கட்டாயமாக சில மாணவர்களை திணித்தும் மாணவர்களின் உயர்தரக் கற்றலுக்கும் அவர்களின் தொழில் வாழ்வுக்கும் இடையூறு விளைவிக்கின்றமை நாமறிந்த உண்மையாகும்.

இந்நிலையில் பொருத்தப்பாடின்றிய முறையில் பாடத்தெரிவுகள் நிகழும் போது மாணவர்கள் தமது உயர்தரத்தினை முழுமையாக நிறைவேற்றாமல் இடைநடுவே கைவிடுகின்ற காட்சிகள் ஏராளம். சிலர் குறித்த ஈராண்டின் பின்னர் பரீட்சை எழுதாமல் அடுத்த வருடத்தில் பரீட்சையினை காலம் தாழ்த்துக்கொண்டு செல்லும் நிலையும் புதிதல்ல. இவ்வாறு பரீட்சையினை காலம் தாழ்த்தும் மாணவர்கள் உள நெருக்கீடுகளுக்கு உள்ளாகி பரீட்சை பற்றிய எதிர்மனப்பான்மையினை வளர்த்துக் கொள்ளவும் இடமுண்டு.

இவ்வாறான நிலைகளினால் பாதிக்கப்படும் மாணவர்களின் வினைத்திறன், விளைதிறனில் எதிர்க்கணிய மாற்றங்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. அதுமட்டுமன்றி உயர்தரத்தின் பின்னர் மாணவர்கள் எவ்வாறான உயர் கற்கை நெறிகளை தெரிவு செய்வது என்பதிலும் சிக்கல் நிலையினை அனுபவிக்கின்றனர். இதனால் தொழில் இலக்கு பாதிக்கப்பட்டு அரச தொழிலின் மீது நாட்டம் அதிகரித்து புத்தாக்க சிந்தனை மறைந்து குறித்த சிறிய வட்டத்திற்குள் சிந்திக்கத் தலைப்படுவதால் அவ்விளைஞர் சமூகத்தில் இருந்து பாரியதொரு பங்களிப்பினை நாட்டுக்கு வழங்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படவும் காரணமாக இருக்கும். ஆதலால் இவ்வாறான நிலையில் எமது சமூகத்தினதும் இந்த நாட்டினதும் இளைஞர் / யுவதிகள் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான வழிகாட்டல் மற்றும் திட்டமிடல்கள் கல்வித் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், சமூக நலன் விரும்பிகள் மற்றும் அரச, அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் ஒன்றிணைந்து கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை எழுதிய மாணவர்களை மையப்படுத்திய வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வேலைத் திட்டங்களில் முதன்மையானதாக மாணவர்கள் பற்றி அறிதல் வேண்டும். அதன் பின்னர் மாணவர்களுக்கு ஏற்ற உயர் தரப் பாடத்துறையும் பாடச் சேர்க்கைகளும் தெரிவு செய்யப்பட வேண்டும். மாணவர்களை அறிதல் எனும் போது அவர்களின் தொழில் விருப்பம், அத் தொழில் விருப்பத்தை யதார்த்தமானதாக்குவதற்கான இயலுமை மற்றும் ஆற்றல், பிள்ளையின் தொழில் ஆளுமை, கற்றல் பாங்கு என்பவை அறியப்பட்டு அத் தொழிலின் உந்துசக்தியாக அமைந்துள்ள விடயங்கள் போன்ற இன்னோரன்ன காரணிகளை அறிந்து அதற்கேற்றவாறு உயர்தரத் துறையும் பாடச் சேர்க்கையும் தெரிவு செய்யப்படலாம்.

இங்கு உயர்தரமானது சாதாரண தரத்தைப் போன்று மூன்று மாதங்களிலோ அல்லது ஆறு



மாதங்களிலோ கற்று பரீட்சை எழுதி பல்கலைக்கழக வாய்ப்பைப் பெற்றுத் தரும் ஒன்றல்ல. ஒன்பது A சித்தி பெற்றவர்கள் அனைவரும் கெட்டிக்காரர்கள்; அடுத்தவர்கள் சளைத்தவர்கள் என எடுத்த மாத்திரத்தில் எண்ணக் கூடாது. சாதாரண தரத்தில் சாதாரண சித்தி எடுத்த எத்தனையோ மாணவர்கள் உயர் தரத்தில் உயர்சித்திகளைப் பெற்ற வரலாறுகள் நிறையவே உள்ளன. ஆதலால் உயர்தரம் கற்கும் யாவரும் உயர் தரத்திலான கற்றல் திட்டமிடலினை மேற்கொண்டு அதனை நடை முறைப்படுத்தி, அங்கு எழும் சவால்களை புத்தி சாதூரியமாக கையாண்டு இலக்கினை அடைந்து கொள்வதில் கண்ணுங்கருத்துமாக இருந்து செயற்பட வேண்டும்.

எதிர்கால தொழில் உலகு வேண்டி நிற்கும் தகைமைகள் என்ன? அவற்றை எவ்வாறு எங்கு பெற்றுக் கொள்வது? தான் எங்கு இருந்த போதிலும் தனது திறமை, ஆற்றல், அனுபவம், அறிவினைப் பொருத்தமாகப் பயன்படுத்தி அடுத்தவர்களுக்கும் நாட்டுக்கும் தேவையான சேவைகளையும் பொருட்களையும் பெற்றுக் கொள்வதில் தனது பங்களிப்பு எவ்வாறு மேம்பட்டதாக இருக்க வேண்டும்? போன்ற இன்னோரன்ன வினாக்களுக்கு விடை பகரக் கூடியதாக தனது உயர் கல்வி இலக்குகள் அமையப் பெற வேண்டும். அதற்கான சிந்தனை கிளறலினை பாடசாலையும், பெற்றோரும், ஆசிரியரும், அடுத்தவர்களும் வழங்க வேண்டும். இதன் ஓரங்கமாக மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் வழிகாட்டல்/தெளிவூட்டல் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். மாணவர்கள்; பெற்றோரின் கருத்துகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அரச, தனியார் தொழில் வழங்குனர்கள் மற்றும் தொழில் முனைவர்களுடன் சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இதுவரை கணனிக் கற்கைபற்றி பராமுகமாக இருந்தவர்களும் ஆங்கிலம் என்றால் அலறியடித்து விரண்டோடியவர்களும் தாம் விட்ட தவறை எண்ணி தம்மைத் தாமே சுயவிசாரணை செய்து கொள்ள வேண்டும். ஏனெனில் வேலை உலகானது ஆங்கிலம் மற்றும் கணனிக் கல்வியை பெரிதும் மதித்து, வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆதலால் உயர்தரத்தில் எத்துறையில் கற்றாலும் ஆங்கிலத்தையும் கணனிக் கற்கையினையும் மெது மெதுவாக விரும்பி கற்று அதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுக்கொள்ள முனைய பெற்றோரும், பாடசாலையும், சமூகமும் ஒத்தாசை வழங்கி வழிகாட்ட வேண்டும்.




சுஹைர் A காதர்...
தொழில்வழிகாட்டல் அலுவலர்
கொழும்பு ஆசிரியர் மையம்


மாணவர்களுக்கு உள விழிப்பு தொடர்பாகவும், மென்திறன்கள் விசேடமாக நேர முகாமைத்துவம், திட்டமிடல், ஒழுங்கமைத்தல், தலைமைத்துவம், தொடர்பாடல், விமர்சன சிந்தனை, ஒத்துழைப்பு, படைப்பாற்றல், பிரச்சினை தீர்த்தல், இயைந்துபோதல் ஆகியவற்றின் மீது அனுபவம் பெற்றுக்கொள்ளும் விதமான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படுவது இன்றியமையாதது.

பரீட்சைக்கான கற்றல் மற்றும் தயாராதல் நேரங்களில் தான் விட்ட பிழைகள் என்ன? அவற்றால் ஏற்பட்ட இழப்புகள் என்ன? அந்நேரத்தில் எனது மனதில் உதித்த நல்லெண்ணங்கள் என்ன? பரீட்சைக்கு முன்னரான காலத்தில் அடுத்த உயர்தரப் பரீட்சையினை நான் எவ்வாறு சிறப்பான தயாராதலுடன் எதிர்கொள்ள வேண்டும் என என் மனம் ஆசைப்பட்ட விதம்/உந்துதல்கள் போன்ற விடயங்கள் மீள் கொணரப்பட்டு உயர் தரமான சுயஉந்து சக்தியுடன், தனது கற்றல் அடைவுக்கான பொறுப்பினை தானே ஏற்று சுயகட்டுப்பாட்டுடன் தான் தெரிவு செய்த பாடங்களில் உயர் அடைவுக்காக தனது கற்றலை சரியான முறையில் நெறிப்படுத்த வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் எதிர்கால ஈராண்டு உயர்தரக் கற்றலை திடஉறுதியுடனும் நேர் மனப்பான்மை, மற்றும் மகிழ்ச்சியுடனும் உத்தமாகப் பயன்படுத்துவதற்கான வலுவூட்டலாக அமைத்துக் கொள்ளவதற்கான சந்தர்ப்பங்களை உரிய முறையில் இனங்கண்டு முன்னெடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.



# இலங்கை காப்புறுதியாளர் சங்க (IASL) இரத்ததான திட்டத்தில் பலர் பங்கேற்பு

நாட்டின் காப்புறுதித் தொழில்துறையின் பிரதிநித்துவ அமைப்பான இலங்கை காப்புறுதியாளர்கள் சங்கம் (Insurance Association of Sri Lanka IASL) தனது இரத்ததான முன்னெடுப்பு 2023 ஐ ஒகஸ்ட் 24 அன்று வெற்றிகரமாக நிறைவு செய்தது. இரத்ததான முன்னெடுப்பு 2023 ஆனது IASL உறுப்பு நிறுவனங்கள், காப்புறுதித் துறையின் ஆளணியினர் மற்றும் தொடர்புபட்ட ஏனைய தரப்பினரிடமிருந்து பெரும் எண்ணிக்கையானவர்களை பங்கேற்கச் செய்துள்ளதுடன், அவர்கள் மதிப்புமிக்க உயிர்களைக் காப்பாற்ற சமூகத்தின் வலிமையைக் காண்பிக்க இரத்ததானம் செய்துள்ளனர்.

சமூகம் மற்றும் தேசத்தைப் பாதிக்கும் பல்வேறு நெருக்கடிகளின் மூலம் காப்புறுதித் துறை அதன் ஒப்பந்ததாரர்களுக்கு பெரும் ஆதரவாக திகழ்ந்து வருவதுடன், கடினமான காலங்களில் ஒப்பந்ததாரர்களுக்கு உதவ காப்புறுதி மற்றும் நிதிப்பாதுகாப்பை வழங்குகிறது. இரத்ததான முன்னெடுப்பு 2023 என்பது IASL இன் மற்றொரு முயற்சியாகும், இது காப்புறுதித் துறை, தொடர்புபட்ட தரப்பினர் மற்றும் பொதுமக்களை தன்னலமற்றவர்களாக இருக்கவும், இரத்ததானம் செய்வதன் மூலமாகவும், மிகவும் தேவையான நேரங்களில் மக்களின் உயிர்களைக் காக்கவும் ஊக்குவிக்கிறது.

இலங்கை காப்புறுதியாளர்கள் சங்கம் (IASL) நாட்டின் காப்புறுதித் துறையின் பிரதிநிதி அமைப்பாகும். இது 1989 இல் ஸ்தாபிக்கப்பட்டது. காப்புறுதி வணிகத்தை முன்னெடுக்கும் அனைத்து காப்புறுதி நிறுவனங்களும் IASL இன் உறுப்பினர்களாக உள்ளன. தற்போது, பதிவுசெய்யப்பட்ட அனைத்து 27 காப்புறுதி நிறுவனங்களும் IASL இன் உறுப்பினர்களாக உள்ளன.







SDB வங்கியின்
ஹிங்குரான கிளை
மிகவும் துரிதமான மற்றும் பரந்த
சேவையை பெற்றுத்தரும் நோக்கில்
2023 ஆகஸ்ட் 28 ஆம் திகதி முதல்
JSQ 3/B, தொழில்துறை வலயம்,
ஹிங்குரான
எனும் புதிய முகவரிக்கு இடமாற்றப்படும்.
0632 240 245 | 0771 066 028
SDB வங்கி
#உங்களைமதிக்கும்



දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department



பெறுமதிசேர் வரி
(பெ.சே.வ-VAT)
&
சமூக பாதுகாப்பு
உதவுதொகை அறவீட்டிற்கு
(ச.பா.உ.அ.-SSCL)
பதிவுசெய்தல்

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் மற்றும் 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக முறையே பெறுமதிசேர் வரி மற்றும் சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டினை செலுத்த பொறுப்புடையோர் அத்தகைய வரி மற்றும் அறவீட்டிற்கு தங்களை பதிவுசெய்துகொள்ள கோரப்படுகின்றனர்

- பதிவிற்கான விண்ணப்ப படிவத்திற்கு கீழ்வரும் இணைப்பிற்குச் செல்லவும் *http://www.ird.gov.lk/en/Downloads/SitePages/Forms.aspx?menuid=1603*
- பெ.சே.வ. இன் இணையவழி பதிவுக்கு கீழ்வரும் இணைப்பிற்குச் செல்லவும் *https://eservices.ird.gov.lk/Registration/TINRegistration/ShowRequestHeader*
- ச.பா.உ.அ ரூ பெ.சே.வ. என்பவற்றின் எழுத்துமூல பதிவுக்கு – உ.இ.தி. தலைமை காரியாலயத்தில் (2 ஆம் மாடி) வரி பதிவு அலகில் அல்லது ஏதேனும் நகர/பிராந்திய அலுவலகத்தில்

ச.பா.உ.அ இற்கு இணையவழி பதிவு அமுல்படுத்தப்படவில்லை என்பதை கருத்தில் கொள்ளவும்

இவற்றுக்கு ஒழுக தவறுவோர், கீழ்வருவன அடங்கலாக பாதகமான விளைவுகளுக்கு உட்படுவர்

- பதிவானது பின்திகதியிடப்பட்டு அன்றிலிருந்து பொறுப்பு கணிக்கப்படும்.
- குறிபிடப்பட்ட காலப்பகுதி காலாவதி ஆனதன் காரணமாக உள்ளீட்டு வரிகளுக்கான ஏதேனும் கோரிக்கைகள் அனுமதிக்கப்படமாட்டாது.
- இணங்காமைக்கு அந்தந்த சட்டங்களின் தண்டனை ஏற்பாடுகள் (தண்டம் மற்றும்/அல்லது வழக்கு தொடருதல் அடங்கலாக) பிரயோகிக்கப்படும்.

இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு கிரமமாக உள்நாட்டு இறைவரி வலை தளத்தைப் பார்க்கவும்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர்

IRD 1944

வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக
வலைத்தளம் : www.ird.gov.lk https:www.facebook.com/irdcolsl

# ஆளுமை கௌரவிப்பு விழா



மாதா மாதம் ஒரு ஆளுமையை கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 2023.08.30ஆம் திகதி மாலை 3 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டை, ஐந்து லாம்புச் சந்தியிலுள்ள பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் எழுத்தாளரும் கவிஞரும் இலக்கியவாதியுமான திருமதி வாசுகி பி வாசு கௌரவிக்கப்படவுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமரின் முன்னிலையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் கௌரவ அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) ஜெயலட்சுமி உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் கவிஞர்களான நஜுமுல் ஹுசைன், பிரேம்ராஜ், ஈழகணேஷ் ஆகியோரும் கவிதாயினிகளான திருமதி பவானி சச்சிதானந்தன், திருமதி நடராஜா தாமரைச்செல்வி ஆகியோரும் திருமதி வாசுகி பி வாசுவைப் பற்றி கவிதைகள் பாடி கௌரவிக்கவுள்ளார்கள்.

இவ்விழாவை தினகரன், தினகரன் வாரமஞ்சரி, சங்கவி பிலிம்ஸ் பிரைவட் லிமிட்டட், கலைஶ்ரீ கலை மன்றம், அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் என்பன இணைந்து நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.



சர்வதேச இளைஞர் தினத்தினை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் பீ.எம். றியாத்தின் வழிகாட்டலில் கரப்பந்தாட்ட போட்டி அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர்கள் போட்டியில் மோதிக்கொண்டன.

அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழகம் முதலாம் இடத்தைப் பெற்றது இதில் பங்குபற்றிய கழக வீரர்கள் அனைவருக்கும் வெற்றி கிண்ணம் மற்றும் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## குருந்தூர் மலை சர்ச்சைக்கு...

(03 ஆம் பக்கத் தொடர்)

விடயத்தை மையப்படுத்தி பௌத்தர்கள், இந்துக்களிடையே முரண்பாடான நிலைமைகள் வலுவடைவதற்கு இடமளிக்காமல், நிரந்தரமானதொரு தீர்வை காண்பது அவசியம். அதன்படி, இம்மலையின் கீழ்ப் பகுதியிலுள்ள பிரதேசத்தில் தொல்பொருளியல் விடயங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாமல், இரு சமயத் தலங்களை நிர்மாணிப்பதே பொருத்தமானது. குறிப்பாக, மலையின் கீழ்ப் பகுதியில் தலா ஒவ்வொரு ஏக்கர் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்து மற்றும் பௌத்த தலங்களை நிர்மாணிப்பதனூடாக இரு தரப்பினரும் தமது இறை நம்பிக்கைக்கு அமைவாக வழிபாடுகளை முன்னெடுக்க முடியும். இதற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமத்தை முன்னுதாரணமாகக் கொள்ள முடியும். அதன் மூலமாக பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வைக் காண முடியும் என்றார்.

## கிழக்கில் பெருமளவு...

அபிவிருத்தி திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த பெருமளவு காணிகள், வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் வனப்பகுதியாக மீண்டும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாண அபிவிருத்திக் குழு கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற போதே, இவ்விடயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

திருகோணமலை திரியாய விகாரைக்கு 3,065 ஏக்கர் காணிகள் கோரப்பட்டுள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. அந்த வகையில் பாராளுமன்ற தெரிவிக்குழு மூலம் அந்த காணிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு 2,65 ஏக்கர்களை வழங்குவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரிசிமலை விகாரைக்கு 100 ஏக்கர் காணியை வழங்குவதற்கு விடுக்கப்பட்டிருந்த வேண்டுகோள் கவனத்தில் எடுக்கப்பட்டு, அவ்விகாரையின் தேரருக்கு அக்காணியை வழங்குவதற்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பொரலுகந்த ரஜமகா விகாரைக்கு 27 பேர்ச்சஸ் காணி கோரப்பட்டுள்ளது. அந்தப் பகுதியை புனித பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்காக இக்காணி கோரப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 2015 ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த அரசாங்கம் மாற்றமடைந்த பின்னர், பிரிவினைவாத அழுத்தங்கள் காரணமாக ஏற்கனவே இனங்காணப்பட்டுள்ள காணிகளை மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பில் மாவட்ட செயலகத்தில் வினவப்பட்டது. அவற்றை மீண்டும் அளவை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், ஆர்.ஏ டி.சிறிசேன என்பவர் சமர்ப்பித்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் கவனத்திற்கும் இது,கொண்டு வரப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 'அஸ்வெசும'...

மூலம் குறைந்தவருமானம் பெறும் 20 இலட்சம் குடும்பங்களுக்கு நலன்புரி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான 10 இலட்சம் மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 1,20,000 ஆட்சேபனைகளும் கோவைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன. ஆட்சேபனைகள் தொடர்பில் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான நடவடிக்கைகள் நிறைவுபெற்றதும் அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும். இந்த கொடுப்பனவுக்கான விண்ணப்பங்களில் சில சிக்கல்கள் காணப்பட்டன. ஒரே அடையாள அட்டை இலக்கத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று வங்கிக் கணக்குகளில் சிக்கல், வங்கி கிளைகளின் இலக்கம் குறிப்பிடப்படாமை போன்ற குறைபாடுகள் அவற்றில் காணப்பட்டன. இந்தக் கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கைகளை மேலும் தாமதிக்க முடியாது என அரசாங்கம் கருதியுள்ளதால் இன்று முதல் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையிலேயே இனங்காணப்பட்டுள்ள 15 இலட்சம் குடும்பங்களில் முதற்கட்டமாக 8 இலட்சம் குடும்பங்களுக்கு இன்று முதல் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சினமன் குழுமத்தில்....

இந்நபர், பல்வேறு நாடுகளில் வேலை வாய்ப்புகளை பெற்றுத் தருவதாக பல, அப்பாவிகளிடமிருந்து பணம் வசூலித்து மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இந்நபருக்கும் Cinnamon Group அல்லது அதன் துணை நிறுவனங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லையென்பதை தெளிவுபடுத்த விரும்புவதாகவும் சினமன் குழுமம் அறிவித்துள்ளது.

"இந்த தனிநபரின் அங்கீகரிக்கப்படாத செயல்கள் மற்றும் எங்கள் நிறுவனத்துடன் தொடர்புடைய தவறான கூற்றுக்கள் ஆகியவற்றால் நாங்கள் ஆழ்ந்த கவலையடைகிறோம்" என சினமன் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி அபி கந்தசாமி தெரிவித்துள்ளார். "தொழில்வாண்மை,மிக உயர்ந்த தரம் மற்றும் நேர்மையை பேணுவதற்கு நாங்கள் உறுதியுடன் இருக்கிறோம். மேலும் இந்த சூழ்நிலையை எதிர்கொள்ள நாங்கள் உடனடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்."என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கொழும்பில் முறையான பொலிஸ் முறைப்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இம்மோசடி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான நபரை அடையாளம் காண, முனைப்புடன் செயல்பட்டு வருவதாகவும் சினமன் குழுமம் தெரிவித்துள்ளது.

## 2ஆம் கட்ட கல்வி...

நடவடிக்கைகள், இன்று (28) ஆரம்பமாகின்றன.

இன்றைய தினம் ஆரம்பமாகும் இரண்டாம் தவணைக்கான இரண்டாம் கட்ட கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் அக்டோபர் 27ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் என்றும் கல்வி யமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

அதேவேளை, அரசாங்க பாடசாலைகளின் இரண்டாம் தவணைக்கான முதலாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் கடந்து ஜூலை மாதம் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு அந்த கல்வி நடவடிக்கைகள் கடந்த ஆகஸ்ட் 16ஆம் திகதி வரை தொடர்ந்தன. அந்த வகையில் கடந்த 16ஆம் திகதி அரசாங்க பாடசாலைகளுக்கு 10 நாள் விடுமுறை வழங்கப்பட்டு இன்று முதல் மீண்டும் கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, கண்டி ரந்தோலி பெரஹெரவையொட்டி மூன்று தினங்களுக்கு கண்டி நகரில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் நேற்று இந்த அறிவிப்பை விடுத்துள்ளதுடன் இன்றைய தினம் 28, நாளை 29ஆம் திகதி மற்றும் 31ஆம் திகதி என மூன்று தினங்களுக்கு இவ்விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் எதிர்வரும் 30ஆம் திகதி போயா தினம் என்பதால் அன்றைய தினமும் பாடசாலை விடுமுறை தினம் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியா, சீனாவுடன்...

யைப் பேணுவதற்காக 'நிலையான செயற்பாட்டுப் பொறிமுறை' வரைவொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அது விரைவில் அமுலாக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு அடுத்த வாரம் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் விஜயம் செய்யவுள்ளார்.அத்தோடு, ஒக்டோபர் 25 சீன ஆய்வுக்கப்பலான 'ஷி யான் 06' வருகை தரவுள்ளது.

இந்நிலைமையால்,இரு நாடுகளின் அதிகாரப் போட்டி அழுத்தங்களுக்குள் இலங்கை சிக்கி, இருதரப்பு உறவுகளில் பதற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக வெளியான தகவல்கள் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை இலங்கை பேணுகிறது. இரு நாடுகளும் இலங்கைக்கு நீண்டகால ஒத்துழைப்புக்களையும் வழங்கி வருகின்றன.

இவ்வாறான நிலையில், சீனாவின் ஆய்வுக்கப்பல் வருகை, அதற்கு முன்னதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் வருகை என்பன இருதரப்பு உறவுகளில் எவ்விதமான பதற்றங்களையோ பாதிப்புக்களையோ ஏற்படுத்தவில்லை. இவ் விடயங்கள் அனைத்தும் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் இந்தியாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்திருக்கிறார். அதேபோன்று சீனாவுக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன விஜயம் செய்திருக்கிறார்.

ஜனாதிபதியின் விஜயத்தின்போது எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கு அமைவாக, திருகோணமலையை பொருளாதார அபிவிருத்தி வலயமாக மேம்படுத்துவதற்கு இந்தியாவும் பங்களிக்கவுள்ளது. எரிபொருள், எரிசக்தி விடயத்திலும் அந்நாடு உடன்பாடுகளை எட்டியுள்ளது. அதற்கு அமைவாகவே, செயற்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்காக எதிர்காலத்தில் இந்தியாவிலிருந்து உயர்மட்ட தரப்பினர் இலங்கைக்கு விஜயங்களை மேற்கொள்ளவுள்ளனர். ஆகவே, அவ்விதமான விஜயங்கள் குழப்பங்களை ஏற்படுத்தப்போவதில்லை. இலங்கையானது அணிசேராக் கொள்கையை பின்பற்றி வரும் அதேநேரம், இந்தியா, சீனா ஆகிய நாடுகளுடன் மிக நெருக்கமாக இணைந்து செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## வங்கிகளின் வட்டி....

என்றும் கடனட்டைகளுக்கான வருடாந்த வட்டி 28 வீதமான குறைக்கப்பட வேண்டும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன் வங்கி மேலதிகப் பற்று(OD) வீதத்தை 23 வீதமாக குறைக்கவேண்டும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. மத்திய வங்கியின் நிதிச் சபை மேற்கொண்டுள்ள கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு இணங்க, வட்டி வீதம் இரண்டு தடவைகள் குறைக்கப்பட்டன. இதன் பிரதிபலனை வங்கி வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலேயே மேற்படி சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி வெளியிட்டுள்ள இந்த சுற்றறிக்கைக்கு அமைய வர்த்தக வங்கிகள் வட்டி வீதத்தை குறைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். வர்த்தக வங்கிகள் அவ்வாறு செயல்படுகின்றனவா என்பதை தொடர்ந்து கண்காணிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி...

முஷார்ரப்முதுநபீன் தெரிவித்தார்.

பொத்துவில் அருகம்பே பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அண்மையில், நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், சிங்கப்புரின் லீகுவான்யு அந்நாட்டின் வளர்ச்சிக்காக பல தீர்மானங்களை எடுத்தபோது மக்கள் அதை, மிகக்கடுமையாக விமர்சித்தனர்.

ஆனால், அன்று லீகுவான்யு எடுத்த தீர்மானங்கள் நாட்டின் நலனுக்காகத்தான் என்பதை பின்னர் எல்லோரும் புரிந்து கொண்டனர். இன்று சிங்கப்பூரைச் செதுக்கிய சிற்பியாக அவரை அந்நாட்டு மக்கள் போற்றுகின்றனர்.

அந்த வகையில்தான், நமது நாட்டின் முன்னேற்றத்திற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனரஞ்சகமில்லாத பல தீர்மானங்களை எடுத்தார். அந்தத் தீர்மானங்களை பலரும் விமர்சித்தனர். இன்று அந்தத் தீர்மானங்கள்தான் நாட்டை மிக வேகமாக முன்னோக்கி நகர்த்துகிறது. இதை எல்லோரும் புரிந்து கொள்வதை இன்று பார்க்கிறோம். 50 வருட பாராளுமன்ற அரசியலை அனுபவமாகக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம், நாட்டு மக்களும், சர்வதேசமும் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளது. அந் நம்பிக்கை இன்று வெற்றியடைந்து வருகிறது. ஜனாதிபதியும் நாங்களும் பினாட்ஸ் பாம் மற்றும் சேர்பிங் பொய்ண் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டோம். அங்கு மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் செயல்திட்ட வடிவத்தை பார்த்து வியந்தோம். இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலந்துரையாடலில் உங்கள் பிரச்சினைகள், சவால்கள் தொடர்பிலும் அவருக்கு தெளிவான பார்வை உள்ளது. அதனால் நிரந்தரத் தீர்வுக்கான முன்னெடுப்புகள் , ஒருங்கிணைப்பை வெற்றிகரமாக செய்ய வேண்டும் என்பதையே இங்கு ஆராயவேண்டியுள்ளது என்றார்.

## கண்டி மாநகரில் பல்வகை...

(03 ஆம் பக்கத் தொடர்)

ஒதுக்கீட்டின் கீழ் ஐந்து மில்லியன் ரூபா செலவில் கண்டி நகர புகையிரத நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள கண்டி பிரதான புகையிரத நிலையம் நகரின் ஒரு மூலையில் அமைந்துள்ளதால், கண்டியிலிருந்து மாத்தளை மற்றும் மாத்தளையிலிருந்து கண்டிக்கு வரும் பயணிகளுக்கு புதிய புகையிரத நிலையத்தின் நிர்மாணமானது பெரும் உதவியாக இருக்கும்.

மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 80 மில்லியன் ரூபா செலவில் கண்காணிப்பு முகாமையாளர் கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

## மருந்துகள்...

அந்த மருந்துகள் அனைத்தும் உடனடியாக உத்தரவிடப்பட்டு இறக்குமதி செய்யப்படுமென்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. இந்திய கடன் உதவி திட்டத்தின் கீழ் அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்யப்படுகிறது.

## திருமண வைபவத்தில்...

சேர்ந்த ஒருவரின் திருமண நிகழ்வுக்கு ஏனைய நபர்களுடன் ஹொரண கோனாபொல பிரதேசத்தில் உள்ள விழா மண்டபம் ஒன்றிற்கு சென்றுள்ளார். இவர்கள், அங்கு உல்லாசமாக நடனமாடியதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

உயிரிழந்த யுவதி, மேலும் இரு யுவதிகளுடன் நடனமாடிக் கொண்டிருந்த போது அங்கிருந்து வெளியேறி, சிறிது நேரத்தில் சுகயீனமடைந்து ஹொரணையில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு காரில் அழைத்துச் செல்லப்பட்டார். இதையடுத்து அந்த வைத்தியசாலையின் வைத்தியர்கள் அவரை ஹொரண வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுமாறு அறிவுறுத்தியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். ஹொரணை வைத்தியசாலைக்கு யுவதியை அழைத்துச் சென்ற பின்னர், மேற் கொண்ட பரிசோதனையில், அவர் உயிரிழந்ததாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

யுவதியின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனையின் போது சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்கள் மற்றும் மருத்துவ அறிக்கைகளின் அடிப்படையில், ஹொரணை ஆதார வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரியான சமாதான நீதிவான் சுமேத குணவர்தன, மாரடைப்பால், சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டு மரணம் நிகழ்ந்துள்ளதாக தீர்மானித்தார்.

ஹொரணை ஆதார வைத்தியசாலையின் நிபுணத்துவ சட்ட வைத்தியர் பிரணித செனவிரத்ன, பிரேத பரிசோதனையை மேற்கொண்டார்.

மொரகஹாஹேன பொலிஸ் நிலைய பிரதான பரிசோதகர் துசித விக்கிரமரத்னவின் பணிப்புரையின் பேரில், பொலிஸ் சார்ஜன்ட் உபாலி சாட்சியங்களை வழிநடத்தினார்.

## மகோற்சவத்தில்...

அவ்விழாவன்று (26) மாலை விநாயகருக்கு படைக்கப்பட்ட மாம்பழமொன்று கோவில் வளர்ச்சி நிதிக்காக ஏலத்தில் விடப்பட்டது. இதன்போது, பலத்த போட்டிக்கு மத்தியில் 1,62,000 ரூபாவுக்கு மாம்பழம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது. இம் மாம்பழத்தை வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வசிக்கும் ச.சிந்துஜா என்பவர் 1,62,000 ரூபா செலுத்தி ஏல விற்பனையில் கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரு பஸ்கள்...

கொழும்பிலிருந்து கண்டி நோக்கி பயணித்த பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் 13 பேர் காயமடைந்தனர். இவர்களில் 04 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 154 அரசியல்வாதிகளுக்கு....

பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில், அரசியல்வாதிகளின் பட்டியலும், அவர்கள் ஒப்படைக்கத் தவறிய ஆயுதங்கள் பற்றிய விபரமும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோனால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஆவணங்களின்படி, துப்பாக்கிகள் பெரும்பாலும் 09 எம்எம் பிஸ்டல்கள், ரிவால்வர்கள் மற்றும் 12 போர் ஷொட்கன்கள். சில அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்டன. தங்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளை திருப்பிக் கொடுக்கத் தவறிய சிலர், தற்போது உயிருடன் இல்லை. இராஜாங்க அமைச்சர் தென்னகோன் பாராளுமன்றத்தில் தெரிவித்ததாவது,

இந்த துப்பாக்கிகள் எதற்காக வழங்கப்பட்டன என்பதை குறிப்பிடுவதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் எந்த ஆவணங்களும் இல்லை, ஆனால் 19801990 காலப்பகுதியில் நாட்டில் நிலவிய சூழ்நிலையால், இது அரசியல்வாதிகளின் பாதுகாப்புக்காக இருக்கலாம். அழகப்பெரும எழுப்பிய மற்றுமொரு கேள்விக்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர்,

1990 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு அமைச்சு எந்த தானியங்கி துப்பாக்கிகளையும் வழங்கவில்லை என்றும் கூறினார்.

## அதி உயர் தொழில்...

விமான நிலையத்தில் அதிஉயர் தொழில்நுட்ப தொடர்பாடல் கட்டமைப்பு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் செயற்பாடுகளுக்காக இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்த 20 வருட காலங்கள் பழைமையான தொடர்பாடல் கட்டமைப்பு விலக்கிக்கொள்ளப்பட்டு உலகத் தரம்வாய்ந்த உயர் தொழில்நுட்ப விமான முன்னெடுப்பு தொடர்பாடல் கட்டமைப்பு தொகுதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

670 மில்லியன் ரூபா செலவில் ஐரோப்பிய தரத்திற்கமைவான இத்தாலியின் உற்பத்தியிலான இந்த தொலைத்தொடர்பு கட்டமைப்பை நேற்றைய தினம் துறைமுகங்கள் கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆரம்பித்து வைத்தார்.

இந்த அதிஉயர் தொலைத்தொடர்பு கட்டமைப்பை செயற்படுத்துவதன் மூலம் விமான பயண கட்டுப்பாட்டாளர்களுக்கு பிரதான கட்டுப்பாட்டு பகுதி வாயிலிலிருந்து விமானத்திற்கும் அனைத்து விமான நிலையங்கள் மற்றும் ரேடார் மத்திய நிலையங்களுக்கும் உடனடியாக தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையிலிருந்து....

03 பேர் கைது செய்யப்பட்டனர்.

இராமேசுவரத்திலிருந்து இலங்கைக்கு கடல் வழியாக தங்கம், கஞ்சா, கடல் அட்டைகள், பீடி இலைகள் உட்பட பல்வேறு பொருட்களை கடத்தி செல்லும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. இதையடுத்து கடத்தல்களை தடுக்க இந்திய கடலோர பாதுகாப்பு படை பொலிஸார் 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறது.

இலங்கையிலிருந்து படகு மூலமாக தங்கம் கடத்தி வரப்பட்டு பின்னர் அரசு பஸ்ஸில் சென்னைக்கு கொண்டு வரப்படுவதாக

மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு

தகவல் கிடைத்தது.இதையடுத்து,இவர்கள் பயணம் செய்த பஸ்ஸை திருச்சி அருகே மத்திய வருவாய் நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினர். சந்தேகப்படும் வகையில் இருந்த தம்பதி உட்பட 03 பேரை பிடித்து விசாரணை நடத்தியதில் முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்தனர். அவர்கள் கொண்டு வந்த பையை சோதனை நடத்தியதில் 09 கிலோ 765 கிராம் தங்க கட்டிகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் 06 இலட்சம் ரொக்க பணமும் மற்றும் மூன்று கார்களும் பறிமுதல் செய்யப்பட்டன .

பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தின் இந்திய ரூபாயின் மதிப்பு 05 கோடியே 89 இலட்சத்து 66 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. தம்பதி உள்பட 3 பேரையும் அதிகாரிகள் கைது செய்தனர்.

## பொலிஸாரை....

மத்தியிலும், தெற்கில் சிங்களவர்கள் மத்தியில் இனவாதக் கருத்துக்களை விதைத்து, கஜேந்திரகுமார் தனது அரசியலை முன்நகர்த்துகிறார். கொழும்பில் மக்களின் எதிர்ப்புக்குப் பயந்த அவர், முற்கூட்டியே பெருமளவு பொலிஸாரைத் தனது வீட்டுக்கு வரவழைத்து பாதுகாப்புக்கு நிறுத்தியுள்ளார். கஜேந்திரகுமாருக்குத் துணிவிருந்தால், பாதுகாப்புக்கு நிறுத்தியுள்ள பொலிஸாரை அகற்றிவிட்டு மக்கள் முன்னிலையில் விவாதம் செய்ய வரட்டும் எனவும் உதய கம்மன்பில எம்.பி கூறினார்.

# தேசிய ஒலிம்பிக் குழுவுடன் Crysbro இணைவு Next Champஇன் இரண்டாம் கட்டம் ஆரம்பம்



Crysbro சுமார் அரை தசாப்தங்களுக்கு முன்னர் Next Champ பற்றிய சிந்தனையை உருவாக்கியது, ஆனால் அது 2019 இல் NOC SL இன் பிரவேசத்துடன் முழு அளவிலான கனிஷ்ட தடகள செயற்பாடாக உருவெடுத்தது CRYSBRO Next Champ முன்முயற்சியானது, உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பிரகாசிக்க இருபது புதிய இளம் விளையாட்டு வீரர்களுக்கு இந்த திட்டம் வழியமைத்தமை குறிப்பிடத்தக்கது.

முதல் கட்டத்தின் முடிவில், எதிர்பார்க்கப்பட்ட அளவு சாதகமான பலன் கிடைக்கபெற்றது.

NOC Sri Lanka CRYSBRO Next Champ திட்டத்தின் இரண்டாம் கட்டம், கிராமப்புறங்களில் வசிக்கும் இலங்கையின் இளம், அர்ப்பணிப்பு மற்றும் சுறுசுறுப்பான திறமைசாலிகளுக்கு களம் அமைக்கப்பட்டுள்ளது. இம்முறை கிராமப்புறங்களில் உள்ள நம்பிக்கைக்குரிய விளையாட்டு வீரர்களைக் கொண்ட 13 பேர் அடங்கிய பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து NOC இலங்கையின் தலைவர் சுரேஷ் சுப்பிரமணியம்,

எங்கள் முதல் கட்டத்தின் மகத்தான வெற்றியைப் பார்த்தபோது, இலங்கையில் ஏராளமான திறமையும்,சுறுசுறுப்பு கொண்ட இளைஞர்கள் இருப்பதை நாங்கள் அறிவோம்.மேலும் 13 திறமையான விளையாட்டு வீரர்களை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம் என்பதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறோம்.இது நாட்டிலுள்ள மிகவும் தகுதியான மற்றும் திறமையான இளைஞர்களின் திறன்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. Crysbro முயற்சியில் எங்கள் பங்காளிகளுடன் மீண்டும் இணைந்ததற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம், மேலும் ஒவ்வொரு புதிய கட்டத்திலும் இந்த பயனுள்ள உறவை நீட்டிக்க எதிர்பார்க்கின்றோம்."

NOC Sri Lanka CRYSBRO Next Champ நிகழ்ச்சித் திட்டமானது இளம் மற்றும் ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு ஆதரவளித்து, அவர்களுக்கு உணவுப் பொருட்கள், உடைகள், விளையாட்டு உபகரணங்கள், பயிற்சி மற்றும் மாதாந்த ஊதியம் ஆகியவற்றை வழங்கி அவர்களை வெற்றிகரமான விளையாட்டு வாழ்க்கையை நோக்கி உந்துவிப்பதுடன், தேசத்திற்கு பெருமை சேர்க்கிறது.

NOC Sri Lankaவின் முதல் கட்டம் – CRYSBRO Next Champ முன்முயற்சியானது 2022 ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்ற நெத்மி அஷின்சா போன்ற உயர்திறமையான விளையாட்டு வீராங்கனைகளைக் கண்டுபிடித்தது.இது பொதுநலவாய விளையாட்டு 2022 இல் மல்யுத்த போட்டியில் இலங்கைக்கான முதல் பதக்கத்தை வென்றார். மேலும், ஆசிய தடகள சாம்பியன்ஷிப் 2023 இல் 800 மீட்டர் பெண்கள் Sprinting போட்டியில் தருஷி கருணாரத்ன தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொடுத்தார். இத்திட்டம் தவிர, பல Crysbro புலமைப் பரிசில்களைப் பெற்றவர்கள் வெளிநாடுகளில் தங்கள் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னை நாதஸ்வாமி ஆலயத்தில் வருடாந்த மஹோற்சவத்தில் வெள்ளிக்கிழமை (25) தீ மிதிப்பு நடைபெற்றது. *(படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)*

# சென்கூம்ஸ் தோட்ட இளைஞன் ஆற்றில் தவறி விழுந்து பலி

***லிந்துலை நிருபர்***

*லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென் கூம்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த 20 வயது இளைஞன் ஒருவர் ஆற்றில் தவறி விழுந்து நீரில் மூழ்கியதால் மரணமடைந்துள்ளார்.*

*குறித்த இளைஞர் அருகில் உள்ள காட்டு பகுதிக்கு விறகு வெட்ட சென்று பின்னர் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது வோல்ட் ரீம் தோட்டத்திற்கு அருகில் உள்ள ஆற்றில் தனது கால்களை கழுவுவதற்காக இறங்கிய போது தவறி விழுந்து மரணித்துள்ளார்.இச்சம்பவம் நேற்று பகல் 1:30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தை அறிந்த மக்கள் பொலிசாருக்கு உடனடியாக தகவலை வழங்கியுள்ளனர். அதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிசார் பிரதேச மக்களின் உதவியோடு நீரில் மூழ்கிய இளைஞனை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். சுமார் மூன்று மணித்தியாலங்களின் பின் நீரில் மூழ்கிய இளைஞன் சடலமாக மீட்கப்பட்டு மரண பரிசோதனைகளுக்காக லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது சம்பவம் தொடர்பான விசாரணைக லிந்துலை பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர்.*

**அல் பலாஹ் மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

ஏ.எச்.எம். பௌசி ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், "அல் பலாஹ் மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

(அ) எல்லா மட்டங்களிலும் திறன் விருத்திக்கான கல்வியறிவை ஊக்குவித்தல்

(ஆ) அறிவியற் கற்கைகளின் முன்னேற்றத்திற்காக தகவல் தொழிநுட்ப நிலையங்களைத் தாபித்தல்

(இ) வேலையற்றவர்களுக்கென சுயதொழில் வாய்ப்புகளை ஏற்பாடு செய்தலும்

பிறவும்

ஏ.எச்.எம்.பௌசி
பாராளுமன்ற உறுப்பினர்

**ஜாதிக லொதரැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — வெள்ளிக்கிழமை 2023.08.25 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB NATIONAL LOTTERIES**

**மஹஜன சம்பத**

| சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|
| 5217 | ரூ. 22,155,536.00 | G | 2 6 8 5 8 7 |

**Mega POWER**

| சீட்டிழுப்பு இலக்கம் | திகதி | Double Chance | அடுத்த மெகா சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கங்கள் | அடுத்த பவர் சுப்பர் பரிசு | அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1565 | 25/08/2023 | 46478 | ரூ.405,451,344.00 | S | 23 | 45 58 63 78 | ரூ. 10,000,000.00 | ரூ. 10,000,000.00 |

**தன நிதானய**

| தேதி | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விஷேசட ஆங்கில எழுத்து | லக்ஷபதி Double Chance இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 2023/08/25 | 1247 | ரூ. 106,660,536.80 | O | 15 17 54 76 | O | 25332 |

**கொவிசெத Govisetha**

| சீட்டிழுப்பு இலக்கம் | சீட்டிழுப்பு திகதி | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விசேட எழுத்து | இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 3459 | 2023.08.25 | Rs. 60,644,950.00 | H | 46 51 55 69 | H | 04593 |

**ராசி சுப பலன் Handahana**

| சீட்டிழுப்பு திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் | விசேட இலக்கினம் |
|---|---|---|---|---|---|
| 2023-08-25 | 526 | ரூ. 2,994,662.80 | விருச்சிகம் | 08 19 24 62 | விருச்சிகம் |

**லக்கி Lucky 7**

| திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | வெற்றி இலக்கினம் | L7 இலக்கம் | வெற்றி இலக்கங்கள் | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு |
|---|---|---|---|---|---|
| 25.08.2023 | 0043 | துலாம் | 0 1 | 0 5 5 7 6 1 | ரூ. 10,177,752.08 |

**ஜாதிக லொதரැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — சனிக்கிழமை 2023.08.26 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB NATIONAL LOTTERIES**

**மஹஜன சம்பத**

| சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|
| 5218 | ரூ. 22,199,160.00 | Z | 7 2 2 0 0 9 |

**Mega POWER**

| சீட்டிழுப்பு இலக்கம் | திகதி | Double Chance | அடுத்த மெகா சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கங்கள் | அடுத்த பவர் சுப்பர் பரிசு | அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1566 | 26/08/2023 | 42963 | ரூ.405,624,376.00 | Q | 06 | 04 07 11 60 | ரூ. 10,000,000.00 | ரூ. 10,000,000.00 |

**தன நிதானய**

| தேதி | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விஷேசட ஆங்கில எழுத்து | லக்ஷபதி Double Chance இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 2023/08/26 | 1248 | ரூ. 106,660,536.80 | M | 12 34 56 75 | M | 25662 |

**கொவிசெத Govisetha**

| சீட்டிழுப்பு இலக்கம் | சீட்டிழுப்பு திகதி | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விசேட எழுத்து | இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 3460 | 2023.08.26 | Rs. 60,790,442.00 | V | 10 17 52 66 | V | 02103 |

**ராசி சுப பலன் Handahana**

| சீட்டிழுப்பு திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் | விசேட இலக்கினம் |
|---|---|---|---|---|---|
| 2023-08-26 | 527 | ரூ.2,500,000.00 | கடகம் | 10 22 48 62 | கடகம் |

**லக்கி Lucky 7**

| திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | வெற்றி இலக்கினம் | L7 இலக்கம் | வெற்றி இலக்கங்கள் | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு |
|---|---|---|---|---|---|
| 26.08.2023 | 0044 | கடகம் | 0 8 | 8 1 8 1 5 7 | ரூ. 10,209,394.24 |


# தேசிய பௌதிக திட்டம் மற்றும் கொள்கை -2048 மீதான கருத்துக் கணிப்பு

2000ஆம் ஆண்டு 49ஆம் இலக்க நகர மற்றும் நாட்டுத் திட்டமிடல் (திருத்தச் சட்டம்) சட்டத்தின் பகுதி 5(அ) மற்றும் (ஆ) ஆகியவற்றிற்கமைய தயாரிக்கப்பட்ட தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் - 2048 இற்கான அனுமதியை, பொதுமக்களின் கருத்துக் கணிப்பிற்கு உட்படுத்துவதற்கான நிபந்தனையின் கீழ், தேசிய பௌதிக திட்டமிடல் சபை வழங்கியுள்ளது.

**நிகழ்நிலைப்படுத்தப்பட்ட தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம்– 2048**

(2023)

தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம்
5ஆம் மாடி, செத்சிரிபாய, பகுதி -1
பத்தரமுல்லை
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சு

தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் -2048 ஆனது, 5ஆம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்லையில் அமைந்துள்ள, தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களத்தில், 28.8.2023இல் இருந்து 30 நாள் காலப்பகுதியில் (வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்கள் தவிர்ந்த) மு.ப 8.30இல் இருந்து பி.ப 4.15 வரை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படும். இதற்கு மேலதிகமாக, இந்த ஆவணமானது தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.nppd.gov.lk) 03 மொழிகளிலும் தரவேற்றம் செய்யப்பட்டிருக்கும்.

தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் - 2048 மீதான தங்கள் கருத்துக்களை எந்தவொரு பொதுமகனும் 28.8.2023இல் இருந்து 30 நாட்களிற்குள், தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் எழுத்துமூலம் சமர்ப்பிக்கமுடியும்.

பணிப்பாளர் நாயகம்
தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம்
5ஆம் மாடி, செத்சிரிபாய, பகுதி - 1
பத்தரமுல்லை.
தொலைபேசி: 0112-077180 / 0112-872048
தொலைநகல்: 0112872061
இணையம்: www.nppd.gov.lk



# ஆவணி அவிட்டம்

**அந்தணர்களாக பிறந்த ஒவ்வொருவரும் எட்டு வயதில் உபநயனம் பூணூல் சடங்கை நடத்திக் கொள்ள வேண்டும். அதிபுத்திசாலியாக, மஹா மேதாவியாக இருந்தால் ஐந்து வயதில் கூட பூணூல் போட்டு விடலாம். பதினாறு வயதிற்கு மேல்உபநயனம் செய்வது என்பது பேரளவுக்கு மாத்திரமே என்று சாஸ்திரங்கள்கூறுகின்றன.**




உபநயனம் என்பதில் இரண்டு காரியங்கள் இருக்கின்றன. ஒன்று பூணூல் போட்டது முதல் ஆசாரங்கள், ஒழுக்கங்கள் இன்றியமையாதது. ஆகவே பூணூல் சமஸ்காரம் என்பது மனிதனை மனித வாழ்க்கையில் ஆன்மிக உயர்நிலை அடைவதற்காக ஏற்பட்டது.

இரண்டாவது, உபநயனத்தில் பூணூல் போட்டுக் கொள்வது என்பது பிரதானமாக பேசப்படுகிறது. ஆனால் உபநயனத்தின் முக்கிய அம்சம் ஒரு பெரியோரின் மூலம், ஒரு குருவின் மூலம், அல்லது தகப்பனாரின் மூலம் வேதோக்தமான காயத்ரீ மந்திரத்தை ஏற்றுக்கொள்வதே முக்கிய நோக்கமாகும். அதற்கு அங்கமாகத்தான் சுத்தமாயும், பவித்ரமாயும் பூணூல் போட்டுக் கொள்வது. இதை வைத்துத்தான் உபநயனம், ப்ரம்மோபதேசம் என்று சொல்லுகிறோம்.

உப நயனம் என்ற இரண்டு சொற்களின் அர்த்தம் காயத்ரீ மந்திரத்தைக் கற்றுக் கொள்வதற்கு குருவின் சமீபம் அழைத்துச் செல்லுதல் என்று பொருள்.

இந்த வேதம் படிப்பதற்கு காலங்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. தக்ஷிணாயனம் என்று சொல்லக்கூடிய ஆறு மாதங்கள், வேதம் சொல்லக் கூடிய காலங்கள்.

உத்ராயணத்தில் அந்த வேதத்திற்கு அர்த்தம் தெரிந்து கொள்வதற்குசம்ஸ்க்ருதத்தையும், உப அங்கங்களையும், தர்ம சாஸ்திரத்தையும்தெரிந்துகொள்ளவேண்டும்.

தை,மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி இந்த ஆறு மாதங்களும் உத்தராயணம். ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை,

மார்கழி இந்த ஆறுமாதங்கள் தக்ஷிணாயனம். ஆவணி மாதத்தில் அவிட்ட நட்சத்திரத்தில் வரக்கூடியது ஆவணி அவிட்டம். இதையே எல்லோரும் பொதுவாக ஆவணி அவிட்டம் என்பார்கள். ஆடிமாத அமாவாசைக்கு பிறகு

ச்ராவண மாசம் என்பத சாந்திரமான கணக்குப்படி வரும். ச்ராவண மாசத்தில் ச்ரவண நட்சத்திரத்தன்று ஒரு தோஷமும் இல்லாமல் இருந்தால் யஜுர் வேதிகள் ஆவணி அவிட்டம், உபாகர்மா செய்து கொள்வார்கள்.

சாம வேதத்திற்கு ஆவணி ஹஸ்தம் எடுத்து இருக்கிறது. இப்படி ஒவ்வொரு வேதத்திலும் ஒவ்வொரு நட்சத்திரத்திலும் மாறி வந்தாலும் ருக் வேதம்தான் முதன்மையாக இருப்பதினால் அந்த ஆவணி அவிட்டத்தையே எல்லோரும்

உபாகர்மா என்று பெயர் வைத்து விட்டார்கள். இந்த உபாகர்மா அன்று தக்ஷிணாயத்தில் ஆறுமாதத்திற்கான தபாடங்களை படித்து முடித்து உத்தராயண ஆரம்பத்தில் அந்த வேதத்திற்கான அர்த்தங்களையும், தர்ம சாஸ்திரத்தையும்

தெரிந்து கொள்ள வேண்டும். இப்படி முடியாதவர்கள் ஆவணி அவிட்டத்தில் தாங்கள் படித்த வேத பாகத்தை பூர்த்தி செய்து கொண்டு, ஆவணி அவிட்ட உபாகர்மாக்களைச் செய்து கொண்டு திரும்பவும் அன்று வேத பாடங்களை

ஆரம்பம் செய்ய வேண்டும்.

இதுவரை வேத பாடங்களைப் படித்து வந்ததில் உள்ள குறைகளை நீக்குவதற்கும், மேலும் நல்ல பலத்துடன் படிப்பதற்கு காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.




## மானுடவியல்

### சுந்தரர்



130

சிவபெருமான் இடப வாகனத்தின் மேல் எழுந்தருள ஆரூரருக்குக் காட்சி தந்து, நீ முன்பே நமக்குத் தொண்டன்; துன்ப மிக்க வாழ்க்கையோடுள்ள தொடர்பினை அறுப்பதற்காக முதியவர் வேடத்தில் வந்து உம்மைத் தடுத்தாட் கொண்டோம். “நம்மை வன்மை பேசினமையால் நீ வன் தொண்டன் என்ற பெயருக்கு உரியாய்; நமக்கு அர்ச்சனைப் பாட்டாகத் தமிழ்ப் பதிகங்கள் பாடுவாயாக என்று அருளினார். ஆரூரர், நாம் “எம்பெருமானைப் பாடுமாறு அறியேனே” “என உரைக்க, “நம்மைப் பித்தன்” என்றாய், அதையே வைத்துப் பாடுக என்று இறைவன் அருள, “பித்தா பிறைசூடி” என்ற முதல் திருப்பதிகத்தை இந்தளப் பண்ணில் அமைத்துப் பாடினார்.



சுந்தரர் தமது வாழ்க்கையின் திருப்பு முனையாக அமைந்த இந்நிகழ்ச்சியினைத் தொடர்ந்து சிவபெருமானைத் தொழுவதே தமது தொண்டெனக் கருதி, திருத்துறையூர், திருநாவலூர், சிதம்பரம் முதலான பல திருத்தலங்களுக்கும் சென்று இறைவனைப் புகழ்ந்துப் பாடினார். தம் பாடல்களில் இறைவனைத் தோழமை உணர்வுடன் கடிந்தும் பாடியுள்ளார். இவ்வாறான பாடல்களே “நிந்தாஸ்துதி கீர்த்தனைகள் “ என்ற இசைப் பாடல் வகைப்பாட்டுக்கு ஆதாரமாகத் திகழ்ந்துள்ளன.

சுந்தரர் வாழ்க்கையில் அற்புத நிகழ்வுகள்

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் போன்று சுந்தரர் வாழ்க்கையிலும் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன.

1. திருவாரூரில் இறைவன் திருவருளால் நெல் மலையும் அவற்றை பரவையார் வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்குரிய ஆட்களையும் தருவித்தமை.

2. திருக்கருகாவூரில் வெயிலின் கொடுமையைத் தணித்தற் பொருட்டு ஒரு குளிர்ந்த பந்தல் உருவானது. சுந்தரருக்கு உணவும் தண்ணீரும் சிவபெருமானே அந்தணர் வடிவம் கொண்டு கொடுத்தமை. (தொடர்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 51



அந்த கடவுளின் கிருபையை பெற, ஆதாரமாக இருப்பது ஆண்மை பொருந்திய உழைப்பு மட்டுமே. அனைத்தும் துறந்து ஆண்மையுடன் கூடிய உழைப்பை மேற்கொண்டவனுக்கு, கடவுள் அருள்வார் அல்ல அருளியே தீர வேண்டும். எனவே உழைப்பை பராமாத்மா விரும்புவார். உழைத்தவர் உயர்வார். உழைப்பது அவமானமல்ல. எவனொருவன் உழைப்பை நம்பி, திட்டமிட்டு, உறுதியுடன் செயல்படுகிறானோ, அவன் மஹான் எனப் போற்றப்படுவான். இப்படிப் பட்டவனைத் தான் இவ் உலகம் தேடுகிறது.

தகுதியுடையவனே வெகுமதி பெறுகிறான். இது ஒரு தெய்வ நெறியாகும். 'எந்த ஒரு கோட்பாடும் கடவுளால் உருவாக்கப்பட்டு அவராலே செயல் வடிவம் பெறும்' என்பதே இறைச் சட்டம். இதை கடவுளே பின்பற்றவும் செய்ய வேண்டும். அவ்வாறு அவர் பின்பற்றாமல் போனால் இந்த பிரபஞ்சம் செயல்பட முடியாது. ஒரு கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டு அதை அலட்சியப்படுத்துவதோ அல்லது மீறுவதோ மானமுள்ள செயலாகாது. படைப்பு என்னும் சக்கரம் கோட்பாடு என்னும் அச்சாணியின் உதவியால் தான் சுழன்று கொண்டிருக்கிறது. அந்த கோட்பாட்டை உருவாக்கிய கடவுளே அதனை மீற முடியாது. அப்படி மீறிவிட்டால் அந்த கோட்பாடு அர்த்தமற்று போகும்.

உழைப்பவனை உயர்த்த வேண்டும் என்பது கடவுளின் கோட்பாடு. அந்தக் கோட்பாட்டின்படி உழைப்பவன் அதற்குரிய ஊதியம் பெற்றடைவான். ஆண்மை பொருந்திய உழைப்பாளியை கைதூக்கி விடும் கட்டாயம் கடவுளுக்கு இருக்கிறது. கடவுளின் ஆதரவு உழைப்பவனுக்கு இருக்கும் பொருந்திய போது எந்த சக்தியும், அரசும் அதை தடுக்க முடியாது. ஆண்டவன் கட்டளைக்கு முன் அரச கட்டளை அடிபணியும்.

மனவலிமை இழப்பது அல்லது தாழ்வு மனப்பான்மை கொள்வது என்பது மனிதனுக்கு மனிதனே தேடிக் கொள்ளும் ஒரு சாபக் கேடாகும். சரீர பலமிருந்தும், வெற்றி பெறுவதற்கான சாதனங்கள் உள்ள போதும். தாழ்வு மனப்பான்மை கொண்டவன், மனவலிமை இல்லாதவன் வாழ்வில் வெற்றி பெற இயலாது. உடல் வலிமை இல்லாத போதும், மன வலிமை உள்ளவன் வெற்றி பெறுவதற்கான சாதனங்களை உருவாக்கிக் கொள்வான்.

ஏதோ சில காரணங்களினால், சில சூழ்நிலைகளில் ஒருவன் மனவலிமை இழந்து விட்டான் என்றால், அவன் அந்த சாபக்கேட்டிலிருந்து வெளிவர முடியாது என்றில்லை. முயற்சித்தால் முடியாதது ஒன்றுமில்லை. சூழ்நிலை காரணமாக மனவலிமை இழந்தவன், அதிலிருந்து மெல்ல மெல் விடுபட முயற்சிக்க வேண்டும். அதற்காக அவன் தன் உடல் சக்தி முழுமையையும் ஈடுபடுத்தி தன் ஆண்மையை நிலை நாட்ட வேண்டும்.

தோல்வியடைந்ததும் அவநம்பிக்கை கொள்ளாமல் மீண்டும் மீண்டும் முயற்சிக்க வேண்டும்

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**ஆவணியின் சிறப்பு**

**19815)சூரியனை அதிபதியாகக் கொண்ட ராசி எது?**
*சிம்ம ராசி*

**சிம்ம ராசியில் சூரிய பகவான் சஞ்சரிக்கும் காலம் எது?**
*ஆவணி மாதம் என்கின்றன ஜோதிட நூல்கள்.*

**சூரியன் சிம்மத்தில் வலுப்பெறும் இந்த மாதத்தில் எந்த காரியத்தை செய்தாலும் என்ன நடக்கும்?**
*அது பலன் தரும் என்பது நம்பிக்கை.*

**ஆவணி மாதத்தை வேறு என்ன மாதம் என்று சொல்கின்றன?**
*சிங்க மாதம்*

**சிங்க மாதம் எனப்படும் ஆவணி எதற்கு பெயர் பெற்ற மாதமாகப் போற்றப்படுகிறது?**
*வழிபாட்டுக்கும் கொண்டாட்டத்துக்கும்*

**அகத்திய மாமுனி இந்த மாதத்தைப் பற்றி என்ன கூறி இருக்கிறார்?**
*சிங்கத்திற்கு இணையான மாதமும் இல்லை; சிவனுக்கு இணையான இறைவனும் இல்லை' என்கிறார்.*

**கணநாதர், கண்ணபிரான் திருஅவதாரங்கள் நடைபெற்ற மாதம் எது?**
*ஆவணி*

**மாணிக்கவாசகருக்காக குதிரைகளைக் கொண்டு வந்து ஒப்டைத்தது யார்?**
*இறைவன்*

**இதை எங்கு ஒப்படைத்தார்?** *மதுரையம்பதியில்*

**இதை எப்போது ஒப்படைத்தார்?** *ஆவணியில்*

**இந்த மாதத்தில் வரும் உற்சவங்கள் என்னென்ன?**
*ஆவணி மூலம், ஆவணி ஞாயிறு, ஆவணி அவிட்டம், புத்ரதா ஏகாதசி, காமிகா ஏகாதசி, வரலட்சுமி விரதம்*

**இந்த மாதத்தில் தோன்றிய ஆன்றோர்களும் அடியார்களும் யார் யார்?**
*இளையான்குடி மாற நாயனார், குலச்சிறை நாயனார், திருநீலகண்ட நாயனார், அதிபத்த நாயனார்*





உடப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட 21 வது வருட திருத்தல பாதயாத்திரை வெள்ளிக்கிழமை (25) இடம்பெற்றது. முன்னேஸ்வர தீமிதிப்பு உற்சவத்தை முன்னிட்டு இந்த பாதயாத்திரை நடத்தப்பட்டது. இதனை உடப்பூர் இந்து நெறிக் கழகம் 21 வது வருடமாக நடத்தியது. (உடப்பு குறூப் நிருபர் )



வரலாற்றுச் சிறப்புமிக்க சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னைநாத ஸ்வாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் வெள்ளிக்கிழமை(25) தீமிதிப்புக்கான சுடர் ஆலயத்தில் இருந்து கொண்டு வரப்பட்டு, பின்னர் ஆலயத்தின் முன்றலில் பெருந்தொகையான புளியங்கட்டைகள் அடுக்கப்பட்டு தீமூட்டப்பட்டது. (உடப்பு குறூப் நிருபர்)

## கொட்டாஞ்சேனை ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலய கிருஷ்ண ஜயந்தி விழாவும், ஜன்மாஸ்டமியும்

*கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீராதா கிருஷ்ண ஆலய கிருஷ்ண ஜயந்தியும், ஜன்மாஷ்டமி விழாவும், செப்டம்பர் 6ஆம் 7ஆம் திகதிகளில் வெகுசிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் கொண்டாடப்படும்.*

*இந்த விழாவில் விஷேட அம்சமாக செப்டம்பர் 7ஆம் திகதி மாலை 7 மணிக்கு புதுச்செட்டித்தெரு தெரு ஸ்ரீராம் மண்டபத்தில் உலகப் புகழ் நடனக் கலைஞர்களான இந்தியாவைச்சேர்ந்த ஹரி, சேத்தனா ஆகியோர் வழங்கும் கதக் நடனம் இடம்பெறும்.*

*கிருஷ்ண பகவான் அவதரித்த இந்த நாளில் உலகெங்குமுள்ள கிருஷ்ண பக்தர்கள் அவருக்குப் பிடித்த உணவுப் பொருட்களை நைவேத்தியம் செய்தும் கிருஷ்ணரை நன்கு அலங்கரித்தும் கொண்டாடி மகிழ்கின்றனர். அத்துடன் பூஜை, பஜனை, சிறப்பு வழிபாடுகள் என்பனவும் நடத்தப்படுகின்றன.*

*கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீராதாகிருஷ்ணா ஆலயத்தில் வருடாந்தம் கொண்டாடப்படுவது போல் இவ்வருடமும் விசேட வழிபாடுகளும், கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.*



*6ஆம் திகதி புதன்கிழமை காலை 5.30 மணிக்கு மங்கள ஆரத்தியுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் தொடர்ந்து துளசி ஆரத்தி, தர்சன ஆரத்தி, குருபூஜை ராஜபோக ஆராத்தி, தூப ஆராத்தி என்பன இடம்பெறும்.*

*மாலை 6.30 மணிக்கு சந்தியா ஆரத்தியைத்தொடர்ந்து ஹரே கிருஷ்ணா இசை நாட்டியக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.*

*7ஆம் திகதி வியாழனன்று காலை மங்கள ஆரத்தியுடன் ஆரம்பமாகும் விழாவில் நகர சங்கீர்த்தனமும், குழந்தை கிருஷ்ணர் ஊர்வலமும் நடைபெற்று குழந்தை கிருஷ்ணருக்கு பாலாபிஷேகமும், தொட்டிலிலிட்டு தாலாட்டும் வைபவமும் இடம்பெறும்.*

*இரவு 11.00முதல் நள்ளிரவு 12.00 மணிவரை ஸ்ரீஸ்ரீராதாகிருஷ்ணருக்கு மஹா அபிஷேகமும், விஷேட ஆராதனைகளும் இடம்பெற்று அருட்பிரசாதம் வழங்கப்படும்.*

*அபிஷேகத்துக்குவேண்டிய பால், இளநீர், பழம், பூக்கள், மற்றும் அன்னதானத்திற்குவேண்டிய சகல பொருட்களையும் பக்தர்கள் வழங்கலாம்.*

**கிருஷ்ணப்பிரியன்**





வத்தளை ஹேக்கித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய வரலக்ஷ்மி பூஜை வெகு சிறப்பாக நேற்று காலை முதல் நண்பகல் வரை சிவஸ்ரீ யோ. சுபாஸ்கர குருக்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மங்கையர்கள் நெய்விளக்கேற்றி குங்குமத்தால் பூஜை செய்வதையும். வரலக்ஷ்மிக்கு அலங்காரதீபம் காண்பிப்பதையும் காணலாம்.(கொழும்பு வடக்கு நிருபர்)

# கிழக்கின் குரல்



# மட்டு. மாவட்டத்தில் வரட்சியால் 30 ஆயிரம் பேர் பாதிப்பு

மணல்சேனை நிருபர்



நாட்டில் நிலவும் கடும் வறட்சியினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 30 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை காலமும் இம் மாவட்டத்தில் மழைவீழ்ச்சி எதுவும் கிடைக்கப் பெறாததால் வறட்சியான காலநிலை தொடர்ந்து நிலவுகின்றது. இதனால் மாவட்டத்தின் 6 பிரதேச செயலக பிரிவுகளில் 8 ஆயிரத்தி 892 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்தி 508 பேர் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் செங்கலடி பிரதேச செயலக பிரிவில் 2,561 குடும்பங்களைச் சேர்ந்த 8,805 பேர் அதிக பட்சமாக வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் கோறளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலக பிரிவில் 2,161 குடும்பங்களைச் சேர்ந்த 6,856 நபர்களும், மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவில் 1,729 குடும்பங்களைச் சேர்ந்த 6,300 நபர்களும், போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவில் 1,438 குடும்பங்களைச் சேர்ந்த 4,341 நபர்களும், மண்முனை தென் மேற்கு பிரதேச செயலக பிரிவில் 853 குடும்பங்களைச் சேர்ந்த 2,681 நபர்களும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலக பிரிவில் 150 குடும்பங்களைச் சேர்ந்த 525 நபர்களும் வறட்சியால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் தேசிய அனர்த்த நிவாரண சேவை திணைக்களத்தினால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் ஏ.எஸ்.எம். சியாத் தெரிவித்தார். அதேவேளை குளங்களில் நீர் வற்றியுள்ளமையினால் கால்நடைகள் குடிப்பதற்கு நீர் இல்லாத நிலையில் கஷ்டப்படுவதாக கால் நடைவளர்ப்பாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# ஜனாதிபதிக்கு களங்கம் ஏற்படுத்தவே திட்டமிட்ட இன முரண்பாட்டு சதி

பெரியபோரதீவு தினகரன் நிருபர்



ஜனாதிபதியின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தவே திட்டமிட்ட இன முரண்பாட்டு சதிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயலாளர் நாயகம் இ.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் வெள்ளிக்கிழமை (25) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது, கிழக்கு மாகாணத்தில் தற்போது முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட காணி அபகரிப்பானது ஒரு அரசியல் சதி, ஜனாதிபதியின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்காகவே திட்டமிட்டு இது மேற்கொள்ளப்படுகின்றது. இதனை எமது கட்சி வன்மையாக கண்டிக்கின்றது.

சமயத் தலைவர்களது செயற்பாடுகள் அரசாங்கத்திற்கு கெட்ட பெயரை ஏற்படுத்திக் கொடுக்கும். கிழக்கு மாகாண ஆளுநர் நடுநிலைமையாக செயல்படுவது வரவேற்கத்தக்கது. யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காணி மீளவும் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இதனை பிழையாக வழிநடத்துகின்றார். ஜனாதிபதியோ அமைச்சர்களோ, இதற்கு உடன்பாடில்லை இதற்கு அரச அதிகாரிகளின் பிழையான செயற்பாடுகளே காரணமாகும்.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டை சுற்றி பேரினவாதிகள் முற்றுகை இடுவதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் என்றார்.







மண்டூர் முருகன் ஆலயத்தில் நடைபெற்ற தேர்த்திருவிழா. (படங்கள்: மண்டூர் தினகரன் நிருபர்)

# உரிய உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாத தனியார் கல்வி நிறுவனங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை

ஒலுவில் விசேட நிருபர்

அக்கரைப்பற்று பிரதேசத்தில் உரிய உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படாத தனியார் கல்வி நிறுவனங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சார் தெரிவித்தார்.

மாணவர்களின் நலன் கருதி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் உரிய வழங்களை கொண்டிராத தனியார் கல்வி நிறுவனங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வளப்பற்றாக்குறையுடைய தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் நலன் கருதி உரிய உட்கட்மைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல். இவை மாநகர சபை மற்றும் சுகாதார பணிமனை போன்றவற்றினால் பரிசோதிக்கப்படும். இப்பரிசோதனையில் போதிய வசதிகளை வழங்காது நடாத்தப்படும் கல்வி நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்தார்.

தரம் 6-11 வரையான மாணவர்களுக்கு மாலை 6.00 மணிக்கு பின்னர் பிரத்தியேக வகுப்புக்களை நடத்தாமல் இருத்தல். உயர் தர வகுப்பு மாணவர்களில் கணிதம், விஞ்ஞானம் போன்ற துறைகளில் கற்கும் மாணவர்களுக்கு மட்டும் பி.ப 7.00 மணிவரை வகுப்புக்களை நடாத்த முடியும்.

பெண் பிள்ளைகள் பாடசாலை சீருடையில் மாத்திரம் தனியார் வகுப்புக்களுக்கு வருதல், தரம் 6-11 வரையான மாணவர்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு பாடம் தொடர்பாக 8 மணித்தியாலங்கள் மாத்திரம் ஒதுக்கப்படுதல் வேண்டும்.

ஒரு மணித்தியாலயத்திற்கு அதி கூடிய கட்டணமாக ரூபா 60 அறவிடுதல் வேண்டும், மாநகர சபை மற்றும் சுகாதார பணிமனையினால் தர நிர்ணயத்திற்கு உட்பட்ட சொகுசு வசதிகளுடன் நடாத்தப்படும் தனியார் நிறுவனங்கள் மாத்திரம் ரூபா 70 வரை அறவிட முடியும்.

ஞாயிற்றுக்கிழமையில் 6-11 வரையான மாணவர்களுக்கு முழு விடுமுறை நாளாக அறிமுகப்படுத்தல். அரச சுற்று நிருபத்திற்கமைவாக இந்நாளில் அகதியா வகுப்புக்கள் நடாத்தப்படுவதுடன் விளையாட்டு பொழுதுபோக்கு மற்றும் மார்க்க விழுமியங்களுக்கு வழி வகுத்துக் கொடுத்தல் வேண்டும்.

எனவே மேற்குறித்த தீர்மானங்கள் அனைத்தும் செப்டெம்பர் மாதம் 01ம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

# கிரான்குளத்தில் தென்னம் தோட்டத்தில் திடீர் தீ

பெரியபோரதீவு தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைப்பற்றுப் பிரதேசத்திற்குட்பட்ட கிரான்குளம் கிராமத்தில் கடற்கரை அண்மித்திருந்த தோட்டங்களில் வெள்ளிக்கிழமை திடீரென தீ பரவல் ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியிலிருந்த மிகவும் பயன்தரும் தென்னை, பனை, உள்ளிட்ட மரங்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். தீயை விவசாயிகள் ஒன்றிணைந்து கட்டுப்படுத்த முற்பட்ட போதும் அது முடியாமல் போய்விட்டது. இந்நிலையில் மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் வரவழைக்கப்பட்டு தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இத்தீ பரவலானது திட்டமிட்ட செயலா அல்லது வேறு எவ்வாறு இடம்பெற்றிருக்கலாம் என்பது தொடர்பில் விவசாயிகளும், பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில்

# கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள கால்நடைகளுக்கு குடிநீர் வழங்கல்

ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள கால்நடைகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ. எம்.றியாஸ் தெரிவித்தார்.

வரட்சியினால் கால்நடைகள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் குடிநீர் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு சம்பந்தப்பட்ட பிரதேச கால்நடை வைத்தியதிகாரிகளிடம் பாதிப்பு தொடர்பான அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும், தகவல்களை வழங்கும் பட்சத்தில் கால்நடைகளுக்கு குடிநீர் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

கடும் வரட்சியினால் பொத்துவில், திருக்கோவில், பாணமை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் கால் நடைகள் இறப்பதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மஹாதேவி லங்கா ஐ.ஓ.சி

# எரிபொருள் நிரப்பும் நிலையம் திறப்பு



முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கண்டி பிரதான வீதியில் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் தம்பலகாமம் லங்கா ஐ.ஓ.சி மஹாதேவி தனியார் எரிபொருள் நிரப்பும் நிலைய திறப்பு விழா உரிமையாளர் T. கரி பிரதாப் தலைமையில் (26) நடைபெற்றது

நிகழ்வில் பிரதம அதிதியாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம உத்தியோகபூர்வமாக கலந்து கொண்டு பொது மக்கள் பாவனைக்காக திறந்து வைத்தார். இதன்போது லங்கா ஐ.ஓ.சி முகாமைத்துவ பணிப்பாளர் திபேக் தாஸ், சிரேஷ்ட உதவி தலைவரும் விற்பனை மற்றும் மனித வளம் அம்பர் அஹமட் மாவட்ட பெற்றோலிய உயர் அதிகாரிகள் ,தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜே சிறிபதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாண பள்ளிவாசல்கள் சம்மேளன ஒன்றுகூடல்

கிண்ணியா தினகரன் நிருபர்



கிழக்கு மாகாண பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் சனிக்கிழமை (26) கிண்ணியாவில் கிண்ணியா விசன் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்றது.

கிண்ணியா மஜ்லிஷ் சூறா ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி பொதுச் சபைக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட சம்மேளன தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர், அக்கரைப்பற்று, நிந்தவூர், கல்முனை, ஒலுவில், மருதமுனை பிரதேச பள்ளிவாசல்கள் சம்மேளன பிரதிநிதிகள் மற்றும் சம்மாந்துறை மஜ்லிஷ் சூறா பிரதிநிதிகள், காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத் தலைவர் மற்றும் பிரதிநிதிகள், கல்குடா ஜம்இய்யத்துல் உலமா தலைவர் மற்றும் பிரதிநிதிகள், கிண்ணியா, மூதூர், குச்சவெளி, தோப்பூர், கந்தளாய் பகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பள்ளிவாசல்கள் சம்மேளன பிரதிநிதிகள், கிண்ணியா மற்றும் மூதூர் மஜ்லிஷ் சூறா தலைவர் மற்றும் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# திருவதிகை இலக்கிய, ஆன்மீக சஞ்சிகைக்கான ஆக்கங்கள் கோரல்

திருக்கோவில் தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்ட திருவதிகை கலைக் கூடத்தினால் மகாகவி பாரதியாரின் 141ஆவது ஜனன தின நூற்றாண்டு விழாவினை திருக்கோவிலில் கொண்டாடும் முகமாக 'திருவதிகை' எனும் இலக்கிய ஆன்மீக சிறப்புச் சஞ்சிகை ஒன்றினை வெளியிட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் இலங்கை உட்பட உலக நாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்களிடம் இருந்து ஆரோக்கியமான தமிழ் இளைஞர் சமூகத்தினரை இலக்கியம் மற்றும் ஆன்மீகத்தின் ஊடாக நெறிப்படுத்தும் வகையில் பயனுள்ள நவீன சிந்தனைகள் கொண்ட கட்டுரைகள், கவிதைகள், நாட்டார் பாடல்கள், சிறுகதைகள் குட்டி ஆன்மிக கதைகள், சிறுவர் பாடல்கள், இந்துமதம் தொடர்பான ஆன்மீக கட்டுரைகள் போன்ற ஆக்கங்களை தங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். ஆக்கங்கள் சஞ்சிகைக்கு ஏற்றால் போல் எழுதப்படுவது சிறப்பு.

எழுத்தாளர்கள் தங்களின் ஆக்கங்கள் அனைத்தும் எதிர்வரும் 30.09.2023ஆம் திகதிக்கு முன்னராக எமக்கு கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். ஈ.மெயில் askarthik76@gmail.com வாட்சாப் 0773794913 மற்றும் தலைவர் எஸ்.கார்த்திகேசு திருவதிகை கலைக்கூடம் முதலாம் குறுக்கு வாக்கிரிஷா வீதி, திருக்கோவில் 03 எனும் விலாசத்துக்கும் அனுப்பி வைக்க முடியும் என்பதுடன் ஆக்கங்களை எழுதுகின்றவரே அந்த ஆக்கத்திற்கான பொறுப்பும் ஆவார்.

# எய்ம்ஸ் சர்வதேச பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி



அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

அக்கரைப்பற்று எய்ம்ஸ் சர்வதேச பாடசாலையின் (AIMS INTERNATIONAL SCHOOL) இல்ல விளையாட்டு விழா அண்மையில் அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் மிகக்கோலாகலமாக நடைபெற்றது.

நிறுவனத்தின் கற்கைகள் பணிப்பளர் எம்.ஏ.தஷ்ரீப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு ஓய்வு பெற்ற சிரேஸ்ட போலிஸ் அத்தியட்சகர் எம்.எ.எம். நவாஸ் பிரதம அதிதியாகாக கலந்துகொண்டு நிகழ்வுகளை தொடக்கி வைத்தார்.

இந்த விளையாட்டு விழாவில் சிவப்பு, பச்சை, மஞ்சள் இல்லங்கள் பங்கு பற்றின. குறுகிய நேரத்தில் சிறுவர்கள் சுயமாகவே பாடசாலைக்கு வெளிக்கிட்டு செல்வது, சிறுவர்களுக்கான கயிறு இழுத்தல் போட்டி, பலூன் உடைத்தல் போன்ற போட்டிகள் பெற்றோர்களைக்கவரும் நிகழ்வுகளாக அமைந்திருந்தன.

# வடக்கின் உதயம்

## நினைவு நல்லது நூல் வெளியீட்டு விழா

(யாழ். விசேட நிருபர்)

பி. விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூலின் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஊடகத்துறையில் தனது ஐம்பதாண்டுகளுக்கும் மேலான அனுபவப் பகிர்வினை உள்ளடக்கி பி.விக்னேஸ்வரன் இந்நூலினை உருவாக்கியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் அனுசரணையில், இந்நூல் வெளியிடப்படுகிறது.

வானொலியில் தயாரிப்பாளராக, செய்தி வாசிப்பாளராக ஆற்றிய பணிகள், தொலைக்காட்சித் துறையில் தயாரிப்பாளராக, பணிப்பாளராக பல்வகைமைச் சூழலில் அவருக்கிருந்த வாய்ப்புக்கள், எதிர்கொள்ளப்பட்ட சவால்கள், புலம்பெயர் நாட்டில் ஊடகப் பணிகள் எனப் பலதரப்பட்ட விடயதானங்களை ஒன்றிணைத்து ஊடகத்துறைசார் ஆவணமாக, ஆயிரம் பக்கங்களை அண்மித்ததாக இந்நூலினை பி. விக்னேஸ்வரன் தந்துள்ளார்.

ரொரன்ரோ 'தாய்வீடு' மாத இதழில் ஆறு ஆண்டுகளாக வெளிவந்த தொடரின் நூல் வடிவமாக இப்படைப்பாக்கம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களின் சமகால சவால்கள் அரசாங்கத்துடன் பேச கட்சி முடிவு

(சாவகச்சேரி விசேட நிருபர்)




தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கத்துடன் பேசுவதென புளொட் அமைப்பின் மத்திய குழுக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளதாக புளொட் அமைப்பின் தலைவரும்பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். கட்சியின் மத்திய குழுக்கூட்டம் சனிக்கிழமை (26) சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன்பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் சமகால அரசியல் நிலைமைகள், தமிழ் மக்கள் தொடர்ச்சியாக முகம் கொடுத்து வரும் பிரச்சனைகள், ஆக்கிரமிப்பு நிலைமைகள் சம்பந்தமாக கலந்தாலோசிக்கப்பட்டது. மக்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளுக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து

மிகத்தீவிரமாக ஆராய்ந்தோம்.

அரசியல் ரீதியாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வளர்ப்பது மாத்திரமல்லாமல்தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை அரசாங்கத்துடன் பேசி உரிய தீர்வினை பெறுவது தொடர்பிலும் எமது மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் அண்மையில் வெளிநாட்டு தூதுவர்களை சந்தித்திருந்தோம். குறிப்பாகஅமெரிக்கதூதுவரை சந்தித்து பேசினோம். எவ்வளவு தூரம் அமெரிக்கா எமக்கு உதவ முடியும் என்பது தொடர்பாகவும் அவரிடம் கேட்டறிந்தோம். அதன் போது தமக்கு ஓர் எல்லை இருப்பதாகவும் அந்த எல்லைக்குள்தான், செயற்பட முடியும் எனவும் எம்மிடம் கூறியிருந்தார். இது தொடர்பாகவும் எமது மத்திய குழுக் கூட்டத்தில் கலந்துரையாடியதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

## அரசாங்க அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றவருக்கு கௌரவம்

(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக கடந்த மூன்று வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெறும் திருமதி ஏ. நந்தினி ஸ்ரான்லி டிமெலின் மணி விழா நிகழ்வு மற்றும் 'நந்தினி அம்மா மலர்' வெளியீட்டு விழா என்பன அண்மையில் (25) மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் இந்நிகழ்வுக்கு தலைமை தாங்கினார்.

இதன் போது ஓய்வு பெறும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. நந்தினி ஸ்ரான்லி டிமெல் மன்னார் பஜார் பகுதியில் வைத்து மாலை அணிவிக்கப்பட்டு, மங்கள வாத்தியத்துடன் மன்னார் மாவட்டச் செயலகம் வரை அழைத்து வரப்பட்டனர்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, சர்வமத தலைவர்கள், பிரதேசச் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், இராணுவ பொலிஸ் அதிகாரிகள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## அமிர்தலிங்கத்தின் அகவையை முன்னிட்டு விஷேட நிகழ்வுகள்



(சாவகச்சேரி விசேட நிருபர்)

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 96ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, விஷேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தினர், இவ்விஷேட நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர். வலிகாமம் மேற்கு பிரதேச சபை முன்றலில் அமைந்துள்ள அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் திருவுருவசிலை வளாகத்தில் (26) இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், வட்டுக்கோட்டை தொகுதி தமிழரசுக் கட்சி தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் ,அமிர்தலிங்கத்தின் திருவுருவசிலைக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினார். அமிர்தலிங்கத்தின் 96 ஆவது அகவையை முன்னிட்டு கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினர், பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி மகளிர் அணிச்செயற்பாட்டாளர் பரமானந்த வள்ளி , பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் இரு நாள் விஜயமாக மன்னார் பயணம்

(தலைமன்னார் விஷேட நிருபர் )




இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் இரண்டு நாள் விஜயமாக மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் செய்துள்ளார். கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் மன்னாரின் முக்கிய பகுதிகளுக்கு விஜயம் செய்த தூதுவர், முக்கிய இடங்களை பார்வையிட்டார்.

மன்னார் மாவட்டத்தில் பழமை வாய்ந்ததும் உலகம் போற்றும் புனித ஸ்தலங்களாக விளங்குவதுமான புதுமைமிக்க மருதமடு அன்னையின் ஆலயம் , பாடல் தளமாக விளங்கும் திருக்கேதீஸ்வர ஆலயம் என்பவற்றுக்கும் அவர் விஜயம் செய்து வழிபாடுகளில் பங்கேற்றார். அங்கு சென்ற தூதுவர்,

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையையும் சந்தித்துள்ளார். மன்னார் ஆயருடன் நல்லதொரு கலந்துரையாடலில் ஈடுபட்டதாகவும் ,நானூறு வருடங்கள் பழமை வாய்ந்த மிகவும் சக்தி வாய்ந்த, மடு அன்னை ஆலயத்தை தரிசித்ததாகவும் அவர் தெரிவித்தார். தற்பொழுது இடம் மாற்றம் பெற்று செல்ல இருக்கும் மடு பாரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளாரும் மற்றும் தற்பொழுது மடு பரிபாலகராக பொறுப்பேற்கும் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளாரும் அன்பாகவும் பண்பாகவும் அமெரிக்க தூதுவரை வரவேற்றனர். இதுகுறித்து அமெரிக்க தூதுவர் தெரிவித்திருப்பதாவது: மன்னார் பாடல் தளமான திருக்கேதீஸ்வர ஆலயத்துக்குச் சென்றேன். அங்கு, ஆலய பரிபாலகச் சபைத் தலைவர் எந்திரி எஸ்.எஸ்.இராமகிருஷ்ணனின் அன்பான வரவேற்பை பெற்றேன். அங்கு நடைபெற்ற பூஜையில் கலந்து கொண்டபின் தலைவருடன் கலந்துரையாடி, ஆலயம் தொடர்பான சரித்திரங்களையும் கேட்டறிந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கல்விச்சுற்றுலாவுக்கு நிதியுதவி

(கரவெட்டி தினகரன் நிருபர்)



வடமராட்சி தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தால், கல்விச் சுற்றுலா மற்றும் திருத்தல யாத்திரைக்கான நிதி உதவியாக ரூபா 100,000 வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடம், சைவ சித்தாந்தத் துறை மாணவர்களின் கல்விச்சுற்றுலா, மற்றும் திருத்தல யாத்திரைக்காகவே இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், இந்நன்கொடையை ஆச்சிரமத்தில் வைத்து பிரதிநிதிகளிடம் வழங்கினார்.

## 'சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு மரண தண்டனை வழங்கவும்'

(ஓமந்தை விஷேட நிருபர்)



சிறுவர் உரிமைகளை பாதுகாக்க கோரி முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு முன்பாக விழிப்புணர்வு நடைபவனி சனிக்கிழமை காலை (26) நடைபெற்றது. சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்நடைபவனி, முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு முன்பாக ஆரம்பித்து, தண்ணிரூற்று பொதுச்சந்தைக்கு முன்பாக நிறைவு பெற்றிருந்தது. சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யாதீர், சிறுவர் துஷ்பிரயோகத்தை கண்டால் 1929 க்கு அழைப்போம், மேதையை அழிக்கும் போதை, சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு மரண தண்டனை கொடு, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவோம், வளமான எதிர்காலத்தை உருவாக்குவோம், சிறுவர்களுக்கான சிறுவர் நேயமுள்ள பாதுகாப்பு மிக்க சூழல் ஒன்றை உருவாக்குவோம் போன்ற பல்வேறு பதாதைகள் தாங்கிய விழிப்புணர்வு பதாதைகளுடன் இந்நடைபவனி இடம்பெற்றிருந்தது .

## வீட்டிலிருந்த நகைகள், பணம் திருட்டு



(கரவெட்டி தினகரன நிருபர்)

வசாவிளான் பகுதி வீடொன்றில் 25 பவுண் நகைகள், 40 ஆயிரம் ரூபா பணம் என்பன (24) களவாடப்பட்டுள்ளதாக பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டின் உரிமையாளர்கள் முற்பகல் 10 முதல் 11 மணி வரை வெளியில் சென்றிருந்த சமயம் இத்திருட்டு இடம்பெற்றுள்ளது. கதவை உடைத்து நுழைந்த திருடர்கள் 25 பவுண் நகைகள், 40 ஆயிரம் ரூபாய் பணத்தை திருடிச் சென்றுள்ளனர். வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு (சி. சி. ரீ. வி) கமெராக்களையும் இவர்கள் திருடியுள்ளனனர். விசாரணைகள்,

தடயவியல் பொலிஸாரின் மோப்ப நாய் உதவியுடன் முன்னெடுக்கப்படுகின்றன.

## தேசிய மீலாத் விழா; அமைச்சர் தலைமையில் விஷேட கூட்டம்

(தலைமன்னார் விஷேட நிருபர் )





மன்னாரில் நடைபெறவுள்ள 39 வது தேசிய மீலாத் விழாவை

ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம், அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தலைமையில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் பங்கேற்புடன் மன்னார் மாவட்ட செயலகத்தில் சனிக்கிழமை (26) காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் . பிரதிப் பணிப்பாளர் உத்தியோகத்தர்கள், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் , பிரதேச செயலாளர்கள் , பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முசலி பிரதேச செயலகப் பிரிவில் நடைபெறவுள்ள மீலாத் விழாவில், சுமார் மூவாயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்துகொள்ள உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்விழா நடைபெறும் இடத்திலுள்ள வீதிகளை புனரமைத்தல் , மின்சாரம் , சுகாதாரம் , போக்குவரத்து , கலந்து கொள்ள வரும் அதிகாரிகளின் தங்குமிட வசதிகள் , மீலா தின விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட வேண்டிய போட்டிகள் போன்ற முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய நிகழ்வின் ஏற்பாடுகள் அறிவிக்கப்படுமென இங்கு தெரிவிக்கப்பட்டது.

## குளவி கொட்டி உயிரிழப்பு

(யாழ்.விசேட நிருபர்)

தேவாலயத்திற்கு சென்று கொண்டிருந்தவர் குளவி கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் , மிருசுவில் தவசிக்குளம் பகுதியை சேர்ந்த , இமானுவேல் யேசுரத்தினம் (வயது 79) என்பவரே உயிரிழந்தார்.

வீட்டிலிருந்து தேவாலயம் சென்று கொண்டிருந்த வேளை வழியில் குளவி கொட்டுக்கு இலக்கான இவர், சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி இவர் உயிரிழந்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் இன்று ஆர்ப்பாட்டம்

(யாழ். விசேட நிருபர்)

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்காக EPF & ETF நிதியங்களை அரசாங்கம் பயன்படுத்த முனைவதற்கு எதிராக, இன்று ஆர்ப்பாட்டம் நடத்தப் படவுள்ளது. யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டம்,

மதியம் 12 மணி முதல் 01 மணி வரை நடைபெறும்.

பல்கலைக்கழக ஊழியர் சங்கம், வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் , அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் , பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம் , வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம் , வடமாகாண கால்நடை போதானாசிரியர் சங்கம் , ஶ்ரீ லங்கா தபால் தொலைத் தொடர்பு சேவை உத்தியோகத்தர் சங்கம் , வடமாகாண அரச சாரதிகள் சங்கம் மற்றும் வட மாகாண கிராம

அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கம் ஆகிய 09 சங்கங்கள் இணைந்து இப்போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

## ஒரே சூலில் மூன்று குழந்தைகள் பிரசவம்

(யாழ். விசேட நிருபர்)



யாழ்.போதனா வைத்தியசாலையில், தாயொருவர் ஒரே சூலில் மூன்று குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

மகப்பேற்று விசேட வைத்திய நிபுணர் அப்புத்துரை சிறிதரன் தலைமையிலான மருந்துவக் குழுவினர், இத்தாய்க்கு பிரசவ மருத்துவ சிகிச்சை மேற்கொண்டனர்.

மூன்று குழந்தைகளும், தாயும் நலமாக உள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# கெப்பித்திகொல்லாவ பகுதியில் ஊட்டச்சத்து குறைபாட்டால் 414 சிறுவர்கள் பாதிப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கெப்பித்திகொல்லாவ பகுதியில் 414 சிறுவர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் அவதிப்படுவதாக கெப்பித்திகொல்லாவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

1-5 வரை 173 சிறுவர்களும் பாடசாலை செல்லும் 241 சிறுவர்களும் ஊட்டச்சத்துக்கு உள்ளாகியுள்ளதாக குறித்த அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகல்கடை ,ஹல்மில்லாவ மற்றும் கஹட்டகஸ்திகிலிய ஆகிய கிராம அலுவலகர் பகுதியில் உள்ள சிறுவர்களே அதிகளவில் ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு உள்ளாகியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்து குறைபாட்டிற்குள்ளான சிறுவர்களின் பெற்றோர் அல்லது பொறுப்பாளர்கள் அதிகமானோர் விவசாய பொருளாதாரத்தில் வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றவர்களாவர்.

கெப்பித்திகொல்லாவ பிரிவில் ஊட்டச்சத்து குறைபாட்டுக்கு சமூக பொருளாதார நிலை மற்றும் பெற்றோர்களின் கல்வி நிலையும் ஒரு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 200 பாடசாலைகளுக்கு புத்தகங்கள் விநியோகம்

பாடசாலை மாணவர்களின் வாசிப்பு திறனை வளர்ப்பதற்காக 'கதையே எங்கள் வாழ்க்கை' என்ற கருத்துடன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 10 சிறுவர் படைப்புகள் (மொழிபெயர்ப்புடன் 30 படைப்புகள்) ஒகஸ்ட் 31ஆம் திகதி காலை 10 மணிக்கு வெளியிடல் மற்றும் அந்நூல்களை 200 பாடசாலைகளுக்கு வழங்கும் நிகழ்வும் நூலக மற்றும் ஆவண சேவைகள் சபையில் நடைபெறவுள்ளன.

எதிர்காலத்தில் மேலும் பல பாடசாலைகளுக்கு இவ்வாறு சிறுவர் நூல்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜெர்மனியின் மதர் அசோசியேசன் மற்றும் போஃஜக் ஃபேமிலி மன்றத்தின் பங்களிப்புடன் இந்நூல்கள் வழங்கப்படுகின்றன.

# தர்கா நகர் "ஸூஎம்ஸா" சுபியான் ஆசிரியர் காலமானார்

**அஜ்வாத் பாஸி**

தர்கா நகரைச் சேர்ந்த ஓய்வு பெற்ற முன்னணி கணித ஆசிரியரும் எழுத்தாளரும் கவிஞருமான எம்.எஸ்.எம். சுபியான் ஆசிரியர் (வயது 65) நேற்று முன்தினம் (26) தர்கா நகர் இல்லத்தில் காலமானார். பேருவளை சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை, நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி, ஸேம் ரிபாய் ஹாஜியார் கல்லூரி, தர்கா நகர் ஸாஹிரா கல்லூரி ஆகியவற்றில் கணித ஆசிரியராக தான் ஓய்வு பெறும் வரை நீண்டகாலம் பணியாற்றியுள்ளார். எழுத்தாளரான அன்னார், பல கவிதை புத்தகங்களை சமூகத்திற்கு வழங்கியுள்ளதோடு தினகரன் தேசிய பத்திரிகையில் கட்டுரைகள், கவிதைகள் என பல ஆக்கங்களையும் 'ஸூஎம்ஸா' என்ற புனைபெயரிலும் எழுதியுள்ளார். தான் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும் பேருவளை பிரதேசத்தில் ஆங்கில மொழி மூலம் கணிதப் பாடத்தை கற்பித்துவந்த ஒரே ஆசிரியர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஓய்வுபெற்ற ஆசிரியை சித்தி ஸபிய்யாவின் கணவரான அன்னார் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். அன்னாரின் ஜனாஸா சனிக்கிழமை இரவு 10.00 மணிக்கு மீரா ஜும்ஆ பள்ளிவாசல் (தெருவுப்பள்ளி) மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரின் மறைவு குறித்து சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை, நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி ஆகியன அனுதாபச் செய்திகளையும் வெளியிட்டுள்ளன.

# மாமனாரின் துப்பாக்கிச்சூட்டில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு, அநுராதபுரம் தினகரன் நிருபர்**

மின்னேரிய கல்ஓயா பகுதியில் நபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். றொட்டவெவ கல்ஓயா பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை ஒருவரே இவ்வாறு மாமனாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டுள்ளார்.

வெடிமருந்தை பயன்படுத்தி உபயோகிக்கும் துப்பாக்கியை பயன்படுத்தியே குறித்த துப்பிக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது.

குறித்த துப்பிக்கிச் சூட்டு சம்பவம் (26) இரவு இடம்பெற்றுள்ளதுடன் காயமடைந்த நபரை மின்னேரிய வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போது அவர் உயிரிழந்திருந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

# வெலிகம அறபா தே. பாடசாலை உதைபந்தாட்ட போட்டியில் வெற்றி

**வெலிகம தினகரன் நிருபர்**



வெலிகம அறபா தேசிய பாடசாலை கல்வியில் மட்டுமல்லாது, விளையாட்டுத் துறையிலும் அண்மைக்காலமாக பல சாதனைகளை நிலைநாட்டி வருகின்றன.

கடந்த வாரம் மாத்தறை உயன்வத்தை விளையாட்டுத் திடலில் இடம் பெற்ற தென் மாகாண மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில், வெலிகம அறபா கல்லூரி சாதனை படைத்து பாடசாலைக்கும், பாடசாலை சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளது.

16 மற்றும் 18 வயதுகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் இவ்விரு அணிகளும் வெற்றியீட்டி அகில இலங்கை ரீதியிலான போட்டிகளுக்கு பாடசாலை வரலாற்றிலே முதன் முறையாக தகுதி பெற்றுள்ளன.

தென் மாகாண பிரபல பாடசாலைகளோடு மோதி தமது திறமையை வெளிக் காட்டி அபார வெற்றியீட்டிய வெலிகம அறபா, அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் விளையாட தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# SLASSCOM திறன்சார் தேசிய விருதுகளில் பயன்மிகு சிறந்த தொழில்நுட்பம் விருதை வென்றுள்ள Dialog இன் Karuna.lk சேவை

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி மூலம் இயங்குகின்ற Karuna.lk சேவையானது தொழில்நுட்பத்தை நற்செயல்களுக்காக பயன்படுத்துவதற்கான அதன் ஒப்புவமையில்லா தகைமையை அங்கீகரிக்கும் வகையில், SLASSCOM தேசிய திறன்சார் தேசிய விருதுகள் 2023 இல் "நற்செயல்களுக்கான சிறந்த மென்பொருள் கண்டுபிடிப்பு அல்லது புத்தாக்கம் என்பதற்கான தேசிய விருதைப் பெற்றது.

அதற்கமைய, Karuna.lk இலங்கையின் முதல் crowdfunding தளமானது, சமூகத்தில் நற்தாக்கத்தை விளைவிக்கும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் அதன் குறிப்பிடத்தக்க பங்களிப்புக்காக அங்கீகரிக்கப்பட்டது. தேவைகள் உடையோருடன் நன்கொடையாளர்களை இணைக்கும், இந்த தளமானது உரிய நேரத்தில் மற்றும் பொருத்தமான முறையில், உயர்மட்ட நிர்வாகத்தில் இயங்கும் நம்பகமான மற்றும் பாதுகாப்பான நிதி திரட்டும் இயந்திரத்தின் ஆதரவுடன் சமூக பொறுப்பின் மூலம் இலங்கையர்களின் வாழ்வை வலுவூட்டுவதையும் வளப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒக்டோபர் 2022இல் தொடங்கப்பட்டதிலிருந்து, இந்தத் தளமானது 107 தொண்டு நிறுவனங்களால் 116 முன்னெடுப்புகளை ஆதரித்துள்ளது. அவற்றில் 30% சுகாதாரப் பாதுகாப்புடனும், 30% கல்வியை மேம்படுத்துவதுடனும் தொடர்புடையன. சுகாதாரம், சமூகம், கல்வி, அவசரநிலை, சுற்றுச்சூழல், விளையாட்டு, புற்றுநோய், விலங்குகள் உள்ளிட்ட பல்வேறு வகையான சமூக காரணங்களுக்கான அணுகலுடன், நன்கொடையாளர்கள் பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கல்களை வழிநடத்துவதன் மூலம் முழுமையான வெளிப்படைத்தன்மையை இந்த தளம் உறுதி செய்கிறது. மேலும் Karuna.lk தளமானது அதன் அணுகல்தன்மை, வசதி, வெளிப்படைத்தன்மை, தன்னார்வத் தொண்டு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்கான பாராட்டைப் பெற்றுள்ளது.

"Karuna.lk இன் தாக்கத்தை அங்கீகரித்து இந்த மதிப்புமிக்க சிறந்த புத்தாக்க மென்பொருள் தொழில்நுட்ப விருதுகளைப் பெறுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" என டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி நிறுவனத்தின் இடர் மற்றும் இணக்க குழுமத் தலைவர் அசங்க பிரியதர்ஷன தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், "Karuna.lk ஐ ஏற்றுக்கொண்ட நன்கொடையாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தாராள சமூகத்துக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம், மற்றும் எங்கள் சமூகத்தில் நல்லவிதமான மாற்றத்தை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்க முடிந்துள்ளதையிட்டு பெருமைப்படுகின்றோம். இந்த crowdfunding தளமானது ஒத்துழைப்பு மற்றும் கண்டுபிடிப்புகளின் சக்தியை வெளிப்படுத்துகிறது, மேலும் சமூக நன்மைக்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் எங்கள் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகின்றது" என்றார்.

டயலொக்கின் Karuna.lk இயங்குதளமானது சமூக நலனுக்காக தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்பை உண்மையாகவே நிரூபித்துள்ளது.




படத்தில் இடமிருந்து வலமாக: டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும நிலைபேற்றுத்தன்மை உதவி முகாமையாளர் ரங்கராஜ் ஜெயராசசிங்கம், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இடர் மற்றும் இணக்க குழுமத் தலைவர் அசங்க பிரியதர்ஷன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி வர்த்தக நாமம் மற்றும் ஊடக பிரிவின் உதவி வர்த்தக நாம முகாமையாளர் கயந்தி ரம்புக்வெல்ல, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி IdeaMart இன் சிரேஷ்ட Biz Lead, பரிந்து டி சில்வா.

மேலும் SLASSCOM தேசிய விருதுகள் 2023 இல் தேசிய "நற்செயல்களுக்கான சிறந்த மென்பொருள் கண்டுபிடிப்பு அல்லது புத்தாக்கம் என முயசரபெட்டம அங்கீகரிக்கப்படுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். சமூகத்தில் நற்தாக்கத்தை விளைவிக்கும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் தளத்தின் விதிவிலக்கான பங்களிப்பு, உதவிக்கரம் வேண்டி நிற்போருடன் நன்கொடையாளர்களை இணைப்பது மற்றும் பல முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது போன்றவற்றிற்கான அங்கீகாரமாக இது பிரதிபலிக்கின்றது" என SLASSCOM தலைவர் ஆஷிக் எம். அலி தெரிவித்தார்.

SLASSCOM தேசிய விருதுகள் 2023 சமூக சவால்களை எதிர்கொள்ளத்தக்க மற்றும் நிலைபேறான வளர்ச்சியை ஊக்குவிக்கத்தக்க சிறந்த தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை வரவேற்கின்றது மற்றும் அங்கீகரிக்கின்றது. டயலொக்கின் Karuna.lk இயங்குதளத்திற்கான இந்த அங்கீகாரமானது, இலங்கையர்களின் வாழ்க்கையையும் நிறுவனங்களையும் வலுவூட்டல் மற்றும் வளப்படுத்துவது என்ற அதன் நோக்கத்தில் பிரதிபலிக்கும் வகையில், சமூக நலனை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பத்தின் ஆற்றலைப் பயன்படுத்துவதில் அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.


Dialog FINANCE

# டயலொக் பினான்ஸ் பீஎல்சீ

## நிதி அறிக்கை

2023 ஜூன் 30 இல் முடிவடைந்த ஆறு மாதங்கள்

**முக்கிய நிதித்தரவு**
2023 ஜுன் 30 இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கான முக்கிய நிதித் தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது)

| ரூபா ஆயிரங்களில் | நடைமுறைக் காலம் 01.01.2023 முதல் 30.06.2023 வரை | முன்னைய காலம் 01.01.2022 முதல் 30.06.2022 வரை |
|---|---|---|
| வட்டி வருமானம் | 605,872 | 327,628 |
| வட்டிச் செலவு | (230,740) | (87,788) |
| **தேறிய வட்டி வருமானம்** | **375,132** | **239,839** |
| கட்டணம் மற்றும் கமிஷன் வருமானம் | 22,991 | 4,832 |
| வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்/(நட்டம்) | (234) | (472) |
| ஏனைய வருமானம் | 3,717 | 19,650 |
| தொழிற்பாட்டு செலவினங்கள் (பெறுமதி இழப்பு நீங்கலாக) | (305,081) | (195,537) |
| பெறுமதி இழப்பு | (26,536) | (16,866) |
| **வரிக்குமுன்னரான இலாபம் / (நட்டம்)** | **69,989** | **51,447** |
| வரிகள் | (33,130) | (20,720) |
| **வரிக்குப் பின்னரான இலாபம் / (நட்டம்)** | **36,859** | **30,727** |

**முக்கிய நிதித்தரவு**
2023 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்படாதது)

| ரூபா ஆயிரங்களில் | 30/06/2023 திகதியில் உள்ளவாறு | 30/06/2022 திகதியில் உள்ளவாறு |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 1,289,348 | 2,570,299 |
| அரச பிணையங்கள் | 250,378 | 780,845 |
| தொடர்பான தரப்பினரிடமிருந்து வர வேண்டியவை | 38,488 | 7,385 |
| கடன்கள் (தொடர்பான தரப்பினரிடமிருந்து வரவேண்டியவை நீங்கலாக) | 2,909,901 | 2,771,757 |
| பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள் | 4,752 | 3,548 |
| முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் உண்மைச் சொத்துக்கள் | - | - |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் | 231,040 | 185,781 |
| ஏனைய சொத்துக்கள் | 229,710 | 163,016 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **4,953,617** | **6,482,630** |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | - | - |
| தொடர்பான தரப்பினருக்கு செலுத்தவேண்டியவை | 48,034 | 4,317 |
| வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள் | 2,093,899 | 3,775,277 |
| ஏனைய கடன்பாடுகள் | - | - |
| ஏனைய பொறுப்புக்கள் | 171,056 | 135,514 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **2,312,989** | **3,915,108** |
| **பங்குரிமை மூலதனம்** | | |
| கூறப்பட்ட மூலதனம் | 2,934,582 | 2,934,582 |
| நியதி ஒதுக்கு நிதியம் | 14,716 | 11,361 |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | (310,266) | (380,001) |
| ஏனைய ஒதுக்குகள் | 1,596 | 1,580 |
| **மொத்த பங்குரிமை மூலதனம்** | **2,640,628** | **2,567,522** |
| | | |
| **மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **4,953,617** | **6,482,630** |
| பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி | 22.49 | 21.87 |

குறிப்பு: கூறப்பட்ட தொகை பெறுமதி இழப்பு மற்றும் தேய்மானம் நீங்கலானவையாகும்.

**தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள்**

| விடயம் | 30/06/2023 திகதியில் உள்ளவாறு | | 30/06/2022 திகதியில் உள்ளவாறு | |
|---|---|---|---|---|
| | உண்மை | தேவையானது | உண்மை | தேவையானது |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை** | | | | |
| அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம் | 49.27% | 8.50% | 52.04% | 7.00% |
| மொத்த மூலதன போதுமை விகிதம் | 49.27% | 12.50% | 52.04% | 11.00% |
| வைப்பு பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம் | 126.11% | 10.00% | 68.01% | 10.00% |
| **கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%)** | | | | |
| மொத்தச் செயற்படாக் கடன்களின் விகிதம் | 5.22% | | 2.10% | |
| தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | 3.21% | | 0.13% | |
| மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | 3.75% | | 0.89% | |
| ஒதுக்கு பாதுகாப்பு விகிதம் | 94.93% | | 64.93% | |
| **இலாபத்தன்மை (%)** | | | | |
| தேறிய வட்டி இலாபம் | 13.33% | | 9.50% | |
| சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்குமுன்னரான) | 1.27% | | 1.20% | |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (வரிக்குப் பின்னரான) | 2.83% | | 2.40% | |
| வருமானத்திற்கான செலவு விகிதம் | 75.97% | | 74.11% | |
| **திரவத்தன்மை (%)** | | | | |
| தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%) | 627.95% | | 827.60% | |
| வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள் | 69.91% | | 89.63% | |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 2 | | 2 | |
| வெளிவாரி கொடுகடன் தரமிடல் | AA(lka)/RWN | | AA(lka)/Outlook Stable | |

**அத்தாட்சிப்படுத்துகை :**

கீழே கையொப்பமிட்டுள்ள டயலொக் பினான்ஸ் பீஎல்சீ இன் பிரதான நிறைவேற்று அலுவலராக, நிதிக் கட்டுப்பாட்டாளராக மற்றும் இணங்குவிப்பு அலுவலராகவுள்ள நாங்கள் கூட்டாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்.

அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

**(ஒப்பம்)**
**நசீம் முகமது**
தலைமை நிர்வாக அதிகாரி
28 ஆகஸ்ட் 2023

**(ஒப்பம்)**
**யசோதா செல்வாண்டி**
நிதி முகாமையாளர்
28 ஆகஸ்ட் 2023

**(ஒப்பம்)**
**திசில் வின்சென்ட்**
இணக்க அதிகாரி
28 ஆகஸ்ட் 2023

2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித்துறை வர்த்தகச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதி நிர்ணய சபையினால் அனுமதியளிக்கப்பட்டது.
கூட்டிணைப்புத் திகதி – 1981 நவம்பர் 25

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :** இல. 475, யூனியன் பிளேஸ், கொழும்பு 2. **தொலைபேசி: 0114 317 317**
கடன் மதிப்பீடு AA(lka)/RWN

www.skillsads.com

# சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

## 2023 ஜுன் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான இடைக்கால நிதிக்கூற்றுகள்

### வருமானக்கூற்று

ரூ '000

| | வங்கி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஜூன் 30ல் முடிவடைந்த 6 மாத காலப்பகுதிக்கானது | | மாற்றம் | ஜூன் 30ல் முடிவடைந்த 3 மாத காலப்பகுதிக்கானது | | மாற்றம் |
| | 2023 | 2022 | | 2023 | 2022 | |
| வட்டி வருமானம் | 15,663,591 | 9,054,781 | 73% | 7,857,726 | 4,926,922 | 59% |
| வட்டி செலவினங்கள் | (11,801,766) | (5,611,795) | 110% | (5,877,036) | (3,452,273) | 70% |
| **நிகர வட்டி வருமானம்** | **3,861,825** | **3,442,986** | **12%** | **1,980,690** | **1,474,650** | **34%** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 168,829 | 163,282 | 3% | 100,253 | 49,457 | 103% |
| கட்டணம் மற்றும் தரகு செலவினங்கள் | (16,020) | (13,154) | 22% | (8,529) | (6,053) | 41% |
| **நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **152,809** | **150,128** | **2%** | **91,725** | **43,404** | **111%** |
| வர்த்தகத்திலிருந்து நிகர ஆதாயங்கள்/(இழப்புகள்) | 1,258 | (3,304) | -138% | 1,258 | (241) | -621% |
| நிதிச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி மதிப்பீட்டின் மூலமாக ஏற்பட்ட நிகர இலாபம் / (இழப்புகள்) | 345,826 | 27,960 | 1137% | 148,852 | 33,235 | 348% |
| ஏனைய நிகர செயற்பாட்டு வருமானம் | (26,530) | 179,833 | -115% | 9,214 | 72,955 | -87% |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | **4,335,187** | **3,797,604** | **14%** | **2,231,738** | **1,624,003** | **37%** |
| கடன்கள் மற்றும் ஏனைய இழப்புகளுக்கான சேதக்கழிப்பனவு | (801,230) | (1,038,702) | -23% | (381,588) | (555,120) | -31% |
| **நிகர செயற்பாட்டு வருமானம்** | **3,533,958** | **2,758,902** | **28%** | **1,850,150** | **1,068,883** | **73%** |
| ஆளணி செலவினங்கள் | (1,554,850) | (1,405,262) | 11% | (783,511) | (699,134) | 12% |
| பெறுமானத்தேர்வு மற்றும் படிமுறை கடன்தீர்வு செலவினங்கள் | (280,034) | (217,617) | 29% | (142,750) | (91,278) | 56% |
| ஏனைய செலவினங்கள் | (1,144,419) | (817,231) | 40% | (597,737) | (453,051) | 32% |
| **மொத்த நிர்வாகம் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினங்கள்** | **(2,979,304)** | **(2,440,110)** | **22%** | **(1,523,998)** | **(1,243,463)** | **23%** |
| **நிதிச் சேவைகளில் VAT வரிகளுக்கு முன்னர் செயற்பாட்டு இலாபம் / (நட்டம்), ச.பா.ப.வ** | **554,654** | **318,792** | **74%** | **326,152** | **(174,580)** | **287%** |
| நிதிச் சேவைகளில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) | (277,299) | (176,893) | 57% | (156,911) | (1,098) | 14192% |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) | (38,514) | - | 100% | (21,793) | - | 100% |
| **நிதிச் சேவைகளில் VAT வரிகளுக்குப் பின்னர் செயற்பாட்டு இலாபம் / (நட்டம்), ச.பா.ப.வ** | **238,841** | **141,899** | **68%** | **147,448** | **(175,678)** | **184%** |
| **வரிக்கு முன்னர் இலாபம் / (நட்டம்)** | **238,841** | **141,899** | **68%** | **147,448** | **(175,678)** | **184%** |
| வருமானவரிச் செலவினங்கள் | (88,745) | (63,660) | 39% | (40,730) | 73,173 | -156% |
| **காலப்பகுதிக்கான இலாபம் / (நட்டம்)** | **150,096** | **78,239** | **92%** | **106,718** | **(102,505)** | **204%** |
| **கீழ்வரும் சம்பந்தப்பட்ட இலாபம் / (நட்டம்):** | | | | | | |
| தலைமை கம்பனியின் பங்குதாரர்கள் | 150,096 | 78,239 | 92% | 106,718 | (102,505) | 204% |
| கட்டுப்பாடற்ற ஈடுபாடுகள் | - | - | - | - | - | - |
| | **150,096** | **78,239** | 92% | **106,718** | **(102,505)** | 204% |
| **இலாபத்தில் தலா பங்குக்கான ஈட்டல்கள்** | | | | | | |
| தலா சாதாரண பங்குக்கான அடிப்படை ஈட்டல்கள் (ரூபா) | 0.93 | 0.49 | 92% | 0.66 | (0.64) | 204% |
| தலா சாதாரண பங்குக்கான திரவ நிலை ஈட்டல்கள் (ரூபா) | 0.93 | 0.49 | 92% | 0.66 | (0.64) | 204% |

### திரட்டிய வருமானக்கூற்று

ரூ '000

| | வங்கி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஜூன் 30ல் முடிவடைந்த 6 மாத காலப்பகுதிக்கானது | | மாற்றம் | ஜூன் 30ல் முடிவடைந்த 3 மாத காலப்பகுதிக்கானது | | மாற்றம் |
| | 2023 | 2022 | | 2023 | 2022 | |
| காலப்பகுதிக்கான இலாபம்/ (நட்டம்) | 150,096 | 78,239 | 92% | 106,718 | (102,505) | 204% |
| **வருமானக் கூற்றுக்கு மீளவகைப்படுத்தப்படாத ஏனைய திரட்டிய வருமானம் / (செலவினங்கள்)** | | | | | | |
| வரையறுக்கப்பட்ட அனுகூலத்திட்டங்களில் கணிப்பீட்டு வருவாய்கள்/(நட்டங்கள்) | - | - | - | - | - | - |
| வரையறுக்கப்பட்ட அனுகூலத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட பிற்போடப்பட்ட வரி | - | - | - | - | - | - |
| ஏனைய திரட்டிய வருமானம் மூலம் சந்தைப் பெறுமதியில் ஒதுக்கப்பட்ட பங்குடைமையில் முதலீடுகள் மீள அளவையிடலில் வருவாய்கள் / (நட்டங்கள்) | - | - | - | - | - | - |
| **காலப்பகுதிக்கான ஏனைய திரட்டிய வருமானம்/(செலவினங்கள்) நிகர வரிகளில்** | - | - | - | - | - | - |
| **காலப்பகுதிக்கான மொத்த திரட்டிய வருமானம்/(செலவினங்கள்)** | **150,096** | **78,239** | **92%** | **106,718** | **(102,505)** | **204%** |
| **கீழ்வருவன சம்பந்தப்பட்ட மொத்த திரட்டிய வருமானம்/(செலவினங்கள்):** | | | | | | |
| தலைமை கம்பனியின் பங்குதாரர்கள் | 150,096 | 78,239 | 92% | 106,718 | (102,505) | 204% |
| கட்டுப்பாடற்ற ஈடுபாடுகள் | - | - | - | - | - | - |
| **காலப்பகுதிக்கான மொத்த திரட்டிய வருமானம் / (செலவினங்கள்)** | **150,096** | **78,239** | **92%** | **106,718** | **(102,505)** | **204%** |

### பங்குடைமை மாற்றங்கள் பற்றிய கூற்று

ரூ '000

| | கூறப்பட்ட மூலதனம்/ ஒதுக்கப்பட்ட மூலதனம் | ஒதுக்கங்கள் | | | | | மொத்த பங்குடைமை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஏனைய ஒதுக்கங்கள் | | | |
| **30.06.2022 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கானது** | சாதாரண வாக்கு பங்குகள் | நிலையான ஒதுக்கு நிதி | பிடித்துவைத்த ஈட்டல்கள் | OCI ஒதுக்கம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | பொது ஒதுக்கம் | |
| **01.01.2022 இல் உள்ளவாறு மீதி (ஆரம்ப மீதி)** | 11,287,765 | 314,173 | 2,500,153 | (19,052) | - | 46,657 | 14,129,697 |
| 2022 ஆம் ஆண்டின் 14 ஆம் இல. மிகைக் கட்டண வரிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட மிகைக் கட்டண வரிக்கான சரிசெய்தல் | | | (521,613) | | | | (521,613) |
| 2022 ஜனவரி 1 இல் உள்ளவாறான சரிசெய்யப்பட்ட மீதி | 11,287,765 | 314,173 | 1,978,540 | (19,052) | - | 46,657 | 13,608,083 |
| **காலப்பகுதிக்கான மொத்த திரட்டிய வருமானம்** | | | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் / (நட்டம்) (நிகர வரியில்) | - | - | 78,239 | - | | - | 78,239 |
| ஏனைய திரட்டிய வருமானம் (நிகர வரியில்) | - | - | - | - | | - | - |
| **காலப்பகுதிக்கான மொத்த திரட்டிய வருமானம் / (செலவினங்கள்)** | - | - | **78,239** | - | - | - | **78,239** |
| ஒதுக்க நிதிக்கு மாற்றப்பட்டது | - | - | - | - | | - | - |
| **பங்குடைமையில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட பங்குடைமை உடையோருடன் பரிமாற்றங்கள்** | | | | | | | |
| ஏனையவை | - | - | - | - | | - | - |
| **பங்குடைமை உடையோருடன் மொத்த பரிமாற்றங்கள்** | - | - | - | - | - | - | - |
| **30.06.2022 இல் உள்ளவாறு மீதி (இறுதி மீதி)** | **11,287,765** | **314,173** | **2,578,392** | **(19,052)** | - | **46,657** | **14,207,935** |
| **30.06.2023 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கானது** | | | | | | | |
| **01.01.2023 இல் உள்ளவாறு மீதி (ஆரம்ப மீதி)** | 11,287,765 | 317,231 | 1,767,576 | (19,052) | 259,037 | 46,657 | 13,659,215 |
| **காலப்பகுதிக்கான மொத்த திரட்டிய வருமானம்** | | | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் / (நட்டம்) (நிகர வரியில்) | - | - | 150,096 | - | | - | 150,096 |
| ஏனைய திரட்டிய வருமானம் (நிகர வரியில்) | - | - | - | - | | - | - |
| **காலப்பகுதிக்கான மொத்த திரட்டிய வருமானம் / (செலவினங்கள்)** | - | - | **150,096** | - | - | - | **150,096** |
| ஒதுக்க நிதிக்கு மாற்றப்பட்டது | - | - | - | - | | - | - |
| **பங்குடைமையில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட பங்குடைமை உடையோருடன் பரிமாற்றங்கள்** | | | | | | | |
| ஏனைய பரிவர்த்தனைகள் | - | - | - | - | | - | - |
| **பங்குடைமை உடையோருடன் மொத்த பரிமாற்றங்கள்** | - | - | - | - | - | - | - |
| **30.06.2023 இல் உள்ளவாறு மீதி (இறுதி மீதி)** | **11,287,765** | **317,231** | **1,917,673** | **(19,052)** | **259,037** | **46,657** | **13,809,311** |

**நிலையான ஒதுக்கு நிதி :-** ஒவ்வொரு உத்தரவுபெற்ற விசேடமான வங்கியும் வரிக்குப் பின்னரான இலாபத்தில் 5% க்குக் குறையாத ஒரு வழங்கல் ஏற்பாட்டை நிலையான ஒதுக்கு நிதிக்கு செய்தல் வேண்டும். அவ்வாறான ஏற்பாடு 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்கமுடைய 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கியியல் (திருத்தம்) சட்டம் மூலம் திருத்தப்பட்ட வங்கியியல் சட்டத்தில் கூறப்பட்டவாறு வங்கியின் பங்குடைமை மூலதனத்தின் 50% வீதத்துக்கு கூறப்பட்ட ஒதுக்கு நிதியின் தொகை வரும் வரையில் வழங்கப்பட வேண்டும். அதன் பின்னர் வரிக்குப் பின்னரான இலாபத்தில் 2% க்குக் குறையாத ஒரு ஏற்பாட்டை வங்கியின் பங்குடைமை மூலதனத்துக்கு கூறப்பட்ட நிதி சமமாகும் வரையில் நிலையான ஒதுக்கு நிதிக்கு வழங்க வேண்டும்.

**பொது ஒதுக்கீடு :** ஒரு நிலையான ஒதுக்கு நிதிக்கு ஏற்பாடு வழங்கல் மற்றும் தகுதியுள்ள பங்குதாரர்களுக்கு இடைக்கால பங்கிலாபம் கொடுப்பனவு ஆகியவற்றின் பின்னர் பொது ஒதுக்கீடு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இந்த ஒதுக்கீடு எதிர்காலத்தில் வங்கியின் மூலதனமிடல் நோக்கத்துக்காக வங்கியில் பயன்படுத்தப்படும்.

OCI **ஊடாக நியாய மதிப்பு/ விற்பனை ஒதுக்கீட்டுக்கு/மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு:** பெறக்கூடியவை மூலம் சந்தைப்பெறுமதி கூறப்படாத பங்குடைமை மூலதனத்தில் செய்யப்பட்ட சந்தைப்பெறுமதியைக் கொண்டுள்ள விற்பனை ஒதுக்கீட்டுக்குப் பெறக்கூடியவை

### அளவிடுதல் அடிப்படையில் நிதிச்சாதனங்களின் ஆய்வு

ரூ '000

**வங்கி - 2023 ஜூன் 30 இல் உள்ளவாறு**

| நிதிச் சொத்துக்கள் | AC | FVPL | FVOCI | Total |
|---|---|---|---|---|
| பணம் மற்றும் பணத்துக்குச் சமமானவை | 3,089,752 | - | - | 3,089,752 |
| வங்கிகளில் இடப்பட்டவை | 15,537,348 | - | - | 15,537,348 |
| இலாபம் அல்லது நட்டம் மூலம் சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | - | 2,846,374 | - | 2,846,374 |
| கடன்தீர்வு பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் | | | | |
| - ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கவேண்டியவை மற்றும் கடன்கள் | 104,847,810 | - | - | 104,847,810 |
| - கடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | 25,802,544 | - | - | 25,802,544 |
| ஏனைய திரட்டிய வருமானம் மூலம் சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச்சொத்துகள் | - | - | 56,939 | 56,939 |
| **மொத்த நிதிச் சொத்துகள்** | 149,277,454 | 2,846,374 | 56,939 | 152,180,766 |

| நிதிப் பொறுப்புகள் | AC | FVPL | Total |
|---|---|---|---|
| படிமுறை கடன்தீர்வு பெறுமதியில் நிதிப்பொறுப்புகள் | | | |
| - வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 109,332,121 | - | 109,332,121 |
| - ஏனைய கடன் கொடுத்தவர்களுக்கு செலுத்த வேண்டியவை | 27,671,401 | - | 27,671,401 |
| உபவகை கடன் | 4,319,622 | - | 4,319,622 |
| **மொத்த நிதிப் பொறுப்புகள்** | 141,323,143 | - | 141,323,143 |

**வங்கி - 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** (கணக்காய்வு செய்யப்பட்டது)

| நிதிச் சொத்துக்கள் | AC | FVPL | FVOCI | Total |
|---|---|---|---|---|
| பணம் மற்றும் பணத்துக்குச் சமமானவை | 3,072,845 | - | - | 3,072,845 |
| வங்கிகளில் இடப்பட்டவை | 18,205,196 | - | - | 18,205,196 |
| இலாபம் அல்லது நட்டம் மூலம் சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | - | 1,905,738 | - | 1,905,738 |
| கடன்தீர்வு பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் | | | | |
| - ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கவேண்டியவை மற்றும் கடன்கள் | 110,525,450 | - | - | 110,525,450 |
| - கடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | 19,819,736 | - | - | 19,819,736 |
| ஏனைய திரட்டிய வருமானம் மூலம் சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச்சொத்துகள் | - | - | 56,939 | 56,939 |
| **மொத்த நிதிச் சொத்துகள்** | 151,623,227 | 1,905,738 | 56,939 | 153,585,904 |

| நிதிப் பொறுப்புகள் | AC | FVPL | Total |
|---|---|---|---|
| படிமுறை கடன்தீர்வு பெறுமதியில் நிதிப்பொறுப்புகள் | | | |
| - வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 107,533,002 | - | 107,533,002 |
| - ஏனைய கடன் கொடுத்தவர்களுக்கு செலுத்த வேண்டியவை | 30,704,548 | - | 30,704,548 |
| உபவகை கடன் | 5,055,590 | - | 5,055,590 |
| **மொத்த நிதிப் பொறுப்புகள்** | 143,293,140 | - | 143,293,140 |

AC - படிமுறை கடன்தீர்வு தொகை | FVPL - இலாபம் அல்லது நட்டம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிதிச்சொத்துக்கள் - சந்தை பெறுமதியில் அளவிடப்பட்டது | FVOCI - ஏனைய திரட்டிய வருமானம் மூலம் சந்தை பெறுமதியில் அளவிடப்பட்டது

### நிதி நிலைமை பற்றிய கூற்று

ரூ '000

| | 30.06.2023 இல் உள்ளவாறான | 31.12.2022 இல் உள்ளவாறான (கணக்காய்வு செய்யப்பட்டது) | மாற்றம் |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 3,089,752 | 3,072,845 | 1% |
| வங்கிகளில் இடப்பட்டவை | 15,537,348 | 18,205,196 | -15% |
| இலாபம் அல்லது நட்டம் மூலம் சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 2,846,374 | 1,905,738 | 49% |
| படிமுறை கடன்தீர்வு பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் | | | |
| - ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கவேண்டியவை மற்றும் கடன்கள் | 104,847,810 | 110,525,450 | -5% |
| - கடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | 25,802,544 | 19,819,736 | 30% |
| ஏனைய திரட்டிய வருமானம் மூலம் சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச்சொத்துகள் | 56,939 | 56,939 | - |
| துணை நிறுவனங்களில் முதலீடு | 6,163 | 6,163 | - |
| ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணம் | 823,040 | 1,093,191 | -25% |
| பயன்பாட்டு உரிமைச் சொத்து | 669,753 | 609,201 | 10% |
| விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள நடைமுறை சொத்து அல்லாதவை | - | 43,566 | -100% |
| புலனாகாச் சொத்துகள் | 777,639 | 538,831 | 44% |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் | 600,628 | 600,628 | 0% |
| ஏனைய சொத்துகள் | 3,171,305 | 3,043,547 | 4% |
| **மொத்து சொத்துகள்** | 158,229,293 | 159,521,032 | -1% |
| **பொறுப்புகள்** | | | |
| படிமுறை கடன்தீர்வு பெறுமதியில் நிதிச் பொறுப்புகள் | | | |
| - வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 109,332,121 | 107,533,002 | 2% |
| - ஏனைய கடன் கொடுத்தவர்களுக்கு செலுத்த வேண்டியவை | 27,671,401 | 30,704,548 | -10% |
| உபவகை கடன் | 4,319,622 | 5,055,590 | -15% |
| ஒய்வு அனுகூல கடப்பாடுகள் | 775,713 | 714,077 | 9% |
| நடைமுறை வரிப் பொறுப்புகள் | 242,883 | 182,245 | 33% |
| ஏனைய பொறுப்புகள் | 2,078,243 | 1,672,355 | 24% |
| **மொத்த நிதிப் பொறுப்புகள்** | 144,419,982 | 145,861,817 | -1% |
| **பங்குடைமை** | | | |
| கூறப்பட்ட மூலதனம்/ ஒதுக்கப்பட்ட மூலதனம் | 11,287,765 | 11,287,765 | - |
| நிலையான ஒதுக்கு நிதி | 317,231 | 317,231 | - |
| தடுத்து வைக்கப்பட்ட ஈட்டல்கள் | 1,917,673 | 1,767,576 | 8% |
| ஏனைய ஒதுக்கீடுகள் | 286,642 | 286,642 | - |
| **மொத்த பங்குடைமை** | 13,809,311 | 13,659,215 | 1% |
| **மொத்த பங்குடைமை மற்றும் பொறுப்புகள்** | 158,229,293 | 159,521,032 | -1% |
| எதிர்பாரா பொறுப்புகள் மற்றும் அர்ப்பணிப்புகள் | 960,454 | 728,285 | 32% |
| தலா பங்கிற்கான நிகர சொத்து மதிப்பு (ரூபா) | 86 | 85 | 1% |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 1,345 | 1,381 | -3% |
| கிளைகளின் எண்ணிக்கை | 94 | 94 | - |

### பணப்பாய்ச்சல் கூற்று

ரூ '000

| | 01.01.2023 முதல் 30.06.2023 | 01.01.2022 முதல் 30.06.2022 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்/ (பயன்படுத்திய)** | | |
| பெறப்பட்ட வட்டி | 13,853,850 | 9,190,132 |
| பெறப்பட்ட கட்டணம் மற்றும் தரகு | 140,742 | 171,024 |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்தவை | 107,226 | 9,053 |
| வட்டி கொடுப்பனவு | (11,836,935) | (5,529,169) |
| ஊழியர்களுக்கு காசு கொடுப்பனவு | (1,361,942) | (1,335,840) |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் வழங்குநர்களுக்கான கட்டணங்கள் | (763,236) | (781,892) |
| கட்டணம் மற்றும் தரகு செலவினங்கள் | (16,020) | (13,154) |
| **செயற்பாட்டு சொத்துகளில் மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டு இலாபம்** | **123,685** | **1,710,153** |
| **செயற்பாடு சொத்துகளில் (அதிகரிப்பு)/ குறைப்பு** | | |
| வாடிக்கையாளர்களுக்கு முற்கொடுப்பனவு நிதிகள் | 6,632,463 | (955,545) |
| ஏனைய குறுகிய தவணைப் பிணைகளின் நிகர (அதிகரிப்பு)/ குறைப்பு | (510,128) | (953) |
| ஏனைய சொத்துக்களின் நிகர (அதிகரிப்பு)/ குறைப்பு | (362,000) | (465,239) |
| **செயற்பாடு பொறுப்புகளில் அதிகரிப்பு/ (குறைப்பு)** | | |
| வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புகள் | 1,810,818 | 3,783,015 |
| ஏனைய பொறுப்புக்களின் நிகர அதிகரிப்பு/ (குறைப்பு) | (64,096) | (529,009) |
| **வருமான வரிக்கு முன் செயற்பாட்டு நடவடிக்கைகளில் நிகர காசு** | **7,630,742** | **3,542,421** |
| நிதிச் சேவைகள் மீதான VAT மற்றும் SSCL | (288,884) | (240,762) |
| செலுத்தப்பட்ட வரி | (23,903) | (503,791) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் நிகர காசு** | **7,317,955** | **2,797,867** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்/ (பயன்படுத்தப்பட்டது)** | | |
| கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | - | 346 |
| பிணைகள் நடவடிக்கைகளில் (அதிகரிப்பு)/ குறைப்பு | (593,552) | (785,021) |
| திறைசேரி முறிகள் மற்றும் ஏனைய முதலீடுகளில் (அதிகரிப்பு)/ குறைப்பு | (2,556,432) | (8,905,294) |
| ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணம் விற்பனையில் கிடைத்தவை | 75,255 | 165 |
| ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணம் கொள்வனவு | (73,539) | (101,959) |
| புலனாகாச் சொத்துகளின் கொள்வனவு | (69,687) | (189,219) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட) / இருந்தான நிகர காசு** | **(3,217,955)** | **(9,980,982)** |
| **நிதியளிப்பு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட) இருந்தான காசு பாய்ச்சல்** | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | (241,048) |
| நீண்ட தவணைக் கடன்கள் மீள்கொடுப்பனவு | (15,646,750) | (17,416,098) |
| உபபிரிவு கடன்களுக்காக செலுத்திய வட்டி | (503,531) | (195,587) |
| கடன் வாங்கலில் அதிகரிப்பு/ (குறைப்பு) | 12,449,555 | 26,898,186 |
| **நிதியளிப்பு நடவடிக்கைகளில் / (பயன்படுத்தப்பட்ட) நிகர காசு பாய்ச்சல்** | **(3,700,726)** | **9,045,452** |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவைகளில் நிகர அதிகரிப்பு/ (குறைப்பு)** | 399,274 | 1,862,337 |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 3,348,345 | 7,312,915 |
| **காலப்பகுதியின் முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | **3,747,620** | **9,175,252** |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் கணக்கிணக்கம்** | **3,747,620** | **9,175,252** |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 3,089,752 | 3,642,002 |
| மீள்கொள்வனவு ஒப்பந்தம் | 657,867 | 780,850 |
| 3 மாதங்களுக்கும் குறைவான நிலையான வைப்புக்கள் | - | 4,752,400 |
| | **3,747,620** | **9,175,252** |

**உறுதிப்படுத்தல் :**

மேற்படி நிதிக் கூற்றுக்கள 2007அம் ஆண்டின் 07அம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகளுக்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை நாம் உறுதிபடுத்துகின்றோம்.

ஒப்பம்
சன்ஜீவ ஜயசிங்க
நிதி தலைவர்

ஒப்பம்
ஷன்க அபேவர்தன
டிஜிஎம் - நிதி மற்றும் திட்டமிடல்/ சீஎப்ஓ

சனச அபிவிருத்தி வங்கி பீஎல்சீயின் பணிப்பாளர்களாகிய நாங்கள் இணைந்து உறுதிப்படுத்துவது யாதெனில்:-

(அ) இலங்கை மத்திய வங்கியால் அறிவுறுத்தப்பட்ட படிவம் மற்றும் வரையறைகளுக்கு ஏற்ப மேற்படி கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன: மற்றும்

(ஆ) இந்த கூற்றுகளில் அடங்கியுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டது என குறிப்பிடப்பட்டாலன்றி ஏனையவை வங்கியின் கணக்காய்வு செய்யப்படாத நிதிக் கூற்றுக்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

ஒப்பம்
சாமிந்த குமாரசிறி
பணிப்பாளர்

ஒப்பம்
பேராசிரியர் சம்பத் அமரதுங்க
பணிப்பாளர்

ஒப்பம்
பிரியந்த தல்வத்த
தலைமை நிறைவேற்று அதிகாரி

10 ஆகஸ்ட் 2023 - கொழும்பு

SDB வங்கி

#உங்களைமதிக்கும்

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி இலங்கை மத்திய வங்கியால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு உத்தரவுபெற்ற சிறப்பு வங்கியாகும். பிச் தரப்படுத்தல் BB+ (lka), பதிவு இல : PB62PQ

# சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

## 2023 ஜூன் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான இடைக்கால நிதிக்கூற்றுகள்

### பகுதிவாரியான பகுப்பாய்வு

ரூ '000

| வங்கி<br>ஜூன் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கானது | வங்கியியல் | | குத்தகை மற்றும் வாடகை கொள்வனவு | | திறைசேரி | | அடகு சேவை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 |
| வட்டி வருமானம் | 10,600,491 | 6,572,952 | 546,998 | 806,718 | 3,712,156 | 1,504,019 | 803,946 | 171,092 | 15,663,591 | 9,054,781 |
| கூட்டு: இடை பிரிவு வட்டி வருமானம் | 2,096,977 | 506,585 | - | - | 2,446,731 | 1,934,680 | - | - | 4,543,708 | 2,441,265 |
| **நிகர வட்டி வருமானம்** | **12,697,468** | **7,079,538** | **546,998** | **806,718** | **6,158,887** | **3,438,699** | **803,946** | **171,092** | **20,207,299** | **11,496,046** |
| வட்டிச் செலவீனம் | (8,154,341) | (3,088,781) | (517,243) | (279,209) | (2,526,956) | (2,127,217) | (603,226) | (116,588) | (11,801,766) | (5,611,795) |
| கூட்டு: இடை பிரிவு வட்டிச் செலவீனம் | (2,446,731) | (1,934,680) | - | - | (2,096,977) | (506,585) | - | - | (4,543,708) | (2,441,265) |
| **தேறிய வட்டி வருமனம்** | 2,096,396 | 2,056,077 | 29,755 | 527,509 | 1,534,954 | 804,897 | 200,720 | 54,504 | 3,861,825 | 3,442,986 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 164,385 | 155,037 | 4,444 | 8,245 | - | - | - | - | 168,829 | 163,282 |
| கட்டணம் மற்றும் தரகு செலவீனம் | (15,065) | (12,064) | (956) | (1,090) | - | - | - | - | (16,020) | (13,154) |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | 149,320 | 142,973 | 3,489 | 7,155 | - | - | - | - | 152,809 | 150,128 |
| வர்த்தகத்தில் நிகர இலாபம்/ (இழப்புகள்) | - | - | - | - | 1,258 | (3,304) | - | - | 1,258 | (3,304) |
| நிதிச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி மதிப்பீட்டின் மூலமாக ஏற்பட்ட நிகர இலாபம் / (இழப்புகள்) | - | - | - | - | 345,826 | 27,960 | - | - | 345,826 | 27,960 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் (நிகர) | (26,530) | 179,487 | - | - | - | 346 | - | - | (26,530) | 179,833 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | 2,219,186 | 2,378,537 | 33,244 | 534,663 | 1,882,037 | 829,899 | 200,720 | 54,504 | 4,335,187 | 3,797,604 |
| கடன்கள் மற்றும் பிற இழப்புகளுக்காக சேதக்கழிவு | (771,531) | (1,019,934) | (29,189) | (18,853) | (3,865) | 1,050 | 3,356 | (965) | (801,230) | (1,038,702) |
| **நிகர செயற்பாடு வருமானம்** | 1,447,656 | 1,358,604 | 4,054 | 515,810 | 1,878,172 | 830,949 | 204,075 | 53,539 | 3,533,958 | 2,758,902 |
| பெறுமானத்தேய்வு மற்றும் படிமுறை கடன் தீர்வு | (246,086) | (192,848) | (15,610) | (17,429) | (135) | (97) | (18,204) | (7,242) | (280,034) | (217,617) |
| **பிரிவு பெறுபேறு** | 1,201,570 | 1,165,755 | (11,555) | 498,381 | 1,878,038 | 830,852 | 185,871 | 46,297 | 3,253,923 | 2,541,285 |
| ஒதுக்கப்படாத செலவீனங்கள் | | | | | | | | | (2,699,269) | (2,222,493) |
| நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | | | | | | | | | (277,299) | (176,893) |
| சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி | | | | | | | | | (38,514) | - |
| **வரிக்கு முன் இலாபம்** | | | | | | | | | **238,841** | **141,899** |
| வரிச் செலவீனங்கள் | | | | | | | | | (88,745) | (63,660) |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | | | | | | | | | 150,096 | 78,239 |
| **ஏனைய திரட்டிய வருமானம்** | | | | | | | | | | |
| காலப்பகுதிக்கான ஏனைய திரட்டிய வருமானம், நிகர வரியில் | | | | | | | | | - | - |
| **காலப்பகுதிக்கான மொத்த திரட்டிய வருமானம்** | | | | | | | | | **150,096** | **78,239** |
| **ஜூன் 30இல் உள்ளவாறு** | | | | | | | | | | |
| **பிரிவுச் சொத்து** | 92,181,376 | 99,414,932 | 5,847,217 | 8,433,762 | 47,332,956 | 42,620,147 | 6,819,217 | 3,714,438 | 152,180,766 | 154,183,280 |
| ஒதுக்கப்படாத சொத்துக்கள் | - | - | - | - | - | - | - | - | 6,048,527 | 5,587,113 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **92,181,376** | **99,414,932** | **5,847,217** | **8,433,762** | **47,332,956** | **42,620,147** | **6,819,217** | **3,714,438** | **158,229,293** | **159,770,393** |
| **பிரிவு பொறுப்புக்கள்** | 98,165,753 | 86,711,034 | 6,226,816 | 7,836,762 | 32,765,496 | 48,520,985 | 7,261,918 | 3,256,339 | 144,419,982 | 146,325,119 |
| மொத்த மூலதன பங்குகள் | - | - | - | - | - | - | - | - | 13,809,311 | 13,445,274 |
| **மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **98,165,753** | **86,711,034** | **6,226,816** | **7,836,762** | **32,765,496** | **48,520,985** | **7,261,918** | **3,256,339** | **158,229,293** | **159,770,393** |
| **ஜூன் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கானது** | | | | | | | | | | |
| நடைமுறை சொத்து அல்லாதவற்றுக்கு சேர்ந்தவை | 125,924 | 259,315 | 7,988 | 22,120 | - | - | 9,315 | 9,742 | 143,226 | 291,178 |

### கடன் மற்றும் முற்பணங்கள், அர்ப்பணிப்புகள் எதிர்பாரா செலவுகள் மற்றும் தேசகழிப்பனவுகளின் ஆய்வு

ரூ '000

| | **30.06.2023** இல் உள்ளவாறான | **31.12.2022** இல் உள்ளவாறான (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| **உற்பத்தி அடிப்படையில் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள்** | | |
| **உற்பத்தி அடிப்படையில் : இலங்கை ரூபா** | | |
| அடகு சேவை | 6,834,095 | 5,820,218 |
| காசு எல்லை | 9,633,719 | 11,770,371 |
| ஊழியர் கடன்கள் | 2,025,046 | 2,046,486 |
| குத்தகை வாடகைகள் வருமதி | 6,615,703 | 8,236,392 |
| தவணைக் கடன்கள் | - | |
| வர்த்தக கடன்கள் | 1,779,602 | 3,247,585 |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவன கடன்கள் | 14,623,973 | 14,400,557 |
| கூட்டுறவு கடன்கள் | 1,714,399 | 2,074,009 |
| வீடமைப்பு கடன்கள் | 2,659,557 | 2,788,477 |
| நிலையான மற்றும் மிதக்கும் தனிநபர் கடன்கள் | 25,640,502 | 26,549,542 |
| உபஹார கடன்கள் | 39,085,878 | 38,581,285 |
| ஏனைய தனிப்பட்ட கடன்கள் | 827,013 | 804,843 |
| **மொத்தம்** | 111,439,488 | 116,319,764 |
| **உற்பத்தி - அடிப்படையில் அர்ப்பணிப்புக்கள் மற்றும் எதிர்பாரா செலவுகள்** | | |
| **உற்பத்தி அடிப்படையில் - இலங்கை ரூபா** | | |
| உத்தரவாதங்கள் | 259,317 | 249,175 |
| வரையப்படாத கடன் வரிகள் | 701,137 | 479,110 |
| **மொத்தம்** | 960,454 | 728,285 |
| **மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள், அர்பணிப்புகள் மற்றும் எதிர்பாரா செலவுகள்** | **112,399,942** | **117,048,049** |
| **கடன்கள் மற்றும் முற்பணங்கள், அர்ப்பணிப்புகள் மற்றும் எதிர்பாரா செலவுகளின் கட்டங்களாக சேதக்கழிப்பனவு** | | |
| **நிகர கடன்கள் மற்றும் முற்பணங்கள், அர்ப்பணிப்புகள் மற்றும் எதிர்பாரா செலவுகள்** | **112,399,942** | **117,048,049** |
| கழிக்க: கட்டடம் 1 இன் கீழ் ஒன்று சேர்ந்த சேதக்கழிப்பனவு | (797,269) | (837,536) |
| கட்டடம் 2 இன் கீழ் ஒன்று சேர்ந்த சேதக்கழிப்பனவு | (1,276,465) | (969,078) |
| கட்டடம் 3 இன் கீழ் ஒன்று சேர்ந்த சேதக்கழிப்பனவு | (4,517,944) | (3,987,699) |
| **நிகர கடன்கள் மற்றும் முற்பணங்கள், அர்ப்பணிப்புகள் மற்றும் எதிர்பாரா செலவுகள்** | **105,808,264** | **111,253,735** |
| **காலப்பகுதியில் சேதக்கழிவுகளின் அசைவு** | | |
| **கட்டம் 1 இன் கீழ்** | | |
| ஆரம்ப மீதி | 837,536 | 684,544 |
| வருமானக்கூற்றுக்கு கட்டணங்கள்/ (மீள எழுதப்பட்டவை) | (40,267) | 152,992 |
| ஏனைய அசைவுகள் | - | - |
| இறுதி மீதி | 797,269 | 837,536 |
| **கட்டம் 2 இன் கீழ்** | | |
| ஆரம்ப மீதி | 969,078 | 468,754 |
| வருமானக்கூற்றுக்கு கட்டணங்கள்/ (மீள எழுதப்பட்டவை) | 307,387 | 500,325 |
| ஏனைய அசைவுகள் | - | - |
| இறுதி மீதி | 1,276,465 | 969,078 |
| **கட்டம் 3 இன் கீழ்** | | |
| ஆரம்ப மீதி | 3,987,699 | 2,742,429 |
| வருமானக்கூற்றுக்கு கட்டணங்கள்/ (மீள எழுதப்பட்டவை) | 530,245 | 1,246,353 |
| ஆண்டில் கழிக்கப்பட்டவை | - | (1,083) |
| ஏனைய அசைவுகள் | - | - |
| இறுதி மீதி | 4,517,944 | 3,987,699 |
| **மொத்த சேதகழிப்பனவுகள்** | **6,591,678** | **5,794,314** |

### வைப்புகளின் குறிப்பு

ரூ '000

| | **30.06.2023** இல் உள்ளவாறான | **31.12.2022** இல் உள்ளவாறான (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| **உற்பத்தி அடிப்படையில் - இலங்கை ரூபா** | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 15,181,719 | 14,542,774 |
| நிலையான வைப்புக்கள் | 94,150,402 | 92,990,228 |
| **மொத்த வைப்புக்கள்** | **109,332,121** | **107,533,002** |

### தெரிந்தெடுக்கப்பட்ட செயற்பாட்டு குறிகாட்டிகள் (ஒழுக்குமுறை அறிக்கையிடலுக்கு ஏற்ப)

| விடயம் | **30.06.2023** இல் உள்ளவாறான | **31.12.2022** இல் உள்ளவாறான (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| **ஒழுங்குமுறை மூலதன போதுமை (இலங்கை ரூபா மில்லியன்களில்)** | | |
| சாதாரண பங்குடைமை அடுக்கு 1 | 12,281 | 12,519 |
| மைய (அடுக்கு 1) மூலதனம் | 12,281 | 12,519 |
| மொத்த மூலதன தளம் | 14,449 | 14,895 |
| **ஒழுங்குமுறை மூலதன விகிதம் (%)** | | |
| பொதுவான பங்கு அடுக்கு 1 மூலதன விகிதம் (%) - (குறைந்தபட்ச தேவை - 2023-7.50%, 2022-6.50%) | 12.88 | 12.92 |
| அடுக்கு 1 மூலதன விகிதம் (%) - (குறைந்தபட்ச தேவை - 2023-8.50%, 2022-8.00%) | 12.88 | 12.92 |
| மொத்த மூலதன விகிதம் (%) - (குறைந்தபட்ச தேவை - 2023-12.50%, 2022- 12.00%) | 15.16 | 15.37 |
| **இயக்கத்துக்கான விகிதம் (குறைந்தபட்ச தேவை 3%)** | 7.78 | 7.87 |
| **ஒழுங்குமுறை திரவப்படுத்தல்** | | |
| நிலையான திரவ சொத்துகள் (இலங்கை ரூபா மில்லியன்களில்) | 33,672 | 23,309 |
| நிலையான திரவ சொத்து விகிதம் (%) - (குறைந்தபட்ச தேவை, 20%) | 32.45 | 23.51 |
| உயர்தர திரவ சொத்துக்களின் மொத்த இருப்பு (இலங்கை ரூபா மில்லியன்களில்) | 27,798 | 20,100 |
| திரவப்படுத்தல் பாதுகாப்பு விகிதம் (% ) - (குறைந்தபட்ச தேவை - 2022-100%, 2021-90%) | 222.93 | 191.22 |
| நிகர நிலையான நிதியிடல் விகிதம் (%) - (குறைந்தபட்ச தேவை - 100%) | 186.23 | 241.61 |
| **சொத்துக்கள் தரம் (கடன் பிரிவின் தரம்)** | | |
| குறை கடன்கள் (நிலை 3) விகிதம் (%) | 7.42 | 7.57 |
| நிலை 3இற்கான குறை கடன்கள் (நிலை 3) விகிதம் (%) | 36.28 | 31.93 |
| **இலாபத்தன்மை** | | |
| வட்டி விளிம்பு (%) | 4.90 | 4.45 |
| சொத்துகளில் திரும்பல் (வரிகளுக்கு முன்) (%) | 0.30 | 0.06 |
| பங்கிலிருந்தான வருவாய் (%) | 2.19 | 0.44 |

| **பங்கீட்டுத் தகவல்** | **30.06.2023** | **30.06.2022** |
|---|---|---|
| பங்கொன்றின் சந்தைப்பெறுமதி (ரூபா) | 29.20 | 20.60 |
| காலப்பகுதியில் பங்கொன்றின் உச்சவிலை (ரூபா) | 31.00 | 21.50 |
| காலப்பகுதியில் பங்கொன்றின் குறைந்தபட்ச விலை (ரூபா) | 22.10 | 20.40 |

### பங்குதாரர்களின் தகவல்

#### 2023.06.30இல் உள்ளவாறான இருபது மிகப்பெரிய பங்குதாரர்கள்

| இல. | பங்குதாரரின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | உரிமை (%) |
|---|---|---|---|
| 1 | ஐகொனிக் பிராபர்ட்டி ட்வென்டி த்ரீ (பிரைவேட்) லிமிடெட் | 24,104,800 | 15.00% |
| 2 | செந்தில்வேல் ஹோல்டிங்ஸ் (PVT) Ltd | 18,244,698 | 11.35% |
| 3 | நெதர்லாண்ட்ஸ் ஃபைனான்சியரிங்ஸ்-மாட்சாப்பிஜ் வூர் ஒன்ட்விக்கெல்லிங்ஸ்லேண்டன் என்.வி. | 17,609,503 | 10.96% |
| 4 | அயென்க ஹோல்டிங்ஸ் பிறைவட் லிமிட்டட் | 17,604,953 | 10.96% |
| 5 | வளரும் நாடுகளுக்கான பெல்ஜிய முதலீட்டு நிறுவனம் SA/NV | 16,069,800 | 10.00% |
| 6 | சணச லைஃப் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (ஆயுள்/பொது) | 4,715,996 | 2.93% |
| 7 | அலியான்ஸ் பினான்ஸ் கம்பனி பீஎல்சீ | 3,516,310 | 2.19% |
| 8 | SBI எமர்ஜிங் ஏசியா பினான்சியல் செக்டர் பண்ட் PTE. LTD | 2,885,618 | 1.80% |
| 9 | பீப்பல்ஸ் லீஸிங் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ / எல்.பீ. ஹபன்கம | 2,682,055 | 1.67% |
| 10 | பீப்ல்ஸ் லீஸிங் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ | 2,271,260 | 1.41% |
| 11 | டாக்டர் டி. செந்தில்வேல் | 1,664,537 | 1.04% |
| 12 | இலங்கை வங்கி - சீபேன்க் யுனிட் டிரஸ்ட் கணக்கு | 1,539,241 | 0.96% |
| 13 | ஹட்டன் நெஷனல் வங்கி பீஎல்சீ / சரவணன் நீலகண்டன் | 1,440,010 | 0.90% |
| 14 | கேகாலை சணச பங்குதாரர்கள் அறக்கட்டளை நிறுவனம் லிமிடெட் | 1,260,246 | 0.78% |
| 15 | சணச பொது காப்புறுதி நிறுவனம் லிமிடெட் | 1,124,418 | 0.70% |
| 16 | பொல்கஹவெல சனச பங்குதாரர்கள் அறக்கட்டளை நிறுவனம் | 1,014,098 | 0.63% |
| 17 | நிகவெரட்டிய திரிப்ட் அன்ட் கிரெடிட் கோப்பரேட்டிவ் சொசைட்டி யூனியன் லிமிடெட் | 992,849 | 0.62% |
| 18 | DFCC வங்கி பீஎல்சீ / ஜே.என். லங்கா ஹோல்டிங்ஸ் கம்பனி (பீவீடி) லிமிடெட் | 982,521 | 0.61% |
| 19 | பிங்கிரிய பல்நோக்கு கூட்டுறவு சங்கம் லிமிடெட் | 970,900 | 0.60% |
| 20 | சனச பெடரேஷன் லிமிடெட் | 811,816 | 0.51% |
| | உப மொத்தம் | 121,505,629 | 75.61% |
| | ஏனைய பங்குதாரர்கள் வைத்துள்ள பங்குகள் | 39,193,203 | 24.39% |
| | **மொத்தம்** | **160,698,832** | **100.00%** |

குறிப்பு -CSE பட்டியல் விதிகளின் பிரிவு 7.6 (iii) க்கு இணங்க, இந்த நிதிநிலை அறிக்கையில் ஒரே பங்குதாரருக்குச் சொந்தமான ஒரு குழுவில் பல CDS கணக்குகளை இணைத்த பிறகு வங்கி முதல் 20 பங்குதாரர்களை வெளிப்படுத்தியுள்ளது.

| **30.06.2023 இல் உள்ளவாறான** | |
|---|---|
| பங்குகளின் மொத்த எண்ணிக்கை | 160,698,832 |
| பொது பங்குகளின் எண்ணிக்கை | 95,333,569 |
| பொதுப் பங்குதாரர்களின் எண்ணிக்கை | 38,862 |
| பொதுப் பங்குகளின் விகிதாசாரம் | 59.32% |
| சந்தை மூலதனமிடல் | 4,692,405,894 |
| மிதப்பு சரிசெய்யப்பட்ட சந்தை மூலதனம் | 2,783,740,215 |
| கொழும்பு பங்குப் பரிமாற்றத்தின் விதிகள் பட்டியலின் 7.13.1 (a) விதியின் விருப்பத்தெரிவு 4 இன் கீழ் தேவைப்படும் பொது பங்குகளின் குறைந்தபட்ச விகிதாசாரம் | 10% |

#### 2023.06.30இல் உள்ளவாறு பணிப்பாளர்கள் வைத்துள்ள பங்குகள்

| இல. | பெயர் | பங்குகளின் தொகை | இல. | பெயர் | பங்குகளின் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | செல்வி. தினிதி ரத்னாயக்க (தலைவி) | - | 7 | திரு. எஸ்.எச். சரத் நந்தசிறி | - |
| 2 | பேராசிரியர் எஸ். அமரதுங்க | - | 8 | திரு. கொன்ரட் டியஸ் | - |
| 3 | திரு. சாமிந்த குமாரசிறி | - | 9 | திரு. நவீந்ர சூரியராச்சி | - |
| 4 | திரு. பிரசன்ன பிரேமரத்ன | 1,500 | 10 | திரு.ரோமானி டி சில்வா | 104,650 |
| 5 | திரு. பீ.ஆர்.ஏ. பண்டார | 11,000 | 11 | திரு. சந்தன திசாநாயக்க | - |
| 6 | திரு. துசாந்த விஜேமன்ன | - | 12 | டாக்டர். மகேஷ ரணசோம | - |

SDB வங்கி

#உங்களைமதிக்கும்

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி இலங்கை மத்திய வங்கியால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு உத்தரவுபெற்ற சிறப்பு வங்கியாகும். பிச் தரப்படுத்தல் BB+ (lka), பதிவு இல : PB62PQ

# சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

## 2023 ஜூன் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான இடைக்கால நிதிக்கூற்றுகள்

### நிதிச் சாதனங்களின் சாதாரண பெறுமதி வெளியீடு

நிதி அறிக்கைகளில் நியாயமான மதிப்பு அளவிடப்படும் அல்லது வெளிப்படுத்தப்படும் அனைத்து நிதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி நியாயமான வரிசைமுறைக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ளன:

நிலை 1 : ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புகளுக்கான செயலில் உள்ள சந்தைகளில் மேற்கோள் காட்டப்பட்ட (சரிசெய்யப்படாத) விலைகள்.

நிலை 2 : பதிவுசெய்யப்பட்ட நியாயமான மதிப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் அனைத்து உள்ளீடுகளும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காணக்கூடிய பிற நுட்பங்கள்

நிலை 3 : கண்காணிக்கக்கூடிய சந்தை தரவின் அடிப்படையில் பதிவு செய்யப்படாத நியாயமான மதிப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் உள்ளீடுகளைப் பயன்படுத்தும் நுட்பங்கள்

31 டிசம்பர் 2022 என மதிப்பிடப்பட்ட மதிப்புகளுடன் ஒப்பிடுகையில், நிலை 3 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட நிதி சொத்துக்களின் நியாயமான மதிப்பில் பொருள் மாற்றங்கள் இல்லை. 2023 ஜூன் 30ம் திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதியில், நிலை 3 நிதி கருவிகளின் நியாயமான மதிப்புகளை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு மாதிரிகள் மற்றும் அனுமானங்களை வங்கி மாற்றவில்லை.

### சாதாரண பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துகள் மற்றும் நிதிப் பொறுப்புகள் - சாதாரண பெறுமதிகளின் படி நிலைகள் ரூ '000

| | 2023 ஜூன் 30இல் உள்ளவாறான | | | |
|---|---|---|---|---|
| | நிலை 1 (இ. ரூபா) | நிலை 2 (இ. ரூபா) | நிலை 3 (இ. ரூபா) | மொத்தம் (இ. ரூபா) |
| **இலாபம் அல்லது நட்டம் ஊடான நிதிச் சொத்துக்களின் சாதாரண பெறுமதி** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் - திறைச்சேறி முறிகள் மற்றும் பிணைகள் | - | 1,202,345 | - | 1,202,345 |
| நம்பிக்கை அலகு | - | 1,644,028 | - | 1,644,028 |
| மேற்கோள் காட்டப்பட்ட பங்குகள் | - | - | - | - |
| **ஏனைய திரட்டிய வருமானம் மூலம் சந்தைப் பெறுமதி** | | | | |
| மேற்கோள் காட்டப்படாத பிணைப் பங்குகள் | - | - | 56,939 | 56,939 |
| | - | 2,846,374 | 56,939 | 2,903,312 |
| | 2022 டிசம்பர் 31இல் உள்ளவாறான (கணக்காய்வு செய்யப்பட்டது) | | | |
| | நிலை 1 (இ. ரூபா) | நிலை 2 (இ. ரூபா) | நிலை 3 (இ. ரூபா) | மொத்தம் (இ. ரூபா) |
| **இலாபம் அல்லது நட்டம் ஊடான நிதிச் சொத்துக்களின் சாதாரண பெறுமதி** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் - திறைச்சேறி முறிகள் மற்றும் பிணைகள் | - | - | - | - |
| நம்பிக்கை அலகு | - | 1,905,738 | - | 1,905,738 |
| மேற்கோள் காட்டப்பட்ட பங்குகள் | - | - | - | - |
| **ஏனைய திரட்டிய வருமானம் மூலம் சந்தைப் பெறுமதி** | | | | |
| மேற்கோள் காட்டப்படாத பிணைப் பங்குகள் | - | - | 56,939 | 56,939 |
| | - | 1,905,738 | 56,939 | 1,962,677 |

### நியாயமான மதிப்பில் முன்னெடுக்கப்படாத நிதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் நியாயமான மதிப்பு ரூ '000

நிதிநிலை அறிக்கையில் நியாயமான மதிப்பில் எடுத்துச் செல்லப்படாத வங்கியின் நிதி சாதனங்களின் சுமந்து செல்லும் தொகை மற்றும் நியாயமான மதிப்புகளின் வர்க்கத்தின் அடிப்படையில் ஒரு ஒப்பீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணையில் நிதி சொத்துக்கள் அல்லாத மற்றும் நிதி பொறுப்புகள் அல்லாதவற்றின் நியாயமான மதிப்புகள் உள்ளடக்கப்படவில்லை.

| | | 2023 ஜூன் 30இல் உள்ளவாறான | |
|---|---|---|---|
| | நிலை | சுமக்கும் மதிப்பு (இ. ரூபா) | நியாயமான மதிப்பு (இ. ரூபா) |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| பணம் மற்றும் பணத்துக்குச் சமமானவை | குறிப்பு* | 3,089,752 | 3,089,752 |
| வங்கிகளில் இடப்பட்டவை | குறிப்பு* | 15,537,348 | 15,537,348 |
| கடன்தீர்வு பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் | | | |
| - வாடிக்கையாளர்களிடமிருந்தான கடன்கள் மற்றும் வருமதிகள் | 2 | 104,847,810 | 104,316,103 |
| - கடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | குறிப்பு* | 25,802,544 | 25,802,544 |
| **மொத்த நிதிச் சொத்துகள்** | | 149,277,454 | 148,745,747 |
| **நிதிப் பொறுப்புகள்** | | | |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 2 | 109,332,121 | 112,646,991 |
| ஏனைய கடன் கொடுத்தவர்கள் | 2 | 27,671,401 | 27,696,615 |
| உபவகை கால கடன்கள் | குறிப்பு* | 4,319,622 | 4,319,622 |
| **மொத்த நிதிப் பொறுப்புகள்** | | 141,323,143 | 144,663,228 |
| | | 2022 டிசம்பர் 31இல் உள்ளவாறான (கணக்காய்வு செய்யப்பட்டது) | |
| | | சுமக்கும் மதிப்பு (இ. ரூபா) | நியாயமான மதிப்பு (இ. ரூபா) |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| பணம் மற்றும் பணத்துக்குச் சமமானவை | குறிப்பு* | 3,072,845 | 3,072,845 |
| வங்கிகளில் இடப்பட்டவை | குறிப்பு* | 18,205,196 | 18,205,196 |
| கடன்தீர்வு பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் | | | |
| - வாடிக்கையாளர்களிடமிருந்தான கடன்கள் மற்றும் வருமதிகள் | 2 | 110,525,450 | 110,233,997 |
| - கடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | குறிப்பு* | 19,819,736 | 19,819,736 |
| **மொத்த நிதிச் சொத்துகள்** | | 151,623,227 | 151,331,774 |
| **நிதிப் பொறுப்புகள்** | | | |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 2 | 107,533,002 | 107,391,059 |
| ஏனைய கடன் கொடுத்தவர்கள் | 2 | 30,704,548 | 30,774,489 |
| உபவகை கால கடன்கள் | குறிப்பு* | 5,055,590 | 5,055,590 |
| **மொத்த நிதிப் பொறுப்புகள்** | | 143,293,140 | 143,221,138 |

குறிப்பு*
நிதி அறிக்கைகளில் நியாயமான மதிப்பில் ஏற்கெனவே பதிவு செய்யப்படாத நிதி சாதனங்களுக்கான நியாயமான மதிப்புகளைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் வழிமுறைகள் மற்றும் அனுமானங்கள் பின்வருமாறு:

குறுகிய கால முதிர்வு (ஒரு வருடத்திற்கும் குறைவான) நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகளுக்கு, சுமந்து செல்லும் தொகை அவற்றின் நியாயமான மதிப்புக்கு தோராயமாக இருக்கும் என்று கருதப்படுகிறது. குறிப்பிட்ட முதிர்வு இல்லாத சேமிப்பு வைப்புகளுக்கு இந்த அனுமானம் பயன்படுத்தப்படுகிறது. மாறுபடும் விகிதத்துடன் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் நியாயமான மதிப்பில் கொண்டு செல்லப்படும் என்றும் கருதப்படுகிறது.

நிலையான விகித நிதிச் சொத்துக்கள் மற்றும் கடனீட்டுச் செலவில் மேற்கொள்ளப்படும் பொறுப்புகளின் நியாயமான மதிப்பு, சந்தை வட்டி விகிதங்களை ஒப்பிடுவதன் மூலம் மதிப்பிடப்படுகிறது. நிலையான வட்டி தாங்கி வைப்புகளின் மதிப்பிடப்பட்ட நியாயமான மதிப்பு, வங்கியின் நடைமுறையில் உள்ள வட்டி விகிதங்களைப் பயன்படுத்தி தள்ளுபடி செய்யப்பட்ட பணப்புழக்கங்களை அடிப்படையாகக் கொண்டது.

### விளக்க குறிப்புக்கள்

1. இந்த இடைக்கால நிதிக்கூற்றுகள் LKAS 34 இடைக்கால நிதி அறிக்கையிடலுக்கு இணக்கமாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கொழும்பு பங்குச்சந்தையின் பட்டியலிட்ட விதிகளில் தேவைப்படும் தகவல்களை உள்ளடக்கியுள்ளது. இந்த நிதிக்கூற்றுக்கள் வங்கியின் கணக்காய்வு செய்யப்படாத கூற்றுக்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

2. 2022 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்று அறிக்கைகள் வெளியிடப்பட்டதிலிருந்து கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு முறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இல்லை

3 சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புகள் என்பவற்றில் எந்த மாற்றமும் இல்லை

4. முந்தைய காலத்தின் முன்வைப்புகள் மற்றும் வகைப்பாடு சிறந்த முன்வைப்புகளாகவும் தற்போதைய காலகட்டத்துடன் ஒப்பிடத்தக்கதாகவும் திருத்தப்பட்டுள்ளன.

5. அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு நிதிகூற்று அறிக்கைகளில் வெளிப்படுத்தல்கள் அல்லது/ மற்றும் சரிசெய்தல் தேவைப்படும் எந்தப் பொருள் நிகழ்வுகளும் நடைபெறவில்லை.

6 **துணை நிறுவனத்தில் முதலீடு**
துணை நிறுவன முதலீடானது பேமெண்ட் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட்டில் வங்கி செய்த முதலீடு ரூ. 6,163,100/- ஐயும் உள்ளடக்கியதாகும். பேமெண்ட் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட் என்பது வங்கியின் முழு சொந்தமான துணை நிறுவனமாகும், இது 2020 மே 26 அன்று கையகப்படுத்தப்பட்டது. இது இணையம் மற்றும் மொபைல் தளங்களில் "Upay" என்ற பெயரில் ஒன்லைன் கட்டண தீர்வுகளை வழங்கும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. துணை நிறுவனத்தின் சொத்துகள், பொறுப்புகள், பங்கு, வருமானம், செலவுகள் மற்றும் பணப்புழக்கங்கள் குழுவின் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளில் பொருள் விளைவைக் கொண்டிருக்கவில்லை. ஆகையால், துணை நிறுவனம் முக்கியமற்றதாகக் கருதப்படுகிறது மற்றும் குழுவின் நிதி அறிக்கைகளைத் தயாரித்து வழங்கும்போது ஒருங்கிணைக்கப்படவில்லை.

JEBZ

SDBவங்கி, இல. 12, எட்மொன்டொன் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. தொ.பேசி: 0112 832 500 | 0112 832 541 | இணையதளம்: www.sdb.lk | மின்னஞ்சல்: finance@sdb.lk

SDB வங்கி

#உங்களைமதிக்கும்

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி இலங்கை மத்திய வங்கியால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு உத்தரவுபெற்ற சிறப்பு வங்கியாகும். பிச் தரப்படுத்தல் BB+ (நிலையானது) பதிவு இல : PB62PQ

## பெறுகை அறிவித்தல் !

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உற்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அப்விருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

### மீகொட ஆயுர்வேத நிலையத்தில் சிகிச்சை அலகை நிர்மாணிப்பதற்குத் தேவைான மரங்களை கொள்வனவு செய்தல்

இவ் அதிகார சபையில் உள்ள மீகொட ஆயுர்வேத நிலையத்திற்கு, தேவையான உற்பத்தி மூலம் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் அளவு | கேள்விப் படிவக் கட்டணம் (அதிகார சபையில் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்ந்து) | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | காசாக (ரூ) | வங்கி/ காப்புறுதி பிணை முறி (ரூ) |
| PRDA/WP/ PRO/2023/62 | மர வகைக்கான கொள்வனவு செய்தல் | ரூ. 1000.00 + வெட் | 64,000.00 | 128,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.08.28 முதல் 2023.09.11 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணங்களுக்கு உற்பட்டு இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணைமுறியை காசாக அல்லது வங்கிப் பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்காக கேள்வித் தொகை ரூபா 5.0 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் விநியோகிக்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் மற்றும் திறத்தல் 2023.09.12ம் திகதி மு.ப. 11.00 மேலே குறிப்பிடப்படும் திகதிகளில் இவ் அலுவலகத்தில் இடம்பெறுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**
**இல. 59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12**
**தொ.பே. இலக்கம் - 011-4849825/ 4849845**

**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்**

**தலவாக்கலை**

## பெறுகை அறிவித்தல்

### கண்ணாடி பசுமை இல்லத்தினுள் காலநிலை நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை நிறுவுதல்

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தலவாக்கலை பிரதான அலுவலகத்தில் கண்ணாடி பசுமை இல்லத்தினுள் காலநிலை நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை நிறுவுவதற்காக தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பொருத்தமான அனுபவம் வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2023-08-28ஆம் திகதி முதல் 2023-09-19ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா தொகையை இலங்கைத் தேயிலை ஆராய்ச்சி நிலையத்திற்குச் செலுத்தியதன் பின் தலவாக்கலை, தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் பெறுகை அதிகாரியிடமிருந்து பெறுகைப் படிவங்கள் மற்றும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பெறுகைப் படிவங்களை 2023-09-19ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (பிரதானம்), இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம், தலவாக்கலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கண்ணாடி பசுமை இல்லத்தினுள் காலநிலை நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை நிறுவுதல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-09-06ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

பெறுகைப் படிவங்கள் திறத்தல் 2023-09-19ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அலுவலகத்தில் இடம்பெறும்.

கேள்வியை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை பெறுகைக் குழு (பிரதானம்) தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (பிரதானம்),**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்,**
**தலவாக்கலை.**

**வரையறுக்கப்பட்ட ஹங்குரங்கெத்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

### மீட்கப்படாத அடகுப் பொருட்களின் ஏல விற்பனை

தங்க நகை அடகு பிடிப்பவர்களான வ/ப ஹங்குரங்கெத்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்

1. ஹங்குரங்கெத்த நகர கிராமிய வங்கி
2. கரல்லியத்த கிராமிய வங்கி
3. உகன்தென்ன கிராமிய வங்கி
4. கலஉட கிராமிய வங்கி
5. அதிகாரிகம கிராமிய வங்கி
6. உடவத்த கிராமிய வங்கி

ஆகிய கிளைகளில் 2022.05.31 வரை அடகு வைக்கப்பட்டு, ஒரு வருடம் பூர்த்தியாகியும் மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள் 2023.09.09ம் திகதி ஹங்குரங்கெத்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகத்தின் கூட்ட மண்டபத்தில் மு.ப. 9.30 இற்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

இவ் அடகுப் பொருட்களை 2023.09.08 மு.ப. 11.00 வரை மீட்டுக் கொள்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**ஏல விற்பனைத் தினம் 2023.09.09**

**பொது முகாமையாளர்**
**வ/ப ஹங்குரங்கெத்த ப.நோ.கூ. சங்கம்**
**ஹங்குரங்கெத்த**
**081-2369375**
**2023.08.24**

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா

* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk




# சப்ரகமுவ மாணவர்களுக்கு ஆங்கிலம், தொழில்நுட்ப அறிவை வழங்க British Council,Brandex பங்களிப்பு

காவத்தை தினகரன் விசேட நிருபர்



சப்ரகமுவ மாகாண பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில அறிவையும், தகவல் தொழில்நுட்பத்தையும் மேலும் விரிவுபடுத்துவதற்கு பிரித்தானிய கவுன்சில் (British Council) மற்றும் பிரேன்டெக்ஸ் (Brandex) நிறுவனங்களின் பங்களிப்பை பெற்றுள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

சப்ரகமுவ பாடசாலைகளில் ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை விரிவுபடுத்தும் நோக்கில் கடந்த வியாழக்கிழமை(24) கேகாலை மாவட்டத்தில் ருவான் வெல்ல ராஜசிங்க மத்திய மகா வித்தியாலயத்திலும் இரத்தினபுரி மாவட்டத்தில் மெனேரிபிட்டிய கல்வி பயிற்சி நிலையத்திலும் இடம்பெற்ற அதிபர்கள் மற்றும் ஆங்கில ஆலோசகர்களுக்கான செயலமர்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஆளுனர் இவ்வாறு தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணத்தில் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில அறிவை விரிவுபடுத்துவதற்கு சப்ரகமுவ ஆளுநர் நவீன் திஸாநாயக்கவின் தலையீட்டில் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள சுமார் 700 ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆங்கிலப் பயிற்சியை வழங்குவதற்கு பிரிட்டிஷ் கவுன்சில் ஏற்பாடு செய்துள்ளது.

மேலும் சப்ரகமுவ மாகாண பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில அறிவையும் தகவல் தொழில்நுட்பத்தையும் விரிவுபடுத்துவதற்கு பிரன்டெக்ஸ் நிறுவனத்தினால் சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு தலா 350,000 ரூபா பெறுமதியான 246 ஸ்மார்ட் பலகைகளை வழங்கியுள்ளது.

பிரித்தானிய கவுன்சில் (British Council) மற்றும் பிரேன்டெக்ஸ் (Brandex) நிறுவனங்களின் பங்களிப்பை பெற்று சப்ரகமுவ மாகாண பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் தகவல் தொழிநுட்பம் தொடர்பான முறையான பயிற்சிகளை வழங்க ஆளுநர் திட்டமிட்டிருந்தார், அதற்கமைய மேற்படி பயிற்சிகள் தற்போது சப்ரகமுவ மாகாணத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பிரான்டெக்ஸ் நிறுவனம் சப்ரகமுவ மாகாண பாடசாலைகளுக்கு 246 ஸ்மார்ட் பலகைகளை வழங்கியுள்ளது. பிரன்டெக்ஸ் நிறுவனத்தினால் சப்ரகமுவ மாகாணம் உட்பட நாட்டில் உள்ள ஏனைய மாகாண பாடசாலைகளுக்கு இதுவரை 1,598 ஸ்மார்ட் பலகைகள் வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# பெண்களை சுயதொழிலில் ஊக்குவிக்க கொரிய நிதியுதவி



ஆ.ரமேஸ்

கொரியா நாட்டின் 'செமாவுல்' அறக்கட்டளை அமைப்பின் ஊடாக, நுவரெலியா மாவட்ட செயலகம் இணைந்து சுயத்தொழிலில் பெண்களை ஊக்குவிக்கும் வகையில் ஆரம்பக்கட்ட நிகழ்வு நுவரெலியா சாந்திபுர கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெண்கள் கிராமத் திட்டத்தின் கீழ், கொரியா நாட்டின் 'கியாசாங் புக்டோ' மாநில அரசு மற்றும் 'செமாவுல்' அமைப்பின் ஆதரவுடன் இவ் அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள பெண்கள் சுயத்தொழிலில் நிலையான அபிவிருத்தி வளர்ச்சியை அடைய வேண்டும் என்ற அடிப்படையில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் இவ் அபிவிருத்தி திட்டம் ஆரம்பிக்கும் ஆரம்ப நிகழ்வு சாந்திபுர பாடசாலையில் (25) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி யமுனா பெரேரா, நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபொட, 'செமாவுல்' அறக்கட்டளையின் பணிப்பாளர் சோய் சுங் வோ மற்றும் உதவி அரசாங்க அதிபர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் சாந்திபுர, பம்பரகலை, கலாபுர, ஆகிய கிராமங்களை சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர். அதேநேரம் இத்திட்டத்தில் மரக்கறி வகைகள், பழங்கள், ஸ்டோபெரி பழ செய்கை மற்றும் காலன் போன்ற உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளனர்.

# மலையகத்தில் தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகளின் ஆன்மீக அருளுரைகள்



தமிழ் நாடு திருஞான சம்பந்தர் திருமடத்தைச் சேர்ந்த திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் வாமதேவ தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகளின் அருளுரைகள் கேகாலை மாவட்டத்திலும், கொட்டகல, ஹற்றன் ஆகிய பகுதிகளிலும் நடைபெறவுள்ளது

நேற்று ஞாயிற்றுக்கிழமை (27) பிற்பகல் 2.00 மணிக்கு எட்டியாந்தோட்டை ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றதோடு நாளை திங்கட்கிழமை (28) காலை 7.00 மணிக்கு எலிஸ்டன் தோட்ட சிவலிங்க பிரதிஷ்டையிலும், பிற்பகல் 2.00 மணிக்கு எட்டியாந்தோட்டை சாந்த மரியால் கல்லூரியிலும், செவ்வாய்க்கிழமை (29) பிற்பகல் 2.00 மணிக்கு கனேபல்ல ஸ்ரீ துர்க்க அறநெறி பாடசாலையிலும், புதன்கிழமை (30) காலை 9.00 மணிக்கு அரநாயக்க தமிழ் ஆரம்ப பாடசாலையிலும் வியாழக்கிழமை (31) பிற்பகல் 2.00 மணிக்கு பூணுகல ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் வெள்ளிக்கிழமை ஆகஸ்ட் (01) பிற்பகல் 2.00 மணிக்கு கொட்டகல அறநெறி பாடசாலையிலும், சனிக்கிழமை (02) காலை 9.00 மணிக்கு ஹற்றன், ஓம் ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் தேவஸ்தானம், பன்மூர்பதியிலும் ஞாயிற்றுக்கிழமை (03) காலை 9.00 மணிக்கு வரக்காபொல ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயத்திலும் பிற்பகல் 2.00 மணிக்கு அவிசாவளை அறநெறி பாடசாலையிலும் மற்றும் திங்கட்கிழமை (04) பிற்பகல் 2.00 மணிக்கு ரூவான்வெல்ல அறநெறி பாடசாலையிலும் சுவாமிகளின் ஆன்மீக அருளுரைகள் நடைபெறவுள்ளன.



யட்டியாந்தோட்டை விநாயகர் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை (25) நடைபெற்ற விசேட வழிபாட்டு நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க, இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்கிரமசிங்க, யட்டியந்தோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் சஞ்சீவ அபேகோன் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

படம் காவத்தை தினகரன் விசேட நிருபர்

# ஜேம்ஸ் டெயிலரை நினைவு கூரும் நிகழ்வு










மாவத்தகம தினகரன் நிருபர்

இலங்கையில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட தேயிலை தோட்டமான தெல்தோட்டை லூல்கந்துர தோட்டத்தை உருவாக்கிய ஜேம்ஸ் டெயிலர் வாழ்ந்த தோட்டத்தில் அவரின் நினைவாக பல நிகழ்வுகள் மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

மலையக தொழிலாளர்கள், பெண்கள், இளைஞர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புக்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் இணைந்து, மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் ஜேம்ஸ் டெயிலர் அவர்களை நினைவு கூர்ந்து கண்டி மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்றுப்பாளர் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம், ஹங்குரான்கெத்த ஆதவன் தமிழ் பாடசாலையின் அதிபர் ஆகியோர்களினால் மலர் மாலை அணிக்கப்பட்டதுடன் மலையக மக்களின் வரலாற்றையும், வாழ்வியலையும், சவால்களையும், ஞாபகப்படுத்தும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

அதேவேளை, எதிர்வரும் நூற்றாண்டை எவ்வாறு முகங்கொடுக்க வேண்டும், சவால்களை எதிர்கொண்டு மனித உரிமைகளை பாதுகாத்து ஒரு சமூகமாக, சமத்துவ பிரஜைகளாக, தனித்துவத்துடன் முன்னோக்கி செல்லும் வழிமுறைகளை நோக்காகக் கொண்ட பிரகடனம் ஜேம்ஸ் டையிலரின் நினைவு தூபிக்கு முன்னால் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதேவேலை மாணவர்கள், தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோரின் ஊர்வலம் ஜேம்ஸ் டெயிலர் ஞாபகார்த்த தூபியிலிருந்து ஆரம்பித்து பிரதான வீதி ஊடாக ஆதவன் பாடசாலை வரை சென்றது.

இதன் போது நுவரெலியா மாவட்ட மனித உரிமை ஆணையாளர் விரஞ்சன் டயஸ் சுமன சேகர, பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் தலைவி பெ. லேகோஸ்வரி, டி. சந்திரகுமார் உள்ளிட்ட பெரு எண்ணிக்கையிலான தோட்டப்புறத் தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்

# தொழிலாளர்களின் பிணக்குகளை தீர்க்க புதிய தொழிற்சங்கம் உதயம்

ஹற்றன் விசேட நிருபர்



தொழிலாளர்களின் உரிமைகளை பெற்றுக்கொடுக்க மலையக தொழிலாளர் சக்தி என்ற புதிய தொழிற்சங்கத்தினை உருவாக்கப்போவதாக மலையக மக்கள் சக்தியின் தலைவர் இராமன் செந்தூரன் தெரிவித்தார்.

மலையக மக்கள் சக்தியின் உயர்பீட கூட்டம் ஒன்று நேற்று ஹட்டனில் நடைபெற்றது அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மலையக மக்கள் சக்தி என்ற கட்சி தற்போது ஒரு புதிய பரிநாமத்தினை நோக்கி நகர்ந்துள்ளது. அதாவது இன்று தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எந்த வித தீர்வும் கிடைப்பதில்லை. இதனை கருத்தில் கொண்டு மலையக மக்கள் சக்தி என்ற புதிய தொழிற்சங்கத்தினை உருவாக்குவதற்கு திட்டமிட்டிருப்பதாக தெரிவித்த அவர் இன்று அரசாங்கம் கடன் மறுசீரமைப்பதற்காக பல புதிய திட்டங்களை கொண்டு வந்துள்ளது. இதில் 12 வீதமாக இருந்த ETFயின் வட்டி தற்போது 9 வீதமாக குறைத்துள்ளது. மலையகத்தில் உள்ள தொழிலாளர்களை பொறுத்தவரையில் இதன் பாதிப்பு மிக மோசமானது.

தொழிலாளர் இன்று பொருளாதார நெருக்கடியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மாதம் எட்டு ஒன்பது ஆயிரம் தான் சம்பளம் பெற்றுக் கொடுக்கப்படுகிறது. இந்நிலையில் அவர்களுக்கு இருக்கும் ஒரே எதிர்ப்பார்ப்பு இந்த ETF காசு மட்டும் தான். ஆனால் இன்று அதுவும் கிடைக்காத நிலை உருவாகி வருகிறது. இது குறித்து எந்த ஒரு தொழிற்சங்கமும் குரல் கொடுப்பதாக தெரியவில்லை. எனவே தொழிற்சங்கங்களை பலமாக வைத்துக் கொள்வதற்கும் மக்களுக்கு அரசியல் ரீதியான தெளிவு பெற்றுக் கொடுப்பதற்கும் இரண்டும் ஒன்றான அமைப்பு தேவைப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜப்பான் பிரதிநிதி மாத்தளைவிஜயம்



மாத்தளை சுழற்சி நிருபர்

ஜப்பான் தூதுவராலயத்தின் அரசியல் விவகாரத்துக்கான பிரதிநிதி கானா மொரிகாவரி நேற்று முன்தினம் மாத்தளைக்கு விஜயம் செய்தார்.

விஜயத்தின் போது மாத்தளை ஜம்மியத்துல் உலமா சபையை சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார். மாத்தளை ஹலீமியா அரபு கலாசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கொரோனாவுக்கு பின்னர் முஸ்லிம்களின் சமூக பொருளாதார கலாசார நிலைமை பற்றி அவர் கலந்துரையாடினார். மேற்படி நிகழ்வில் ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் இர்ஷான் முப்தி மற்றும் உப செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கஹவத்தை வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சை நிபுணர் இன்மையால் சிகிச்சைகள் இடைநிறுத்தம்

பலாங்கொடை தினகரன் நிருபர்

கஹவத்தை ஆதார வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சை விசேட வைத்திய நிபுணர் வெளிநாடு சென்றமையால் வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் ஆயிரக்கணக்கான கண் நோயாளர்கள் பாதிப்புக்குள்ளாகி உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இவ் வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த விசேட கண் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் ஆறு மாதங்களுக்கு முன்பு மேலதிக கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றமையாலும் அவருக்கு பதிலாக வேறு ஒரு வைத்திய நிபுணர் நியமிக்கப்படாமையினாலும் இந்த நிலைமை உருவாகியுள்ளது.

இரத்தினபுரி பெரியாஸ்பத்திரியினை அடுத்து இரத்தினபுரி மாவட்டத்தில் அதிக அளவு கண் சத்திர சிகிச்சை இடம்பெறும் வைத்தியசாலையாக கஹவத்தை ஆதார வைத்தியசாலை திகழ்கிறது. கஹவத்தை ஆதார வைத்தியசாலையில் வருடத்திற்கு கண்களில் உள்ள வெள்ளைப்படுதலை நீக்கி அதற்கான சத்திர சிகிச்சை 300க்கு அதிகமாக இடம் பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாளாந்தம் வைத்தியசாலைக்கு கண் சிகிச்சைக்காக 500க்கும் அதிகமான கண் நோயாளர்கள் வருகை தருவதாகவும் அதிகாலை 3 அல்லது 4 மணியிலிருந்து வைத்தியசாலைக்கு வருகை தந்து கியூ வரிசையில் நிற்பதாகவும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதே சமயம் கஹவத்தை ஆதார வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சைக்கு மற்றும் ஏனைய பரிசோதனைகளுக்கும் பலாங்கொடை இறக்குவானை கொடகவெல ஆகிய பிரதேசங்களில் இருந்தும் அதிகமானோர் வருகை தருவதால், வைத்திய அதிகாரிகள் இன்மையால் இவர்கள் பல சௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக தெரிவிக்கின்றனர்.

# ஆசிய கிண்ணம்:

# சமீர, ஹசரங்கவுடன் உபாதையால் லஹிருவும் அணியிலிருந்து விலகல்

ஆசிய கிண்ண போட்டிகளுக்கு இன்னும் இரண்டு நாட்களே உள்ள நிலையில் இலங்கை அணியில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக அணியின் முக்கிய மூன்று பந்துவீச்சாளர்களான துஷ்மந்த சமீர, வனிந்து ஹசரங்க மற்றும் லஹிரு குமார உபாதை காரணமாக விலகியுள்ளனர்.





நடப்புச் சம்பியனாக ஆசிய கிண்ணத்தில் களமிறங்கும் இலங்கை அணி தனது முதல் போட்டியில் வரும் விழாக்கிழமை (31) பல்லேகலயில் பங்களாதேஷ் அணியை எதிர்கொள்ளவிருப்பதோடு தொடர்ந்து முதல் சுற்றின் கடைசி போட்டியில் ஆட லாஹூர் சென்று ஆப்கானிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இந்நிலையில் துடுப்பாட்ட வீரர் குசல் ஜனித் பெரேராவுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் (26) மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய அவர் ஆரம்பப் போட்டியில் பங்கேற்பதில் சந்தேகம் நிலவுகிறது.

மறுபுறம் லங்கா பிரீமியர் லீக் தொடரின்போது சமீரவின் வலது மார்புத் தசை பகுதியில் ஏற்பட்ட உபாதை தீவிரம் அடைந்துள்ளது. அவரது காயம் மேலும் மோசமாக இருப்பது உறுதியாகியுள்ளது. எனவே மேலும் காயமடைவதை தவிர்த்து எதிர்வரும் ஒக்டோபரில் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ணத்திற்கு அவரை தயார்படுத்துவதில் அணி முகாமைத்துவம் அவதானம் செலுத்தியுள்ளது.



கணுக்கால் சத்திரசிகிச்சைக்கு முகம்கொடுத்த சமீர நீண்ட இடைவெளிக்குப் பின்னரே ஆப்கானிஸ்தானுக்கு எதிராக இலங்கையில் நடந்த போட்டியின்போது அணிக்குத் திரும்பினார்.

எனினும் கடந்த ஜூன் 4ஆம் திகதி ஹம்பாந்தோட்டையில் நடந்த ஒருநாள் போட்டியின்போது சமீரவுக்கு மார்புத் தசை பகுதியில் வலி ஏற்பட்டுள்ளது. அதன் தீவிரம் சிறிதாக இருந்ததால் ஜூன் 7 ஆம் திகதி நடந்த மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் போட்டியிலும் அவர் ஆடினார். அவர் அதில் சிறப்பாக பந்து வீசியது மத்திரமன்றி 10 ஓவர்களையும் பூர்த்தி செய்தார்.

எனினும் உபாதையில் இருந்து மீண்டு வருவதற்காக அவர் சிம்பாப்வேயில் நடந்த உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் இருந்து விடுவிக்கப்பட்டார். எவ்வாறாயினும் லங்கா பிரீமியர் லீக் தொடரில் ஆடிய நிலையில் அவரது உபாதை தீவிரம் அடைந்துள்ளது.

தொடர்ச்சியாக உபாதைக்கு உள்ளாகி வரும் சமீர 2021 நவம்பர் தொடக்கம் ஒரு டெஸ்ட் போட்டியில் கூட ஆடியதில்லை என்பதோடு 2022 ஜனவரியில் இருந்து எட்டு ஒருநாள் சர்வதேச போட்டிகளிலேயே ஆடியுள்ளார். அவுஸ்திரேலியாவில் கடந்த ஆண்டு நடந்த உலகக் கிண்ணத்திற்கு பின்னர் ஒரு டி20 சர்வதேச போட்டியில் கூட ஆடியதில்லை.

இந்நிலையில் ஆசிய கிண்ணத்திற்கான இலங்கை குழாத்தில் சமீரவுக்கு பதில் கசுன் ராஜித்த சேர்க்கப்பட்டுள்ளார்.

மறுபுறம் ஹசரங்க விலகி இருப்பது அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. அவர் இரண்டாம் நிலை பின் தொடை தசைப்பிடிப்புக்கு முகம்கொடுத்திருப்பதோடு மூன்று தொடக்கம் நான்கு வாரங்கள் ஓய்வு எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

லங்கா பிரீமியர் லீக் தொடரில் காலி அணிக்கு எதிரான கடைசி பிளே ஓப் போட்டியின்போதே ஹசரங்க காயத்திற்கு உள்ளாகியுள்ளார். எனினும் அவரது துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு அணியின் வெற்றிக்கு வழிவகுத்தது. இந்நிலையில் தொடரின் இறுதிப் போட்டியில் அவர் காயத்துடன் ஆட முன்வந்தபோதும், தேசிய அணிக்கு முக்கியத்துவம் அளித்து அவருக்கு கட்டாயமாக ஓய்வெடுத்துக் கொள்ள இலங்கை கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நிலையில் ஆசிய கிண்ணத்தில் வனிந்து ஹசரங்கவுக்கு பதில் சுழற்பந்து வீச்சாளர் துஷான் ஹேமந்த இணைக்கப்பட்டுள்ளார்.

லஹிரு குமாரவுக்கு லங்கா பிரீமியர் லீக் தொடரின்போது இடுப்புப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் உலகக் கிண்ணத்திற்கு முன்னர் எதிர்வரும் நான்கு, ஐந்து வாரங்களில் அவர் குணமடைவார் என்று அணி நிர்வாகம் எதிர்பார்க்கிறது.

இந்நிலையில் தற்போதைய உடல் தகுதி நிலை மோசமடையும் அச்சுறுத்தல் காரணமாகவே ஆசிய கிண்ணத்தில் இருந்து லஹிரு குமார விலகியுள்ளார். அவருக்கு பதில் பிரமோத் மதுஷான் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆசிய கிண்ணத் தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை அணி நேற்று மாலை இலங்கை கிரிக்கெட் சபை தலைமையகத்தில் இருந்து கண்டிக்கு புறப்பட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு கால்பந்து லீக்கினால் இளையோர் கால்பந்துத் தொடர்



ருஸைக் பாரூக்

கொழும்பு கால்பந்து லீக் ஏற்பாடு செய்துள்ள 19 வயதுக்குட்பட்ட கால்பந்து போட்டி செப்டம்பர் முதல் வாரத்தில் கொழும்பு பொரளை, கெம்பல் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஐந்து பாடசாலை அணிகள் உட்பட பதினாறு அணிகள் பங்குபற்றவுள்ளதாக கொழும்பு கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் எம்.எம். எம். நஜிப்தீன் கொழும்பு கால்பந்து சம்மேளன கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார். இந்தப் போட்டியில் சம்பியன் மற்றும் இரண்டாம் இடம் பிடிக்கும் அணிகளுக்கு ரொக்கப் பரிசு, சான்றிதழ்கள் மற்றும் வெற்றி கிண்ணம் வழங்கப்படும். போட்டியின் பிரதான அனுசரணையாளரான *Venom Active Essentials* பணிப்பாளர் ஹுசைன் ஜிப்ரி தனது அனுசரணையை கொழும்பு கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் எம்.எம்.எம். நஜிப்தீனிடம் வழங்கினார்.

## சம்பியன் கிண்ணத்தை வென்றது ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சி. அணி



கல்முனை மத்திய தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் கல்முனை சனிமவுன்ட் விளையாட்டுக்கழகம் நடாத்திய, கால்பந்தாட்ட சமரில் ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சி. அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது. சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கல்முனை சனி மௌண்ட் கழகத்தை எதிர்கொண்ட ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சி. 5–0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. கல்முனை அப்துல்லாஹ் மென்ஸ் நிறுவனம் சம்பியன் அணிக்கு ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசுடன் வெற்றிக் கிண்ணத்தையும் வழங்கியது.

## இராமகிருஷ்ணா வெற்றி



காரைதீவு குறூப் நிருபர்

காரைதீவு பிரதேச மட்ட கூடைப்பந்தாட்ட போட்டியில் ராமகிருஷ்ணா அணி வெற்றி பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. தேசிய இளைஞர்கள் மன்றம் நடாத்திய காரைதீவு பிரதேச மட்ட கூடைப்பந்தாட்ட போட்டி விபுலானந்தா மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் (26) இடம்பெற்றது. இதன்போது காரைதீவு கூடைப்பந்தாட்ட இளைஞர்கள் அணியை இராமகிருஷ்ணா அணி வென்றது.

## மெய்வல்லுனர் போட்டிகளில் சம்பியனானது மேல் மாகாணம்

நாற்பத்து ஏழாவது தேசிய விளையாட்டு விழாவின் ஒட்டுமொத்த சம்பியன் பட்டத்தை மேல் மாகாணம் தட்டிச் சென்றது.

தேசிய விளையாட்டு விழாவின் இறுதிப் போட்டி நிகழ்ச்சியான மெய்வல்லுனர் போட்டிகள் நேற்று முன்தினம் (26) சுகததாச விளையாட்டு அரங்கில் நிறைவடைந்தது.

இதில் 115 தங்கம், 78 வெள்ளி மற்றும் 89 வெண்கலப் பதக்கங்களை வென்று மேல் மாகாணம் முதலிடத்தை பெற்றதோடு 39 தங்கப் பதக்கங்களுடன் மத்திய மாகாணம் இரண்டாவம் இடத்தையும் 30 தங்கப் பதக்கங்களை வென்ற தென் மாகாணம் மூன்றாம் இடத்தையும் பிடித்தது.

கிழக்கு மாகாணம் 7 தங்கங்களுடன் எட்டாவது இடத்தை பெற்றதோடு வட மாகாணம் 5 தங்கப் பதக்கங்களை வென்று கடைசி இடத்தை பிடித்தது.

3 நாட்களாக கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற தேசிய விளையாட்டுப் போட்டிகளின் மெய்வல்லுனர் நிகழ்ச்சியில் 5 புதிய போட்டிச் சாதனைகள் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வட மாகாண வீராங்கனை நேசராசா டக்சிதா 3.50 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய போட்டிச் சாதனை படைத்தார். இம்முறை தேசிய விளையாட்டுப் போட்டிகளில் ஆண்டின் சிறந்த மெய்வல்லுனர் வீரருக்கான விருதை மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்ட வீரர் தனுக தர்ஷனவும் ஆண்டின் சிறந்த மெய்வல்லுனர் வீராங்கனைக்கான விருதை தென் மாகாணத்தைச் சேர்ந்த 400 மீற்றர் ஓட்ட வீராங்கனை நதீஷா ராமநாயக்கவும் பெற்றுக்கொண்டனர்.

## ஸ்பெயின் கால்பந்து சம்மேளன தலைவரை பிஃபா இடைநிறுத்தம்

மகளிர் உலகக் கிண்ணத்தை வென்ற ஸ்பெயின் அணியின் வீராங்கனை ஒருவரின் உதட்டில் முத்தம் கொடுத்து சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கும் அந்நாட்டு கால்பந்து சம்மேளனத் தலைவர் லுவிஸ் ருபியல்ஸுக்கு சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிஃபா) 90 நாட்களுக்கு தற்காலிக தடை விதித்துள்ளது.

ருபியல்ஸ் கடந்த வெள்ளிக்கிழமை பதவி விலகுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தான் பதவி விலகப்போவதில்லை என்று குறிப்பிட்டார். ருபியல்ஸ் தனக்கு வழங்கிய முத்தத்தை தான் விரும்பவில்லை என்று ஜென்னி ஹெர்மோசோ என்ற வீராங்கனை குறிப்பிட்ட நிலையில் ருபியல்ஸுக்கு ஆதரவாக சட்ட உதவியை பெறப்போவதாக ஸ்பெயின் கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

'தேசிய மற்றும் சர்வதேச அளவில் அனைத்து கால்பந்து தொடர்பான செயற்பாடுகளில் இருந்தும் லுவிஸ் ருபியல்ஸை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு பிஃபா ஒழுக்காற்றுக் குழு தலைவர் தீர்மானித்தள்ளார்' என்று பிஃபா சனிக்கிழமை (26) வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஓகஸ்ட் 20 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தியே ஸ்பெயின் கிண்ணத்தை வென்றது. போட்டி



முடிந்தபின் வீராங்கனைகளை கட்டித் தழுவிய ருபியல்ஸ், ஹெர்மோசோவின் தலையை இறுக்கப் பிடித்து அவரது உதட்டில் முத்தம் கொடுத்தார்.

ருபியல்ஸ் தலைவராக இருக்கும்போது ஸ்பெயின் அணிக்காக விளையாடப்போவதில்லை என்று மகளிர் அணியின் பல வீராங்கனைகளும் குறிப்பிட்டுள்ளனர். இந்தப் பிரச்சினையை அடுத்து முகாமையாளர் ஜோர்ஜ் வில்டா தவிர்த்து உலகக் கிண்ணத்தை வென்ற ஸ்பெயின் அணியின் அனைத்து பயிற்சிக் குழாமும் பதவி விலகியுள்ளது.

## ஆக்கிரமிப்பு அச்சம்: நைகர் படையினர் உஷார்நிலையில்




தாக்குதல் அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில் நைகர் இராணுவ ஆட்சியாளர்கள் நாட்டின் ஆயுதப்படையை அதிகபட்ச உஷார் நிலையில் வைத்துள்ளனர்.

நைகரில் இராணுவ சதிப்புரட்சியில் ஈடுபட்ட தலைவர்களுடன் மேற்கு ஆபிரிக்க பிராந்திய கூட்டமைப்பு பேச்சுவார்த்தைக்கு முயற்சித்த நிலையில், இராஜதந்திர முயற்சிகள் தோல்வி அடைந்தால் சட்ட ஒழுங்கை ஏற்படுத்த துருப்புகளை அனுப்பவிருப்பதாக எச்சரித்துள்ளது.

எந்த ஒரு தாக்குதல் மற்றும் மொதுமக்கள் எழுச்சி ஒன்றை தவிர்ப்பதற்கு இராணுவத்தினரை தயார் நிலையில் வைக்கும் உத்தரவை நைகரின் இராணுவ ஆட்சியாளர்கள் பிறப்பித்துள்ளனர். இது தொடர்பான விபரம் சமூக ஊடகத்தில் கசிந்துள்ளது.

'தேசத்தின் எல்லைக்குள் ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல் அதிகரித்து வருகிறது' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இராஜதந்திர முயற்சிகளுக்கு இடமளிக்க தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் இராணுவ தலையீடு ஒரு தேர்வாக தொடர்ந்து நீடிப்பதாகவும் மேற்கு ஆபிரிக்க பிராந்திய கூட்டமைப்பு கடந்த வெள்ளிக்கிழமை (25) கூறியிருந்தது.

நைகரில் கடந்த ஜுலை 26 ஆம் திகதி நடைபெற்ற இராணுவ சதிப்புரட்சியில் ஜனாதிபதி மொஹமட் பசூம் பதவி கவிழ்க்கப்பட்டார். இந்நிலையில் பசூமை மீண்டும் பதவியில் அமர்த்தும்படி பிராந்திய நாடுகள் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இதேவேளை பிரான்ஸ், ஜெர்மனி, நைஜீரியா மற்றும் அமெரிக்க நாடுகளின் தூதுவர்கள் நாட்டை விட்டு வெளியேற நைகரின் இராணுவ அரசு கடந்த சனிக்கிழமை 48 மணி நேர கெடு விதித்தது.

# சர்வதேச செய்திகள்

## 3 கறுப்பினத்தவர்களை கொன்றவர் தற்கொலை

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் இனவாத வெறுப்பால் ஆடவர் ஒருவர் கறுப்பினத்தவர் மூவரைச் சுட்டுக் கொன்றுள்ளார்.



ஜெக்சன்வில் நகரில் உள்ள மளிகைக் கடையில் நேற்று முன்தினம் (26) துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. மூவரைப் படபடவென சுட்ட 20 வயது நிரம்பிய வெள்ளையின ஆடவர் பின்னர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

ஆடவர் பயன்படுத்திய 2 துப்பாக்கிகளில் ஒன்றின் மீது நாஸி இயக்கத்துடன் தொடர்புடைய சுவாஸ்டிகா சின்னம் இருந்ததாகக் கூறப்பட்டது. ஆடவர் கறுப்பினத்தவரை குறிவைத்து தாக்கியதாக புளோரிடா மாநில பொலிஸார் கூறினர்.

தாக்குதலுக்குச் சிறிது நேரத்திற்கு முன்னர், பகைமை உணர்வை வெளிப்படுத்தும் சில ஆவணங்களை அவர் வைத்திருந்ததை அவரது குடும்பத்தினர் கண்டுபிடித்தனர். ஆடவர் இதற்கு முன் மனநலப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

ஆனால் தாக்குதல் நடத்தியவரின் பெயர் உள்ளிட்ட விபரங்களை பொலிஸார் வெளியிடவில்லை. இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## சிம்பாப்வே ஜனாதிபதியாக எமர்சன் மீண்டும் வெற்றி

சிம்பாப்வே ஜனாதிபதி எமர்சன் மனங்கக்வா 52.6 வீதமான வாக்குகளை பெற்று இரண்டாவது தவணைக்கு வெற்றிபெற்றுள்ளார்.



எனினும் பரந்த அளவில் தேர்தல் மோசடி இடம்பெற்றிருப்பதாக எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டிருப்பதோடு தேர்தல் ஜனநாயக தரத்தில் இல்லை என்று சர்வதேச கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மனங்கக்வா சிம்பாப்வேயின் மூன்றாவது ஜனாதிபதியாக உள்ளார். 2017 ஆம் ஆண்டு முன்னாள் தலைவர் ரொபட் முகாபேக்கு எதிரான சதிப்புரட்சிக்குப் பின்னர் நாட்டின் தலைவராக பொறுப்பேற்றார்.

சிம்பாப்வே தொடர்ந்தும் அதிக பணவீக்கம், வறுமை மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகிறது.

கடந்த ஓகஸ்ட் 23, 24 ஆம் திகதிகளில் நடைபெற்ற தேர்தலில் மனங்கக்வாவின் பிரதான போட்டியாளரான நெல்சன் சமிசா 44 வீத வாக்குகளை வென்றதாக சிம்பாப்வே தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தேர்தல் வெற்றியை அடுத்து ஆளுங்கட்சிக்கு ஆதரவான சிறு குழு ஒன்று கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒகஸ்ட் மாதம் 28ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன் THINAKARAN

கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

SBI

# ஸ்டேட் பேங் ஒப் இந்தியா

State Bank of India

இல. 16, சேர் பரோன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01.

## 30.06.2023 இல் முடிவடைந்த காலாண்டுக்குரிய நிதிக் கூற்றறிக்கைகள்

### வருமானகூற்று 30.06.2023 இல் முடிவடைந்த காலாண்டுக்குரியது

| | வங்கி (ரூபா மில்லியன்களில்) | | குழுமம் (INR - கோடிகளில்) | |
|---|---|---|---|---|
| | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி |
| | 01.04.2023 இலிருந்து 30.06.2023 வரை | 01.04.2022 இலிருந்து 30.06.2022 வரை | 01.04.2023 இலிருந்து 30.06.2023 வரை | 01.04.2022 இலிருந்து 30.06.2022 வரை |
| வட்டி வருமானம் | 948.23 | 804.63 | 95,975.45 | 72,676.37 |
| வட்டிச் செலவுகள் | (159.78) | (131.22) | (57,070.50) | (41,480.44) |
| **தேறிய வட்டி வருமானம்** | **788.45** | **673.41** | **38,904.95** | **31,195.93** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 79.03 | 184.86 | 12,063.38 | 2,312.20 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் செலவினங்கள் | - | - | - | - |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **79.03** | **184.86** | **12,063.38** | **2,312.20** |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய (இலாபம்/நட்டம்) | - | - | - | - |
| லாபம் அல்லது இழப்பு மூலம் நியாயமான மதிப்பில் நிதிக் கருவிகளில் இலாப மற்றும் நட்டம் மூலம் நியாய விலையில் நியமிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் மீதான நிகர (இலாபம்/நட்டம்) | - | - | - | - |
| இலாப மற்றும் நட்டம் மூலம் நியாய விலையில் நியமிக்கப்பட்ட நிதிக் கடன்கள் மீதான நிகர (இலாபம்/நட்டம்) | | | | |
| பிற விரிவான வருமானத்தின் மூலம் நியாயமான மதிப்பில் | - | - | - | - |
| தேறிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 94.21 | 152.95 | - | - |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **961.69** | **1,011.21** | **50,968.33** | **33,508.13** |
| கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு | 11.36 | (6.75) | (2,651.85) | (4,268.13) |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **973.05** | **1,004.47** | **48,316.48** | **29,240.00** |
| தனிப்பட்ட செலவினங்கள் | (54.31) | (50.24) | (16,600.67) | (12,051.41) |
| பெறுமானத்தேய்வு மற்றும் கடன்தீர்ப்பனவு செலவினங்கள் | (8.48) | (10.90) | - | - |
| ஏனைய செலவுகள் | (60.99) | (47.65) | (8,920.19) | (8,828.41) |
| **நிதியியல் பணிகள் மீதான பெறுமதி கூட்டப்பட்ட மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/நட்டம்** | **849.26** | **895.68** | **22,795.62** | **8,360.18** |
| நிதியியல் பணிகள் மீதான பெறுமதி கூட்டப்பட்ட வரி | (86.20) | (100.81) | - | - |
| நிதியியல் பணிகள் மீதான தேசத்தை கட்டியெழுப்பும் வரி | - | - | - | - |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) | (14.59) | - | - | - |
| **பெறுமதி கூட்டப்பட்ட மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிக்கு பின்னரான தொழிற்பாட்டு இலாபம்** | 748.48 | 794.87 | 22,795.62 | 8,360.18 |
| இணைக்கம்பனிகள் மற்றும் கூட்டு முயற்சிகளின் இலாபப்பங்கு | - | - | - | - |
| **வரிக்கு முன்னரான இலாபம்/நட்டம்** | **748.48** | **794.87** | **22,795.62** | **8,360.18** |
| வருமான வரிச் செலவினங்கள் | (243.68) | (211.67) | (5,911.33) | (2,292.10) |
| **காலாண்டுக்குரிய இலாபம்/நட்டம்** | **504.80** | **583.20** | **16,884.29** | **6,068.08** |
| **பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்** | | | | |
| தலைமைக் கம்பனியின் உரிமையாளர்களுக்கு | | | 16,884.29 | 6,068.08 |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | | | - | - |
| | | | **16,884.29** | **6,068.08** |
| **இலாபத்தின் மீதான பங்கிலாபம்** | | | | |
| சாதாரண பங்கிற்கான அடிப்படை இலாபம் | | | 18.92 | 6.80 |
| சாதாரண பங்கிற்கான குன்றிய இலாபம் | | | 18.92 | 6.80 |

### அனைத்தையுமுள்ளடக்கிய 30.06.2023 வருமானக் கூற்று முடிவடைந்த காலாண்டுக்குரியது

| | வங்கி (ரூபா மில்லியன்களில்) | | குழுமம் (INR - கோடிகளில்) | |
|---|---|---|---|---|
| | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி |
| | 01.04.2023 இலிருந்து 30.06.2023 வரை | 01.04.2022 இலிருந்து 30.06.2022 வரை | 01.04.2023 இலிருந்து 30.06.2023 வரை | 01.04.2022 இலிருந்து 30.06.2022 வரை |
| **காலாண்டிற்கான இலாபம்/நட்டம்** | **504.80** | **583.20** | **16,884.29** | **6,068.08** |
| **வருமாக்கூற்றில் உள்ளடக்கப்பட்ட உருப்படிகள்** | | | | |
| வெளிநாட்டுச் செயற்பாட்டுக் கைமாறல்களின் பரிவர்த்தனை வித்தியாசம் | (577.47) | (103.77) | - | - |
| காசுப்பாய்ச்சல் காப்பு ஏற்பாடுகள் மீதான இலாபங்கள் அல்லது நட்டங்கள் | | | | |
| ஏனைய தொகுக்கப்பட்ட வருமானத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் | - | - | - | - |
| அளவிடப்பட்ட கடன் பத்திரங்களின் | - | - | - | - |
| முதலீட்டில் தேறிய இலாபம்/நட்டம் | - | 7.23 | - | - |
| இணைக்கம்பனிகள் மற்றும் கூட்டுமுயற்சிகளின் இலாபப்பங்கு | - | - | - | - |
| நியாயப்பெறுமதியூடாக கடன் பத்திரங்கள் | | | | |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | - | - | - | - |
| ஏனையவை | - | - | - | - |
| கழி: வருமான அறிக்கையில் காணப்படும் மறுசீரமைக்கப்படாத விடயங்கள் தொடர்பான வரிச் செலவுகள் | - | - | - | - |
| **வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படமாட்டாத உருப்படிகள்** | | | | |
| வெளிநாட்டு தொழிற்பாட்டுக்கான நிதிக் கூற்றுக்களின் நாணயப் பரிமாற்றம் காரணமாக ஏற்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் மூலம் நியாய மதிப்பில் நியமிக்கப்பட்ட முதலீட்டு பங்குப்பத்திரங்களின் நியாய மதிப்பில் ஏற்பட்ட மாற்றம் தொடர்புடைய வரி | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் குறித்திரைக்கப்பட்ட நிதிப் பொறுப்புகளின் மீதான வங்கியின் சொந்த கடன் இடரில் ஏற்பட்ட மாற்றத்திற்குச் சாட்டத்தக்க நியாயப் பெறுமதியில் மாற்றம் | - | - | - | - |
| மீள் மதிப்பீட்டு மேன்மிகுதியில் தொழில் அனுகூலக் கடப்பாடுகளுக்குப் பிற்பட்ட | - | - | - | - |
| மாற்றங்களின் மீள் அளவீடு தொடர்புடைய வரி | - | - | - | - |
| இணைக்கம்பனிகள் மற்றும் கூட்டுமுயற்சிகளின் இலாபப்பங்கு | - | - | - | - |
| ஏனையவை | - | - | - | - |
| கழி: வருமான அறிக்கையில் காணப்படும் மறுசீரமைக்கப்படாத விடயங்கள் தொடர்பான வரிச் செலவுகள் | - | - | - | - |
## தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்பாட்டுச் சுட்டிகள் (ஒழுங்குபடுத்துதல் அறிக்கைப்படுத்தலின்படி) 30.06.2023

| ரூபா மில்லியன்களில் | வங்கி (in LKR) | | குழுமம் (in INR) | |
|---|---|---|---|---|
| | 30-ஜுன்-2023 | 31-மார்ச்-2023 (கணக்காய்வுக்குட்பட்டது) | 30-ஜுன்-2023 | 31-மார்ச்-2023 (கணக்காய்வுக்குட்பட்டது) |
| **ஒழுங்குபடுத்துதல் மூலதனம் போதுமை(இ.ரூ.மில்லியன்)** | | | | |
| பொது உரிமையாண்மை படி 1 | 18,094 | 17,644 | 173,666 | 167,361 |
| கரு (படி 1) மூலதனம் | 18,094 | 17,644 | 173,666 | 167,361 |
| மொத்த மூலதனம் அடித்தளம் | 18,277 | 17,836 | 215,587 | 209,250 |
| **ஒழுங்குபடுத்தும் மூலதன விகிதம் (%)** | | | | |
| பொது உரிமையாண்மை படி1 மூலதனம் (%) (குறைந்தபட்ச தேவைப்பாடு 7.00% சொத்துக்கள் 500 மில்லியனுக்கு குறைவாக இருப்பதால்) | 62.31% | 62.21% | 13.34% | 12.88% |
| படி1 மூலதனம் (%) (குறைந்தபட்ச தேவைப்பாடு 8.50%) 7.00% சொத்துக்கள் 500 மில்லியனுக்கு குறைவாக இருப்பதால்) | 62.31% | 62.21% | 13.34% | 12.88% |
| மொத்த மூலதனம் விகிதம் (%) (குறைந்தபட்ச தேவைப்பாடு 12.50%) 7.00% சொத்துக்கள் 500 மில்லியனுக்கு குறைவாக இருப்பதால்) | 62.94% | 62.89% | 16.56% | 16.10% |
| **சீராக்கிய விகிதம் (குறைந்தபட்ட தேவைப்பாடு - 3%)** | 52.72% | 50.43% | 5.26% | 5.14% |
| **ஒழுங்குமுறை திரவத்தன்மை** | | | | |
| நியதிச்சட்ட திரவச்சொத்துக்கள் (இ.ரூ.மில்லியன்) | 10.013 | 9,782 | 895,314 | 903,142 |
| நியதிச்சட்ட திரவச்சொத்து விகிதம்(%) (குறைந்தபட்ட தேவைப்பாடு - 20%) | | - | - | |
| உயர்தர திரவச் சொத்துக்களின்மொத்தப் பங்குகள் (ரூபா.மில்லியன்) (இ.ரூ.மில்லியன்) | 54.73% | 43.06% | 24.00% | 25.10% |
| கரைகடந்த வங்கியியல் அலகு (%) | 31.47% | 35.06% | | |
| உயர்தர திரவச் சொத்துக்களின் மொத்தப் பங்குகள் (ரூபா.மில்லியன்) (இ.ரூ.மில்லியன்) | 7,907 | 6,114 | 651,354 | 692,693 |
| திரவத்தன்மை காப்பு விகிதம்(%) (குறைந்தபட்ச தேவைப்பாடு-100%) | | | | |
| ரூபா(%) | 10243% | 4139% | - | - |
| அனைத்து நாணயங்களும் (%) | 583.19% | 266.24% | 163,82% | 171.16% |
| தேறிய நிலையான நிதியியல் விகிதம் (%) (குறைந்தபட்ச தேவைப்பாடு -90%) | 148% | 131% | 140.79% | 143.21% |
| **சொத்துக்களின்தரம் (கடன் தளத்தின்தரம்)** | | | | |
| திரண்ட செயற்படா கடன்களின் விகிதம் (%) (இடைநிறுத்தி வைக்கப்பட்ட வட்டி நீங்கலாக) | 0.98% | 0.57% | 7.13% | 7.44% |
| தேறிய செயற்படா கடன்களின் விகிதம் (%) (இடைநிறுத்தி வைக்கப்பட்ட வட்டி மற்றும் ஒதுக்கம் நீங்கலாக) | 0.20% | 0.00% | 1.44% | 1.83% |
| **இலாபத்தன்மை** | | | | |
| வட்டி எல்லை (%) | 9.79% | 6.61% | 3.21% | 2.93% |
| சொத்துக்களிலிருந்தான வருவாய் (வரிக்கு முந்திய (%) | 8.86% | 6.19% | 0.63% | 0.76% |
| பங்கு மூலதனத்திலிருந்தான வருவாய் (%) | 15.62% | 11.12% | 13.44% | 15.55% |
| நட்டத்திற்குள்ளான கடன்கள் (நிலை 3) விகிதம் | 0.20% | 0.00% | NA | NA |
| நிலை 3 கடன்களின் நட்டங்களுக்கான (நிலை 3) விகிதம் | 80.98% | 100.00% | NA | NA |

## 30.06.2023 இல் முடிவடைந்த காலாண்டுக்குரிய பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று

| வங்கி (in LKR) ரூபா மில்லியன்களில் | கூறப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம் | | | ஒதுக்கங்கள் | | | | | மொத்தம் | கட்டுப்படுத்த முடியாத வட்டி | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வாக்குரிமையுள்ள சாதாரண பங்குகள் | வாக்குரிமையற்ற சாதாரண பங்குகள் | ஒதுக்கப்பட்ட மூலதனம் | ஒதுக்கு நிதியம் | OCI ஒதுக்கம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | ஏனைய ஒதுக்குகள் | | | |
| **01.04.2023** அன்று மீதி (ஆரம்ப மீதி) | - | - | 2,289 | 603 | 3,272 | 84 | 11,137 | 344 | 17,729 | - | 17,729 |
| ஆண்டுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய மொத்த வருமானம் | | | | | | | | | | | |
| ஆண்டுக்கான இலாபம் (நட்டம்) | - | - | - | - | - | - | 467 | - | 467 | - | 467 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் (வரி நீங்கலாக) | - | - | - | - | (524) | - | - | - | (524) | - | (524) |
| **ஆண்டுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய மொத்த வருமானம்** | - | - | 2,289 | 603 | 2,748 | 84 | 11,604 | 344 | 17,672 | - | 17,672 |
| **பங்கு மூலதன உரிமையாளர்களுடனான பங்கு மூலதனத்துடன் நேரடியாக இனங்காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்** | | | | | | | | | | | |
| வழங்கிய பங்கு/ ஒதுக்கப்பட்ட மூலதனத்தில் அதிகரிப்பு | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| பங்கு விருப்பார்வங்கள் செயற்படுத்தப்பட்டமை | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மிகை இலாப வழங்கல் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| உரிமை வழங்கல் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| காலப்பகுதியில் ஒதுக்கங்களுக்கு மாற்றப்பட்டவை | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| பங்கு மூலதன உரிமையாளர்களுக்கான பங்கிலாபம் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| தலைமை காரியாலயத்திற்கு மாற்றப்பட்ட இலாபம் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்) (செலவு முறை கடைப்பிடிக்கப்பட்டிருப்பின்) | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | - | - | - | - | - | - | 146 | - | 146 | - | 146 |
| பங்கு மூலதன உரிமையாளர்களுடனான மொத்தக் கொடுக்கல்வாங்கல்கள் | - | - | - | - | - | - | 146 | - | 146 | - | 146 |
| **30.06.2023 அன்று மீதி (இறுதி மீதி)** | - | - | 2,289 | 603 | 2,748 | 84 | 11,750 | 344 | 17,818 | - | 17,818 |

## நிதியியல் நிலைமைக் கூற்று 30.06.2023 இல் உள்ளவாறானது

| ரூபா மில்லியன்களில் | வங்கி (in LKR) | | குழுமம் (in INR) | |
|---|---|---|---|---|
| | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி |
| | 30-ஜுன்-2023 இல் உள்ளவாறு | 31-மார்ச்-2023 இல் உள்ளவாறு (கணக்காய்வுக்குட்பட்டது) | 30-ஜுன்-2023 இல் உள்ளவாறு | 31-மார்ச்-2023 இல் உள்ளவாறு (கணக்காய்வுக்குட்பட்டது) |
| சொத்துக்கள் | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 1,986 | 1,259 | 193,806 | 173,147 |
| மத்திய வங்கியுடனான மீதிகள் | 1,018 | 1,694 | 2,046 | 1,796 |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | - | - | 8,950 | 32,923 |
| பெறுமதி நிதியியல் சாதனங்கள் | - | - | - | - |
| இலாபம் மற்றும் நட்டத் ஊடான நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் | - | | | |
| நியாயப் பெறுமதியில் மீள் அளவிடப்பட்டது | - | - | - | - |
| நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்டது | - | - | - | - |
| தீர்ப்பனவுக் கிரயத்தில் நிதிச்சொத்துக்கள் | - | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 20,847 | 22,498 | 1,800,712 | 1,780,526 |
| கடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | 7,132 | 5,954 | 911,697 | 553,303 |
| ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானத்தின் ஊடான நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் | 2 | 2 | 20,266 | 386,605 |
| இணைக்கம்பனிகளிலான முதலீடுகள் | - | - | - | - |
| துணைக்கம்பனி மற்றும் கூட்டுமுயற்சிகளிலான முதலீடுகள் | - | - | - | - |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 249 | 249 | 37,409 | 37,100 |
| நன்மதிப்புக்கள் மற்றும் அருவச்சொத்துக்கள் | - | - | - | |
| நடைமுறை வரிக்கான சொத்துக்கள் | - | - | - | - |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | - | 4 | 60,343 | 60,343 |
| ஏனைய சொத்துக்கள் | 276 | 190 | 115,271 | 111,715 |
| மொத்தச் சொத்துக்கள் | **31,510** | **31,850** | **3,150,500** | **3,137,458** |
| பொறுப்புக்கள் | | | | |
| வங்கிகளுக்குச் சொலுத்தப்பட வேண்டியவை | - | 4 | 6,940 | 34,890 |
| பெறுமதி நிதியியல் சாதனங்கள் | - | - | - | - |
| இலாபம் மற்றும் நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புக்கள் | - | - | - | - |
| நியாயப் பெறுமதியில் மீள் அளவிடப்பட்டது | - | - | - | - |
| நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்டது | - | - | - | - |
| தீர்ப்பனவுக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள் | - | - | - | - |
| வைப்பாளர்களுக்கு கொடுக்கவேண்டியவை | 13,010 | 13,546 | 2,639,657 | 2,603,042 |
| கடனீட்டுபத்திரதாரர்களுக்கு கொடுக்கவேண்டியவை | - | - | - | - |
| ஏனைய கடன்படுனர்களுக்கு கொடுக்க வேண்டியவை | - | - | - | - |
| வழங்கப்பட்ட படுகடன் பிணைகள் | - | - | - | - |
| அனுகூலத் திட்டங்களுக்கு செலுத்தப்பட்ட பங்களிப்பு | 8 | 8 | 27 | 28 |
| நடப்பு வரிப் பொறுப்புக்கள் | 370 | 402 | - | - |
| ஓய்வூதிய அனுகூல கடப்பாடுகள் | 18 | - | 5 | 4 |
| நீண்டகால கடன்கள் | 286 | 161 | - | - |
| ஏனைய ஏற்பாடுகள் | - | - | 246,412 | 246,865 |
| ஏனைய பொறுப்புக்கள் | - | - | - | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | **13,692** | **14,121** | **2,893,041** | **2,884,829** |
| பங்கு மூலதனம் | | | | |
| கூறப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம் | 2,288 | 2,289 | 189,024 | 189,024 |
| நியதிச்சட்ட ஒதுக்கு நிதியம் | 603 | 603 | 40,867 | 40,867 |
| OCI ஒதுக்கம் | 2,756 | 3,272 | - | - |
| பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | 11,747 | 11,137 | - | - |
| ஏனைய ஒதுக்கங்கள் | 424 | 428 | 27,567 | 22,738 |
| பங்குதாரருக்கான மொத்த பங்கு மூலதனம் | **17,818** | **17,729** | **257,458** | **252,629** |
| கட்டுப்பாட்டு உரிமையற்ற ஈடுபாடுகளுக்கு | - | - | - | - |
| மொத்தப் பங்கு மூலதனம் | **17,818** | **17,729** | **257,458** | **252,629** |
| மொத்தப் பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | **31,510** | **31,850** | **3,150,499** | **3,137,458** |
| எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் | 7,003 | 8,293 | 2,262,452 | 1,961,314 |
| விஞ்ஞாபனத் தகவல்கள் | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 19 | 19 | 21,917 | 22,055 |
| கிளைகளின் எண்ணிக்கை | 1 | 1 | 3,226 | 3,220 |

குறிப்பு : கூறப்பட்ட தொகைகள் நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு மற்றும் தேய்மானத்தின் நிகரமாகும்.

## காசுப்பாய்ச்சல் அறிக்கை 30.06.2023

| ரூபா மில்லியன்களில் | வங்கி (in LKR) | |
|---|---|---|
| | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி |
| | 30/06/2023 | 31/03/2023 கணக்காய்வுக்குட்பட்டது |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி வருமதிகள் | 835 | 2,323 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | (74) | (215) |
| நிகர தரகுப்பண வருமதிகள் | 60 | 377 |
| வர்த்தக வருமானம் | 72 | 126 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் | (14) | (61) |
| நிதிச் சேவைகள் மீதான VAT மற்றும் NBT | (139) | (397) |
| ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான வருமதிகள் | 0 | 6 |
| ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகள் | (53) | (147) |
| **செயற்பாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மாற்றத்திற்கு முன் செயற்பாட்டு இலாபம்** | **687** | **2,012** |
| | - | - |
| **செயற்பாட்டுச் செலவுகளில் (அதிகரிப்பு)/வீழ்ச்சி** | - | - |
| இலங்கை மத்திய வங்கியிடமுள்ள மீதிகள் | 676 | - |
| தீர்த்துக் குறைக்கப்பட்ட பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்-கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 1,651 | - |
| ஏனைய சொத்துக்கள் | (1,264) | (11,330) |
| **செயற்பாட்டுச் பொறுப்புக்களில் (அதிகரிப்பு)/வீழ்ச்சி** | - | - |
| தீர்த்துக் குறைக்கப்பட்ட பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்-வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | (536) | - |
| தீர்த்துக் குறைக்கப்பட்ட பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்-ஏனைய கடனாளிகளுக்குச் சொலுத்த வேண்டியவை | - | - |
| தீர்த்துக் குறைக்கப்பட்ட பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்-கடன்கள் மற்றும் முற்பணங்கள் | (4) | - |
| ஏனைய பொறுப்புக்கள் | (345) | 1,345 |
| **வரிக்கு முன் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து நிகர காசு பாய்ச்சல்** | **865** | **(7,974)** |
| செலுத்திய வருமான வரி | (137) | (717) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்திய/இருந்தான) நிகர பணம்** | **728** | **(8,691)** |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | - | - |
| காணி, இயந்திர மற்றும் உபகரணக் கொள்வனவு | - | - |
| காணி, இயந்திர மற்றும் உபகரண விற்பனை மூலமான வருமானம் | (0) | (0) |
| நிதி முதலீடுகளின் கொள்வனவு | - | 1,695 |
| நிதி முதலீடுகளின் விற்பனை மற்றும் முதிர்ச்சி மூலமான வருமானம் | - | - |
| அருவச் சொத்துக்களின் நிகர கொள்வனவு | - | |
| உப நிறுவனங்கள் கூட்டு முயற்சிகள் மற்றும் துணை நிறுவனங்களிலுள்ள முதலீடுகளின் சுவீகரிப்பு மூலமான நிகர காசுப்பாய்ச்சல் | - | |
| உப நிறுவனங்கள் கூட்டு முயற்சிகள் மற்றும் துணை நிறுவனங்களிலுள்ள முதலீடுகளின் விற்பனை மூலமான நிகர காசுப் பாய்ச்சல் | - | - |
| உப நிறுவனங்கள் மற்றும் துணை நிறுவனங்களிலிருந்து கிடைத்த பங்கிலாபங்கள் | - | 2 |
| ஏனையவை | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்திய/இருந்தான நிகர பணம்** | **(0)** | **1,697** |
| **நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்கள்** | - | - |
| சாதாரண பங்கு மூலதன வழங்கல் மூலமான நிகர வருமானம் | - | - |
| கீழ்நிலைப்படுத்திய கடன் வழங்கல் மூலமான நிகர வருமானம் | - | - |
| கீழ்நிலைப்படுத்திய கடனின் மீளளிப்பு | - | - |
| கீழ்நிலைப்படுத்திய கடன் மீது செலுத்தப்பட்ட வட்டி | - | - |
| கட்டுப்படுத்தும் ஈடுபாட்டை வைத்திராதவர்களுக்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - |
| தாய்நிறுவனத்தின் பங்குதாரர்களுக்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - |
| ஏனைய பங்குரிமைப் பத்திரகளை வைத்திருப்பவர்களுக்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - |
| தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்ட இலாபம் | - | - |
| ஏனையவை | - | (9) |
| **நிதி வடவடிக்ரககளில் (பயன்படுத்திய/இருந்தான நிகர பணம்)** | - | (9) |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் தொடர்பில் பரிவர்த்தனை வித்தியாசம்** | 728 | (7,003) |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமசமானவைகள் | 1,259 | 7,538 |
| பரிமாற்ற மாற்றங்களால் ஏற்பட்ட காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | - | 723 |
| காலப்பகுதியின் முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | **1,986** | **1,259** |

## 30.06.2023 இல் முடிவடைந்த காலாண்டுக்குரிய பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று

| குழுமம் (in INR) ரூபா மில்லியன்களில் | கூறப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம் | | | ஒதுக்கங்கள் | | | | | மொத்தம் | கட்டுப்படுத்த முடியாத வட்டி | மொத்த பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வாக்குரிமையுள்ள சாதாரண பங்குகள் | வாக்குரிமையற்ற சாதாரண பங்குகள் | ஒதுக்கப்பட்ட மூலதனம் | ஒதுக்கு நிதியம் | OCI ஒதுக்கம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | ஏனைய ஒதுக்குகள் | | | |
| **01.04.2023** அன்று மீதி (ஆரம்ப மீதி) | 189,024 | - | - | 40,867 | - | 27,532 | (164,488) | 159,694 | 252,629 | - | 252,629 |
| ஆண்டுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய மொத்த வருமானம் | | | | | | | | | | | |
| ஆண்டுக்கான இலாபம் (நட்டம்) | - | - | - | - | - | - | 5,003 | - | 5,003 | - | 5,003 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் (வரி நீங்கலாக) | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| **ஆண்டுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய மொத்த வருமானம்** | 189,024 | - | - | 40,867 | - | 27,532 | (159,485) | 159,694 | 257,632 | - | 257,632 |
| **பங்கு மூலதன உரிமையாளர்களுடனான பங்கு மூலதனத்துடன் நேரடியாக இனங்காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்** | | | | | | | | | | | |
| வழங்கிய பங்கு/ ஒதுக்கப்பட்ட மூலதனத்தில் அதிகரிப்பு | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| பங்கு விருப்பார்வங்கள் செயற்படுத்தப்பட்டமை | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மிகை இலாப வழங்கல் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| உரிமை வழங்கல் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| காலப்பகுதியில் ஒதுக்கங்களுக்கு மாற்றப்பட்டவை | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| பங்கு மூலதன உரிமையாளர்களுக்கான பங்கிலாபம் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| தலைமை காரியாலயத்திற்கு மாற்றப்பட்ட இலாபம் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்) (செலவு முறை கடைப்பிடிக்கப்பட்டிருப்பின்) | - | - | - | - | - | (69) | - | - | (69) | - | (69) |
| ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | - | - | - | - | - | (11) | - | (94) | (105) | - | (105) |
| பங்கு மூலதன உரிமையாளர்களுடனான மொத்தக் கொடுக்கல்வாங்கல்கள் | - | - | - | - | - | (80) | - | (94) | (174) | - | (174) |
| **30.06.2023 அன்று மீதி (இறுதி மீதி)** | 189,024 | - | - | 40,867 | - | 27,452 | (159,485) | 159,600 | 257,458 | - | 257,458 |

**உறுதிப்படுத்தல்:**

இதன் கீழ் ஒப்பமிடும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தலைமை நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் இணக்க உத்தியோகத்தர் ஆகிய நாங்கள் கூட்டாக உறுதிப்படுத்துவதாவது :-

அ) மேற்படி கூற்றுகள் இலங்கை மத்திய வங்கியால் அறிவுறுத்தப்பட்ட படிமுறைகள் மற்றும் வரைவிலக்கணங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டவை.

ஆ) இக்கூற்றுகள் வங்கியின் கணக்காய்வுக்குட்பட்டது என்று குறிப்பிடப்பட்டாலன்றி கணக்காய்வுக்குட்படாத கூற்றுகளிலிருந்து எடுக்கப்பட்ட தகவல்களை உள்ளடக்கியுள்ளன.

ஷமீர் . S
நாட்டுத் தலைமை
திகதி: 23.08.2023

R.J.W. N. சதுரானி
இணக்க உத்தியோகத்தர்
திகதி: 23.08.2023

NEW **INDIAN RUPEE (INR) TRADE SETTLEMENT FACILITY**

- INSTANT SETTLEMENT OF IMPORT PAYMENTS IN INR TO ANY BANK IN INDIA
- OPENING OF LETTERS OF CREDIT/DA/DP/TT PAYMENTS IN INR CURRENCY
- DIRECT QUOTE FOR LKR/INR EXCHANGE RATE

For further details please contact us on +94 11 5324422 / supercolombo@iobnet.co.in / iobcolombo@iob.in

To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,

YOU NAME IT, WE HAVE IT

Sunday Observer adz Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

Sunday Observer adz it's what you want




- Auto Focus

adz Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369 011 2 429 368

E-mail adzsuo@gmail.com

# கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பம் தொடர்பான அறிவித்தல்

இல. 286, டைக் வீதி, திருகோணமலை, இலங்கை மற்றும் 7 ரு கெப்ரியல் பெரி, டர்விலே, பிரான்சு என்ற முகவரிகளைச் சேர்ந்த இறந்த பெட்ரீசியா நொவெக் என்பவரின் இறுதி விருப்பாவணம் மற்றும் மரணசாதனப்பத்திரம் தொடர்பில் வனுவடு குடியரசினால் போல் டி மொன்ட்கொல்பியர் எட் அசோசீஸ் லிமிடெட் (“AJC”) இற்கு 2022 மே மாதம் 05ஆம் திகதி வழங்கப்பட்ட மரணசாதனப் பத்திரத்தினை மீள்-இலச்சினை இடுவதற்காக குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் XXXVIIIB அத்தியாயத்தின் 554U பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற விண்ணப்பம்.

வழக்கிலக்கம்: 232/2023/DTS
நடவடிக்கைமுறை: சுருக்கம்
தன்மை: மரணசாதனப்பத்திரம்
பெறுமதி: ரூ.23,225,490/-

**போல் டி மொன்ட்கொல்பியர் எட் அசோசீஸ் லிமிடெட் ("AJC")**
**01ஆம் மாடி, கொவன்ட் கட்டடம்**
**தபால் பெட்டி 1276,**
**போர்ட் விலா,**
**வனுவடு.**
பின்வரும் அற்றோனி தத்துவக்காரர் மூலம் தோன்றுகின்றார்
**கௌரிநாத் காளிராஜா**
**இல. 27/1, காளிகோவில் வீதி, திருகடலூர்,**
**திருகோணமலை, 31000.**

**மனுதாரர்**

இல. 286, டைக் வீதி, திருகோணமலை, இலங்கை மற்றும் 7 ரு கெப்ரியல் பெரி, டர்விலே, பிரான்சு என்ற முகவரிகளைச் சேர்ந்த (இறந்த) பெட்ரீசியா நொவெக் என்பவரின் மரணச் சொத்து தொடர்பில் இறுதி விருப்பாவணத்தின் மரணசாதனப் பத்திரத்தினை மீள்-இலச்சினை இடுவதற்காக குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் XXXVIIIB அத்தியாயத்தின் 554U பிரிவின் கீழ், இந்த அறிவித்தலின் பிரசுரிப்புத் திகதியிலிருந்து 28 நாட்கள் முடிவடைந்த பின்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்று மேற்கொள்ளப்படும் என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டு 08. மாதம் 3ஆம் திகதியாகிய இன்று

**எப். ஜே என்ட் ஜீ. டி சேரம்**
**மனுதாரரர் சார்பிலான சட்டத்தரணிகள்**
**இல. 216, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10.**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல் (IFB)

| இல. | ஒப்பந்த பெயர் |
|---|---|
| 01. | கிராமிய பாலக் கட்டுமானப் பிரிவுக்கான பாதுகாப்பு சேவை, RDA - அத்திடிய ஆலை. ஒப்பந்த இலக்கம் : RDA/DPR/SEC (Aththidiya)/2023/98 |

மேற்கூறிய பணிகளுக்காக தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2023.08.28 ஆம் திகதி முதல் 2023.09.19 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபை இணையத்தளத்தை **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**வீ.அ.அ.ச கொள்முதல் குழு,**
**வீதி அபிவிவிருத்தி அதிகாரசபை.**

The Housewives’ companion
Classifieds on
Daily News

# அறிவித்தல்

## வெளிநாட்டு மொழி மற்றும் பயிற்சி நிலையத்தை செயற்படுத்துதல், நடாத்திச் செல்வதற்காக பொருத்தமான நிறுவனமொன்றை தெரிவு செய்தல்

மேல் மாகாண சுற்றுலா சபையினால் செயற்படுத்தப்படும் வெளிநாட்டு மொழி மற்றும் பயிற்சி நிலையத்தை செயற்படுத்துதல், நடாத்திக்கொண்டு செல்லல் மற்றும் நிர்வாக வேலைகளுக்காக பொருத்தமான நிறுவனமொன்றைத் தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கல்வி நிறுவனமாக அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தபட்சம் 05 வருட காலம் கல்வி நிறுவனமாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருத்தல் வேண்டும்.
- முன்வைக்கப்படும் கற்கை நெறிகளை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்காக தகுதி வாய்ந்த ஆசிரியர்களை ஈடுபடுத்தும் இயலுமை உள்ளது என்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- மேல் மாகாண சுற்றுலா சபை மற்றும் தெரிவு செய்யப்படும் கல்வி நிறுவனத்திற்கிடையில் எழுத்து மூலமான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடல் வேண்டும் என்பதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இரு தரப்பினரும் இணங்குதல் வேண்டும்.

உங்களது நிறுவனத்தின் விண்ணப்பப்படிவத்தை 2023-09-06ஆம் திகதிக்கு முன் தலைவர், சுற்றுலா சபை (மே.மா), 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**சுற்றுலா சபை (மே.மா)**

**கசுன் : 077-5526775**
**தனுஜா : 074-0609256**
**அலுவலகம் : 0112-092688**


SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Gayani - 077 7 278 948 / 0112 429 343 / 342 | Piyumi- 0112 429 383 E-mail - classified@lakehouse.lk

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்**
**நீர்ப்பாசன அமைச்சு**
**நீர்ப்பாசன திணைக்களம்**
**காலநிலை பாதிப்பை குறைக்கும் பல் கட்ட திட்ட நுழைவு**
Project ID – P 160005/ Loan No: IBRD-89960

## தேசிய போட்டிரீதியான விலைமனு

**IFB No: CResMPA-1/RP/WORKS/ID-BAT/NCB/009, 014, 016, 018, 013, 021**

காலநிலை பாதிப்பை குறைக்கும் பல் கட்ட திட்ட நுழைவின் (CResMPA) செலவை நோக்கியதாக மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடம் (IBRD) இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு ஒப்பந்த வேலைகளின் கீழான தகுதியுடைய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு இந்த நிதியின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனைத்து தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கும் விலைமனு திறக்கப்பட்டுள்ளது.

1. கீழ் விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து மட்டக்களப்பு, நீர்ப்பாசன பணிப்பாளரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த பொதி இல. | பணியின் பெயர் | பிரிவு | பூர்த்தி செய்யும் காலம் (மாதங்கள்) | ICTAD (குறைந்த பட்ச தரம்) | விலைமனு பிணை | | விலைமனு செல்லுபடி காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை (இ.ரூபா) | காலம் (நாட்கள்) | |
| CResMPA-1/RP/WORKS/ID-BAT/NCB/009 | ரூகம் பிரிவு, வாகனேரி திட்டத்தில் பீலிமடு பால cum Regulator மேம்பாடுகள் | ரூகம் | 9 | C6 நீர்ப்பாசனம் மற்றும் காணி வாடிகால் | 260,000.00 | 2024.01.01 வரை (105 நாட்கள்) | 77 |
| CResMPA-1/RP/WORKS/ID-BAT/NCB/014 | மட்டக்களப்பு, ரூகம் பிரிவில் வடமுனை திட்டத்தில் 0 + 336 நிலையத்தில் வீதியை அணுகும் LB பிரதான கால்வாய் கட்டு மேம்பாடுகள் | ரூகம் | 9 | C6 நீர்ப்பாசனம் மற்றும் காணி வாடிகால் | 260,000.00 | 2024.01.01 வரை (105 நாட்கள்) | 77 |
| CResMPA-1/RP/WORKS/ID-BAT/NCB/016 | ரூகம் பிரிவு, உன்னிச்சை திட்டத்தில் வைகாலடிச்சேனை அணைக்கட்டு மேம்பாடுகள் | ரூகம் | 12 | C5 நீர்ப்பாசனம் மற்றும் காணி வாடிகால் | 350,000.00 | 2024.01.29 வரை (133 நாட்கள்) | 105 |
| CResMPA-1/RP/WORKS/ID-BAT/NCB/018 | நவகிரி பிரிவு, கன்னியம்மை அணைக்கட்டு நவகிரி திட்டத்திற்கு வீதி அணுகல் மேம்பாடுகள் | நவகிரி | 9 | C6 நீர்ப்பாசனம் மற்றும் காணி வாடிகால் | 260,000.00 | 2024.01.01 வரை (105 நாட்கள்) | 77 |
| CResMPA-1/RP/WORKS/ID-BAT/NCB/013 | நவகிரி பிரிவு, நவகிரி திட்ட, LB – 44A கால்வாயில் வீதியின் புனரமைப்பு | நவகிரி | 9 | C6 நீர்ப்பாசனம் மற்றும் காணி வாடிகால் | 260,000.00 | 2024.01.01 வரை (105 நாட்கள்) | 77 |
| CResMPA-1/RP/WORKS/ID-BAT/NCB/021 | ரூகம் பிரிவு, ரூகம் திட்டம், கல்வன்கை நதியில் பிள்ளையாரடி அணைக்கட்டு/ ஒழுங்குபடுத்தல் மேம்பாடு | ரூகம் | 9 | C5 நீர்ப்பாசனம் மற்றும் காணி வாடிகால் | 350,000.00 | 2024.01.29 வரை (133 நாட்கள்) | 105 |

2. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் மேலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதோடு அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.

3. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மட்டக்களப்பு, கல்லடி, நீர்ப்பாசன பணிப்பாளரிடம் விலைமனு ஆவணங்களை பெறுவதற்கான காலத்தில் அவைகளை கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம். விரும்பினால் கீழ் தரப்பட்டுள்ளவாறு குறித்த பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளரிடம் இருந்து அவரது தொடர்பு விபரங்களுடன் மேலதிக விபரங்களை பெற முடியும். தொ.பே.: 0652223195, 0644929928

| பணியின் பெயர் | பிரிவு | முகவரி | தொலைபேசி இல |
|---|---|---|---|
| ரூகம் பிரிவு, வாகனேரி திட்டத்தில் பீலிமடு பால cum Regulator மேம்பாடுகள் | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் (ரூகம்) | பதுளை வீதி, செங்கலடி | 065-2240485 |
| மட்டக்களப்பு, ரூகம் பிரிவில் வடமுனை திட்டத்தில் 0 + 336 நிலையத்தில் வீதியை அணுகும் LB பிரதான கால்வாய் கட்டு மேம்பாடுகள் | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் (ரூகம்) | பதுளை வீதி, செங்கலடி | 065-2240485 |
| ரூகம் பிரிவு, உன்னிச்சை திட்டத்தில் வைகாலடிச்சேனை அணைக்கட்டு மேம்பாடுகள் | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் (ரூகம்) | பதுளை வீதி, செங்கலடி | 065-2240485 |
| நவகிரி பிரிவு, கன்னியம்மை அணைக்கட்டு நவகிரி திட்டத்திற்கு வீதி அணுகல் மேம்பாடுகள் | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் (நவகிரி) | பிரதான வீதி களுவாஞ்சிக்குடி | 065-2250020 |
| நவகிரி பிரிவு, நவகிரி திட்ட, LB – 44A கால்வாயில் வீதியின் புனரமைப்பு | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் (நவகிரி) | பிரதான வீதி களுவாஞ்சிக்குடி | 065-2250020 |
| ரூகம் பிரிவு, ரூகம் திட்டம், கல்வன்கை நதியில் பிள்ளையாரடி அணைக்கட்டு/ ஒழுங்குபடுத்தல் மேம்பாடு | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் (ரூகம்) | பதுளை வீதி, செங்கலடி | 065-2240485 |

4. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகைமைக்கு மேலதிகமாக, வெற்றிகரமான விலைமனுதாரர் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப, சட்ட மற்றும் ஏனைய தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. ஒவ்வொரு தொகுதிக்காகவும் 4000.00 இ.ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023.08.28ஆம் திகதி தொடக்கம் 2023.09.18ஆம் திகதி வரை மு.ப. 9.30 மற்றும் பி.ப. 2.30 க்கு இடையே மட்டக்களப்பு, கல்லடி, நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், நீர்ப்பாசன பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து மட்டக்களப்பு, கல்லடி, நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக இருத்தல் வேண்டும்.

6. முறையாக பூர்த்தி செய்யப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023.09.18ஆம் திகதி பி.ப. 03.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு நீர்ப்பாசன பணிப்பாளர், நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், கல்லடி, மட்டக்களப்பு என்ற முகவரிக்கு இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மட்டக்களப்பு, கல்லடி, நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்பு பெட்டிக்கு இட வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் மட்டக்களப்பு, கல்லடி, நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

7. விலைமனு திறக்கப்படும் திகதிக்கு பின்னர் (விலைமனு செல்லுபடிக் காலம் மேலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது) விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும் என்பதோடு மட்டக்களப்பு, நீர்ப்பாசன பணிப்பாளரின் பெயருக்கு வரையப்பட்ட மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான தொகைக்கு விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் (விலைமனு பிணை செல்லுபடிக் காலம் மேலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது).

| மாவட்டம் | பணியின் பெயர் | தளப் பயண உதவிக்கான பிராந்திய பொறியியலாளர் | தள பயண திகதி மற்றும் நேரம் | விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு திகதி மற்றும் நேரம் | விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு இடம் |
|---|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | ரூகம் பிரிவு, வாகனேரி திட்டத்தில் பீலிமடு பால cum Regulator மேம்பாடுகள் | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் (ரூகம்) | 2023.09.05 அன்று மு.ப. 9.30 | 2023.09.05 அன்று பி.ப. 2.00 | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், கல்லடி, மட்டக்களப்பு |
| மட்டக்களப்பு | மட்டக்களப்பு, ரூகம் பிரிவில் வடமுனை திட்டத்தில் 0 + 336 நிலையத்தில் வீதியை அணுகும் LB பிரதான கால்வாய் கட்டு மேம்பாடுகள் | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் (ரூகம்) | 2023.09.05 அன்று மு.ப. 9.30 | 2023.09.05 அன்று பி.ப. 2.00 | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், கல்லடி, மட்டக்களப்பு |
| மட்டக்களப்பு | ரூகம் பிரிவு, உன்னிச்சை திட்டத்தில் வைகாலடிச்சேனை அணைக்கட்டு மேம்பாடுகள் | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் (ரூகம்) | 2023.09.05 அன்று மு.ப. 9.30 | 2023.09.05 அன்று பி.ப. 2.00 | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், கல்லடி, மட்டக்களப்பு |
| மட்டக்களப்பு | நவகிரி பிரிவு, கன்னியம்மை அணைக்கட்டு நவகிரி திட்டத்திற்கு வீதி அணுகல் மேம்பாடுகள் | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் (நவகிரி) | 2023.09.05 அன்று மு.ப. 9.30 | 2023.09.05 அன்று பி.ப. 2.00 | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், கல்லடி, மட்டக்களப்பு |
| மட்டக்களப்பு | நவகிரி பிரிவு, நவகிரி திட்ட, LB – 44A கால்வாயில் வீதியின் புனரமைப்பு | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் (நவகிரி) | 2023.09.05 அன்று மு.ப. 9.30 | 2023.09.05 அன்று பி.ப. 2.00 | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், கல்லடி, மட்டக்களப்பு |
| மட்டக்களப்பு | ரூகம் பிரிவு, ரூகம் திட்டம், கல்வன்கை நதியில் பிள்ளையாரடி அணைக்கட்டு/ ஒழுங்குபடுத்தல் மேம்பாடு | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் (ரூகம்) | 2023.09.05 அன்று மு.ப. 9.30 | 2023.09.05 அன்று பி.ப. 2.00 | நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், கல்லடி, மட்டக்களப்பு |

8. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மட்டக்களப்பு, கல்லடி, நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும் (மேலுள்ள அட்டவணையில் திகதி மற்றும் நேரம் தரப்பட்டுள்ளது). எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்கள் மேலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளரின் உதவியுடன் தளங்களை பரீட்சிப்பதற்கும் (மேலுள்ள அட்டவணையில் திகதி மற்றும் நேரம் தரப்பட்டுள்ளது) விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்பதற்கும் கோரப்படுகின்றனர்.

9. நீர்ப்பாசன திணைக்கள பிராந்திய பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானது மற்றும் முடிவானதாகும். தனது சொந்த விருப்பில் ஒன்று, ஏதேனும் அல்லது அனைத்து விலைமனுக்களையும் ரத்துச் செய்யும் அதிகாரம் நீர்ப்பாசன திணைக்கள பெறுகைக் குழுவிடம் உள்ளது.

**நீர்ப்பாசன பணிப்பாளர்**
**நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம்**
**கல்லடி,**
**மட்டக்களப்பு**

**திகதி: 2023.08.28**

எனது இல.:- ELDS/LND/08/ACQ/017-04

காணி அமைச்சரின் குறிப்பு இல:- 4-3/15/2017/VE/584

**1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

இங்கு கீழே காட்டப்பட்டுள்ள காணி அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்காக 2020ஆம் ஆண்டு சனவரி மாதம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெலிவந்த 2159/46 இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் III பகுதியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| பிர. இ. உ. பிரிவு | : எலபாத்த |
| கிராமம் | : மில்லவிட்டிய |
| அமைவிடம் | : சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், எலபாத்த பிரதேச செயலகப் பிரிவில், சமன்கம கிராம உத்தியோகத்தர் பிரிவில், மில்லவிட்டிய என்னும் கிராமத்தில் |
| காணியின் பெயர் | : மில்லவிட்டிய தோட்டம் |
| அடிப்படை திட்டப்பட இலக்கம் | : மு.கி.ப. 63, மேலதிக இலக்கம் 12 மற்றும் தாள் இலக்கம் 12ஐக் கொண்ட அளவைத் திட்டப்படம் |
| துண்டு இல. | : 175 |

**பிரதேச செயலாளர்**
**எலபாத்த பிரதேச**
**செயலகம்.**

# பெறுகை அறிவித்தல்

பன்னல பிரதேச சபைக்குச் சொந்தமான வார சந்தைகள், மீன் கடை, இறைச்சிக்கடை, பொது மலசலகூடம் மற்றும் ஏனைய சொத்துக்கள் 2024.01.01 முதல் 2024.12.31 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடும் முகமாக என்னால் கேள்விகள் கோரப்படும்.

**கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் -**
**2023.08.29 முதல் 2023.09.19 பி.ப. 2.00 வரை**

**கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் -**
**2023.09.20ம் திகதி பி.ப. 2.00 வரை**

**கேள்விப் பத்திரங்கள் திறத்தல் -**
**2023.09.20ம் திகதி பி.ப. 2.30 இற்கு**

கேள்வி விண்ணப்பங்கள் பன்னல பிரதேச சபை தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளல் முடிவதுடன், அதனுடன் வழங்கப்படும் கேள்விப் நிபந்தனைகளுக்கு இணங்க குறித்த கேள்வி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன், இது பற்றிய மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களில் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.

**தொலைபேசி இல: 037-2246069/ 037-2246442**

**கே.ஏ.எஸ். ஜயசிங்ஹ**
**செயலாளர்,**
**பிரதேச சபை, பன்னல.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.)

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு, நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

### மின் உருப்படிக்கான விலை மனுக் கோரல்

**கேள்வி இல:- PRDA/WP/PRO/2023/63**

இவ்வதிகார சபையின் கீழ்க்காணும் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும், அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | விபரம் | கேள்விப் பிணை (காசாக) | கேள்விப் பிணை (வங்கி/ இன்சூரன்ஸ்) |
|---|---|---|---|
| 01 | கம்பஹா தள வைத்தியசாலையின் On Call கட்டிடத்திற்காக | 11,500.00 | 23,000.00 |
| 02 | மினுவாங்கொட பஸ் நிலைய நிர்மாண செயற்றிட்டத்திற்காக | 11,000.00 | 22,000.00 |

**(மேற்படி கட்டிடங்களுக்குத் தேவையான மின்சார உருப்படிகள் பற்றிய தகவல்கள், வகை மற்றும் அளவுகள் கேள்வி ஆவணத் தொகுதியில் தரப்பட்டுள்ளன)**

**02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.08.28 முதல் 2023.09.11 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை இவ்வதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணை காசாக பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.**

**03. கேள்விப்படிவக் கட்டணம் ரூ. 1150.00 இற்கு (அதிகாரச் சபையின் பதிவு வழங்குநர்கள் தவிர்த்து) உட்பட்டு கேள்வி ஆவணத் தொகுதியை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.**

**04. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் மற்றுத் திறத்தல் 2023.09.12 பி.ப 2.30 இற்கு இவ்வலுவலகத்தில் இடம் பெறுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.**

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.),**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12**

**தொ.பே.இல: 011 4849825, 011 4849845**

## நிக்கவெரட்டிய பிரதேச சபை

# பெறுகை அறிவித்தல்

## 2024ஆம் வருடத்தின் பொருட்டு ஆதனங்களை குத்தகைக்கு விடுதல்

01. 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரையான காலத்தில் நிக்கவரெட்டிய பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஆதனங்களை குத்தகைக்கு விடுவதற்கான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| **விண்ணப்பப் படிவங்கள் வழங்குதல்** | : | 2023-09-01ஆம் திகதி முதல் 2024-09-19ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை |
| **விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம்** | : | 2023-09-01ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை |
| **விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்** | : | 2023-09-20ஆம் திகதி மு.ப. 10.35 மணிக்கு நிக்கவெரட்டிய பிரதேச சபை அலுவலகத்தில் |

02. கேள்விப் படிவக் கட்டணத்தைச் செலுத்தி இந்த அலுவலகத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் மூலம் மட்டுமே கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டணங்கள் ரொக்கப் பணத்தில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
03. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் வழங்கப்படும் என்பதுடன் அவ்விரு பிரதிகளையும் வெவ்வேறு உறைகளில் இட்டு கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரை பொறித்து செயலாளர், பிரதேச சபை, நிக்கவெரட்டிய எனும் முகவரிக்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் பதிவு தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
04. சகல இறைச்சி, மீன் கடைகளை கொள்வனவு செய்யும் கேள்விதாரர்கள் இறைச்சி மீன் விற்பனையின் பின் மிகுதியாகும் கழிவுப்பொருட்களை இயைபுடைய கேள்விதாரரினாலேயே அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
05. விபரங்களை அலுவலக நேரத்தினுள் வருகை தந்தோ அல்லது 037-2260275 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாவோ பெற்றுக்கொள்ளலாம்.
06. எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரத்தை கேள்விச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**செயலாளர்,**
**எச்.எம்.எம்.பி. ஹேரத்,**
**பிரதேச சபை, நிக்கவெரட்டிய.**

**2024ஆம் வருடத்தில் குத்தகைக்கு வழங்கப்படவுள்ள ஆதங்களின் அட்டவணை**

| தொ. இல. | ஆதனம் | 2024ஆம் வருடத்திற்கான குறைந்த பட்ச கேள்வித் தொகை (ரூபா) | மீளளிக்கப் படும் விலை மனுப் பிணை (ரூபா) | மீளளிக்கப் படும் விலை மனுப் பிணை 2.5% | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | நிகவெரட்டிய பொதுச் சந்தை 01ஆம் இலக்க கடல் மீன் கடை | 198,000.00 | 15,840.00 | 4,950.00 | 5,000.00 |
| 2 | நிகவெரட்டிய பொதுச் சந்தை 02ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடை | 550,000.00 | 27,500.00 | 13,750.00 | 5,000.00 |
| 3 | நிகவெரட்டிய பொதுச் சந்தை 03ஆம் இலக்க கோழியிறைச்சிக் கடை | 220,000.00 | 17,600.00 | 5,500.00 | 5,000.00 |
| 4 | நிகவெரட்டிய பொதுச் சந்தை 04ஆம் இலக்க கடல் மீன் கடை | 198,000.00 | 15,840.00 | 4,950.00 | 5,000.00 |
| 5 | நிகவெரட்டிய பொதுச் சந்தை 05ஆம் இலக்க கடல் மீன் கடை | 198,000.00 | 15,840.00 | 4,950.00 | 5,000.00 |
| 6 | நிகவெரட்டிய பொதுச் சந்தை 06ஆம் இலக்க குளத்து மீன் கடை | 199,980.00 | 15,998.40 | 4,999.50 | 5,000.00 |
| 7 | நிகவெரட்டிய பொதுச் சந்தை 07ஆம் இலக்க குளத்து மீன் கடை | 199,980.00 | 15,998.40 | 4,999.50 | 5,000.00 |
| 8 | நிகவெரட்டிய பொதுச் சந்தை பன்றியிறைச்சிக் கடை | 154,000.00 | 12,320.00 | 3,850.00 | 5,000.00 |
| 9 | நிகவெரட்டிய பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 82,500.00 | 8,250.00 | 2,062.50 | 5,000.00 |
| 10 | வாரச் சந்தை 01ஆம் இலக்க கோழியிறைச்சிக் கடை | 55,000.00 | 5,500.00 | 1,375.00 | 5,000.00 |
| 11 | வாரச் சந்தை 02ஆம் இலக்க பன்றியிறைச்சிக் கடை | 55,000.00 | 5,500.00 | 1,375.00 | 5,000.00 |
| 12 | வாரச் சந்தை 03ஆம் இலக்க கடல் மீன் கடை | 55,000.00 | 5,500.00 | 1,375.00 | 5,000.00 |
| 13 | வாரச் சந்தை 04ஆம் இலக்க கடல் மீன் கடை | 55,000.00 | 5,500.00 | 1,375.00 | 5,000.00 |
| 14 | வாரச் சந்தை 05ஆம் இலக்க கடல் மீன் கடை | 55,000.00 | 5,500.00 | 1,375.00 | 5,000.00 |
| 15 | வாரச் சந்தை 06ஆம் இலக்க குளத்து மீன் கடை | 55,000.00 | 5,500.00 | 1,375.00 | 5,000.00 |
| 16 | வாரச் சந்தை 07ஆம் இலக்க குளத்து மீன் கடை | 55,000.00 | 5,500.00 | 1,375.00 | 5,000.00 |
| 17 | வாரச் சந்தை 08ஆம் இலக்க குளத்து மீன் கடை | 55,000.00 | 5,500.00 | 1,375.00 | 5,000.00 |
| 18 | நிக்கவெரட்டிய பஸ் தரிப்பிட மலசலகூடம் | 277,750.00 | 22,220.00 | 6,943.75 | 5,000.00 |
| 19 | வாரச் சந்தை மலசலகூடம் | 66,000.00 | 6,600.00 | 1,650.00 | 5,000.00 |
| 20 | மட்டக்குளம் மாட்டிறைச்சிக் கடை | 138,600.00 | 11,088.00 | 3,465.00 | 5,000.00 |
| 21 | ஆபொக்காகம மாடிட்டிறைச்சிக் கடை | 369,600.00 | 29,568.00 | 9,240.00 | 5,000.00 |
| 22 | கனுக்கெட்டிய மாட்டிறைச்சிக் கடை | 385,000.00 | 30,800.00 | 9,625.00 | 5,000.00 |
| 23 | நம்முவாவ மாட்டிறைச்சிக் கடை | 115,500.00 | 9,240.00 | 2,887.50 | 5,000.00 |
| 24 | நிக்கவெரட்டிய பொதுச் சந்தை மேல் மாடி சிற்றுண்டிச்சாலை | 64,020.00 | 6,402.00 | 1,600.50 | 5,000.00 |
| 25 | நிக்கவெரட்டிய வாரச்சந்தை வாகனத் தரிப்பிடம் | 285,780.00 | 22,862.40 | 7,144.50 | 5,000.00 |
| 26 | நிக்கவெரட்டிய பஸ் நிலையத்தில் பஸ்களை நிறுத்தும் கட்டணங்களை அறவிடல் | 1,573,000.00 | 78,650.00 | 39,325.00 | 5,000.00 |
| 27 | வாரச்சந்தை வெற்றிலை மொத்த சந்தை | 378,750.00 | 30,300.00 | 9,468.75 | 5,000.00 |
| 28 | நேபடாவ மீன் தட்டு | 68,640.00 | 6,864.00 | 1,716.00 | 5,000.00 |
| 29 | ரஸ்நாயக்கபுர மீன் தட்டு | 39,600.00 | 3,960.00 | 990.00 | 5,000.00 |
| 30 | நிக்கவெரட்டிய வாரச்சந்தை | 5,460,000.00 | 218,400.00 | 136,500.00 | 5,000.00 |
| 31 | கொல்லன்தழுவ மாட்டிறைச்சிக்கடை | 125,000.00 | 10,000.00 | 3,125.00 | 5,000.00 |

**செயலாளர்,**
**எச்.எம்.எம்.பி. ஹேரத்,**
**பிரதேச சபை, நிக்கவெரட்டிய.**

**Repeat Your ad For Better Offers**

## பெருந்தோட்ட அமைச்சு

# இலங்கைத் தேயிலைச் சபை

## விலைமனுக்கோரல் (IFB)

### SUV வாகனங்கள் இரண்டு வழங்குவதற்கான கேள்விக்கோரல்
### ஒப்பந்த இலக்கம் : PROC/MOTORVH/TC/SLTB/23

கொழும்பு 03, காலி வீதி இல-574 இல் அமைந்துள்ள இலங்கை தேயிலை சபை பெறுகைக் குழுவின் தலைவரினால், **2023.09.19 ஆம் திகதி பி.ப.2.00** மணி வரை 4 சக்கர டிரைவ் SUV வாகனங்கள் வழங்குவதற்காக புகழ்பெற்ற / அங்கீகரிக்கப்பட்ட வழங்குனர்கள் விநியோகஸ்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

**தகுதி வரம்பு**

1. மனுதாரர் இலங்கையின் வணிகப் பதிவினைப் பெற்றிருக்க வேண்டும்.
2. வாகனம் 2016.01.01 வருடத்திற்கு க்குப் பிறகு தயாரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்
3. கீழே உள்ள தொழில்நுட்ப விவரக்குறிப்புகளின்படி SUV களை வழங்க முடியும்.

| | | |
|---|---|---|
| Engine Capacity | SUVs | 1600CC (Minimum)<br>Electric Vehicle - Not below 80KW |
| Fuel/Engine Type | SUVs | Diesel/Petrol/Hybrid |
| Transmission Type | SUVs | Manual/Auto |
| Wheel Type | SUVs | 04 Wheel |

4. குத்தகைதாரர், இலங்கையில் புகழ்பெற்ற வாகனப் பிராண்டுகளின் வாகன முகவராக அல்லது குறைந்தபட்சம் 10 வாகனங்களை வாடகைக்கு வழங்கும் நிறுவனம் அல்லது இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனத்தின் உரிமையாளராக இருத்தல் வேண்டும்.

**மனுக்களின் மதிப்பீடு**

தரம் மற்றும் செலவு அடிப்படையிலான தேர்வு (QCBS)

1. மனுதாரர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ.3000/- ஐ செலுத்தி தமது உத்தியோகப்பூர்வ கடிதத்தின் மூலம் வேண்டுகோளளிப்பதால் 2023.08.28 ஆம் திகதி முதல் ஒரு மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரியில் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். சகலவிதமான கொடுப்பனவுகளும் இல.574, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கைத் தேயிலைச் சபையின், நிதிப் பிரிவின் பொருளாளரிடம் செலுத்தப்பட வேண்டியதுடன், பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் முதற் பிரதியை இணைத்து 2023.09.13 ஆம் திகதி வரை மு.ப 10.00 முதல் பி.ப 3.00 மணிக்கு இடையில் இல.574, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கைத் தேயிலைச் சபையின் பிரதான காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளும் மனு ஆவணங்களின் சமர்ப்பிக்க வேண்டும். மனுக்களை முன்வைக்க வேண்டியது இலங்கைத் தேயிலைச் சபையில் பெற்றுக்கொண்ட ஆவணங்கள் மூலமாக மாத்திரமேயாகும். தேயிலைச் சபையின் www.srilankateaboard.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவும் மேற்குறிப்பிட்ட திகதிவரை மனுஆவணங்களை இலவசமான பரீசீலனை செய்ய முடியும்.
2. மனுக்கள் முடிவடையும் திகதியிலிருந்து **120 நாட்களுக்கு** செல்லுபடியாகும். SUV வாகனம் 02 க்கான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் இலங்கைத் தேயிலைச் சபையின் தலைவரின் பெயருக்குப் பெற்றுக்கொண்ட ரூ.360,000/- பெறுமதியான மனுப்பாதுகாப்பு தொகையுடன் மனுக்களை முன்வைக்க வேண்டும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாளிலிருந்து **148 நாட்கள்** வரை செல்லுபடியாகும்).
3. மனுக்களின் **“அசல்”** மற்றும் **“நகல்”** பிரதிகளை கடித உறையலிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் “2023 **ஆம் ஆண்டுக்காக இலங்கைத் தேயிலைச் சபைக்கு மோட்டார் வாகனங்களை வழங்குதல்”** எனக்குறிப்பிட்டு 2023.09.19 **ஆம்** திகதி பி.ப 2.00 **மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் **தலைவர், கொள்முதல் குழு, இல.574, காலி வீதி, கொழும்பு 03** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும்.
4. மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த பின்னர், **இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03, கொள்முதல்** பிரிவில் மனுக்கள் திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதநிதிகள் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.
5. கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03, **(தொலைபேசி: 011-2582121, நீடிப்பு : 1120)** இது தொடர்பிலான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
6. மனுப் பிரதிகள் இரண்டுடன், மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள SUV வாகனத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் பெற்றுக்கொண்ட ரூ.360,000/- பெறுமதியான மற்றும் மனுக்கள் திறக்கப்பட்ட நாளிலிருந்து **120 நாட்களுக்கு** செல்லுபடியாகும் மனுப் பாதுகாப்புடன் **தலைவர், கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும்.
7. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03 இல் பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி 011 2587814, 2586863, 2582122)

**தலைவர்,**
**கொள்முதல் குழு,**
**இலங்கைத் தேயிலைச் சபை,**
**இல.574, காலி வீதி,**
**கொழும்பு 3.**

Daily News Classifieds, the Housewives' companion

## பெறுகை அறிவித்தல்
### குளியாப்பிட்டிய பிரதேச சபை

2024ஆம் ஆண்டிற்காக குளியாப்பிட்டிய பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு விடல் முதலாம் கட்டத்திற்காக 2023.08.28 முதல் 2023.09.27 மு.ப. 10.00 வரை என்னால் கேள்விகள் ஏற்கப்படுவதுடன் அன்றே மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்கள் 2023.08.28 முதல் 2023.09.26 வரை பிரதேச சபை அலுவலகத்தில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக் கொள்ளலாம். குறித்த விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளும் போது சபையினால் குத்தகை வழங்கப்படும் சொத்துக்கள் அட்டவணை மற்றும் கேள்வி நிபந்தனைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

2024ம் ஆண்டிற்காக சொத்துக்களை குத்தகைக்கு பெறும்போது மேற்படி கேள்வி, நிபந்தனைகளுக்கு அமைவாக செயற்படுவதற்கு விண்ணப்பதாரிகள் இணங்குதல் வேண்டும்.

2.1 கேள்விப் படிவங்கள் விநியோகிக்கும் இறுதித் திகதி - 2023.09.26 பி.ப. 3.00 வரை
2.2 கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் - 2023.09.27 மு.ப. 10.00 வரை
2.3 கேள்விப் பத்திரங்கள் திறத்தல் - 2023.09.27 மு.ப. 10.30 இற்குப் பின்னர்

(கேள்வி விண்ணப்பதாரிகள் 2023.09.26 பி.ப. 3.00 இற்கு முன்பு குறித்த கட்டணங்களைச் செலுத்தி கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் பி.ப. 3.00 இற்குப் பின்னர் கேள்விப் படிவங்கள் விநியோகித்தல் நிறுத்தப்படும்)

மேலதிக விபரங்களுக்கு கீழ்காணும் தொ.பே. இலக்கங்களில் விசாரியுங்கள்.
037-2281265, 037-4947212 - அலுவலகம்
037-4947233- வருமானப் பிரிவு

**2023.08.22ம் திகதி**
**குளியாப்பிட்டிய பிரதேச சபை அலுவலகத்தில்**

**செயலாளர்**
**குளியாப்பிட்டிய பிரதேச சபை**

## அறிவித்தல்
### ஹப்புத்தளை நகர சபை
### பொதுமக்களிடம் அபிவிருத்தி முன்மொழிவுகளை கோரல்

2024 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டத்திற்கு உள்ளடக்குவதற்காக, ஹப்புத்தளை நகர சபை அதிகார எல்லை சார்ந்த பொதுமக்களிடம் இருந்து முன்மொழிவுகளை கோர நகர சபை தீர்மானித்துள்ளது.

அதனால் உங்களது முன்மொழிவுகளை 2023 செப்டெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், நகர சபை, ஹப்புத்தளை என்ற முகவரிக்கு தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைக்கும்படி கோரப்படுகிறது.

**செயலாளர்,**
**நகர சபை,**
**ஹப்புத்தளை.**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
நீர்ப்பாசன அமைச்சு

MWSIP

## மஹாவலி நீர்ப் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டம் (MWSIP)
### திட்ட முகாமைத்துவ பணிமனை (PMU)

நிதியிடல்: ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) - Loan 3267-SRI/3268-SRI – Tranche 1

## விலைமனுக்களுக்கான அழைப்பு
(திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்)

### தானியங்கி உள்ளடங்களாக மினிபே வலதுகரை கால்வாயின் தலையாய வேலைகளை மேம்படுத்துதல்

**(Improvements to Minipe Right Bank Canal Headworks including Automation)**

**MI/MWSIP/ADB/WORKS/MLBCRP-6/NCB/2022/050**

2023-08-07ஆம் திகதி பிரசுரமான மேற்கூறப்பட்ட வேலைகளுக்கான விலைக்கோரலுக்கான அழைப்பில் பின்வருமாறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் மற்றும் நேரம் 2023-09-14ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை (உள்ளூர் நேரம்) நீடிக்கப்பட்டுள்ளது.

விலைமனுக்களை 2023 செப்டெம்பர் 14ஆம் திகதி மு.ப. 11.00 மணி (உள்ளூர் நேரம்) அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் மற்றும் அதன்பின் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**திட்ட முகாமைத்துவ பணிமனை (PMU),**
**மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (MWSIP),**
**இல. 493 1/1, T.B. ஜயா மாவத்தை,**
**கொழும்பு-10, இலங்கை.**

**தொலைபேசி இல. : +94 11 2675810**
**தொலைநகல் இல. : +94 11 2675227**
**மின்னஞ்சல் முகவரி : ebid.mwsip@gmail.com**

## இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவனம்
### கைத்தொழில் அமைச்சு

### நிறுவனத்தின் ஊழியர் குழாமிற்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக வேன் இற்கான விலைமனுக் கோரல்

எமது நிறுவனத்தின் ஊழியர் குழாமின் போக்குவரத்திற்காக கீழ்க் காணுமாறு இரட்டை வளிச் சீராக்கப்பட்ட வேன் தேவைப்பட்டுள்ளது.

01. ஆசனங்களின் எண்ணிக்கை 08
